646
JL
m211,n53HA
N53·1·8
197202

அழகுக்கு அழகு செய்யும்

ஆபரணங்களின் உறைவிடம்

T. கோவிந்தராஜுலு நாயுடு

வைரம், பொன் நகைகள், வெள்ளி சாமான்கள் வியாபாரம்

28, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோட்,

மதராஸ்-1.

Telephone : 4818 Grams : 'ALANKAR'

Grams : "HAMSA"

Phones : { 2489 Office
86131 Residence }

For A. C.

31 MAY 1954

TRAFFORD & PLAIN SHEETS

ALSO

A. C. RAIN WATER PIPES & A.C.C. CEMENT

M. KUPPUSWAMY NAICKER

STOCKIST : ASBESTOS CEMENT LTD.,

15, SEMBUDOSS STREET - MADRAS-1.

For Cement Concrete products for Building requirements, such as Window & Door frames, Beams Sunshades, Fencing Posts, Compound Walls, Water Closets, etc., also for Kitchen requirements like Ovens, Water tanks, etc.

PLEASE CONTACT :

THE CEMENT CONCRETE WORKS

Proprietor : M. KUPPUSWAMY NAICKER

WESTCOTT ROAD - ROYAPETTAH - MADRAS

Phone : 85802

When **ASTHMA** attack is imminent use

MULTIMIX

Indo-French Pharmaceutical Co.,

P. B. No. 1542. MADRAS-1.

USE ALWAYS

KANGARU FEEDER

A TRIAL WILL CONVINCE YOU

DISTRIBUTORS :

HINDUSTAN TRADING COMPANY

MADRAS-1.

மூன்று சிறந்த ஔஷதங்கள்.

(ஒவ்வொரு வீட்டிலும் அவசியமாய் இருக்கவேண்டியது)

ஜாமா ஆயில்

ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு

★

ஜாமா றப்

ஜலதோஷம், தலைவலி முதலியவைகளுக்கு

★

ஜாமா இன்ஹேலர்

ஜலதோஷத்திற்கு

Grams : "ZAMA" Estd : 1900 Phone : 2182

Amarchand Sobachand

POST BOX 518.

95, NAINIAPPA NAICKEN STREET, MADRAS-3.

ஆண்மையுள்ள ஆண்களையே பெண்கள் விரும்புவார்கள்

மனோவலிமையை இழக்காதீர்கள்.

டிரிடோன் டிலாய் (ஆண்களுக்கு)

இது உயர்ந்த மூலிகைகளினால் தாயாரிக்கப்பட்ட ஓர் அரிய டானிக். ஆண்களுக்குண்டான சகலவிதமான நோய்களையும் முக்கியமாக ஆண் குறி வளராதிருத்தல். சம்போக இச்சையின்மை முதலியவைகளை நீக்கி உடனே குணமாகிறது ரூ. 5.

எண்டிமோ பில்ஸ்

(நரம்புச் சக்திக்கும், நரம்புத்தளர்ச்சிக்கும் உலகப் புகழ் பெற்ற மருந்து)

ஆண் குறி இளைத்து செயலற்றுப்போதல், நரம்புத் தளர்ச்சி, தாது நஷ்டம், சுக்கிலத்தில் ஜீவக்கிருமிகள் இல்லாமை, சம்போகத்தில் அயர்வு, பெண்கள்மேல் இச்சையில்லாதிருத்தல் இவைகளுக்குக் கைகண்ட மருந்து.

32 மாத்திரைகள் கொண்ட பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

AMERICAN MEDICAL HALL (U. M. T.)

KHUNIPUL, MEERUT.

BIRTH CONTROL

Rubber goods for Ladies and Gents

GENTS.	Per Doz.	Rs.	As.
Filco F. L.	" "	4	0
Silco U. S. A.	" "	5	4
Washable F. L.	" "	7	8
Lightex British	" "	8	4
Premox U. S. A.	" "	10	0
Crocodile F. L.	" "	13	8
American Tips	" "	5	8
LADIES.	EACH	Rs.	As.
Check Pessary	"	2	0
Neeto Tablets (tube)	"	3	0
Sponge Ball	"	1	0
B. C. Jelly	"	1	12

Woman's Most difficult problem solved. PULS CAPS (U. S. A.) is an unfailing cure for Female Irregularities and DELAYED MENSES for any reason, give desire result 3 to 4 days. **Rs. 6/.**

PULS CAPS (Special) Gives desired result within 24 hours.

Warning. On no account to be used during pregnancy as they cause abortion and miscarriage.

V. P. STORES

(U. M. T.) P.B. 51, MEERUT

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: **ர. சண்முகம்**

செடி 1 மலர் 8	டிசம்பர் 1953	விஜய ௵ கார்த்திகை ௴

பொருளடக்கம்

ராஜாஜியின் கட்சி !	தலையங்கம்	... 9
நாமும் நீங்களும்		... 10
கள்ளும் காமமும் !	மேலட்டைச் சித்திரம்	 10
மலர்ந்த முகம் !	'பதி'	... 11
மனோரமாவின் மனமாற்றம் !	சண்முகம்	... 13
ஒலி பெருக்கி	ஆர். பி. மல்லாரி	... 23
தாம்பத்யம்	நா. ஜகந்நாதன்	... 27
புலி வந்தது	ரா. ஆறுமுகம்	... 35
சோகச் சிலை	மயிலன்	... 45
எழில் குலுங்கும் காஷ்மீரம்	சுகுமாரன்	... 51
பழியும் பரிவும்	கோரா	... 57
பொல்லாத மானேஜர்	கே. ஆர். கௌஸல்யா	 65
அபாய விளையாட்டு	லா. ப. கோஸ்தா (உலக இலக்கியம்)	 74

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கலைவாணி

ஒரே கோட்டினால் வரையப்பட்ட சித்திரம்.

ஓவியர் : டி. வி. ரங்கசாமி (ரகமி)

197202

ராஜாஜியின் கட்சி!

இப்படி ஒரு கட்சியும் அதை ஆதரிக்க ஒரு கூட்டமும் நிச்சயம் இருக்கத்தான் செய்கிறது. அதில் சந்தேகமே இல்லை.

இந்தக் கட்சி யாருக்கும் விரோதியல்ல; எந்தக் கட்சிக்கும் எதிர்க் கட்சியல்ல. ஆனால் இக்கட்சி ராஜாஜியை விரும்புகிறது. அவர் பதவியில் இருப்பதால் பயனுண்டு, பயமில்லை என்று நினைக்கிறது.

இந்தக் கட்சியின் உறுப்பினர்கள் தான் பொது மக்கள். அரசியல் குட்டையில் இறங்கி அதைக் கலக்கிக் கொண்டிருக்கும் திருவிளையாடலில் ஈடுபடாமல் தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்து வாழும் பாமர மக்கள்.

ராஜாஜி மீது மக்களுக்கு இந்தப் பாசம் ஏற்படக் காரணம் என்ன? வயதான பெரிய மனிதர் என்ற காரணத்தாலா! நீண்ட நாளைய அரசியல் வாதி என்ற எண்ணத்திலா; இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார் என்ற தகுதியிலா...?

இந்தச் சரித்திரப் புள்ளி விவரங்களைப் பற்றி சிந்திக்க பாமர மக்களுக்கு நேரம் ஏது...?

யார் யாரோ மந்திரிகளாக வருகிறார்கள்; என்னென்னவோ செய்கிறார்கள். மந்திரிகளை பொது மக்களால் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. ஆனால் மந்திரிகளின் செயல்களை மட்டும் அவர்கள் சந்திக்கிறார்கள்.

ராஜாஜி அரசியலில் தங்களுக்காக சாதித்த அரிய பெரிய சாதனைகளைக் கண்ட மக்கள் எதிர் காலத்துக்கும் அவரை நம்புகின்றனர்; அவரை ஆதரிக்கின்றனர். ஆட்சி பீடத்தில் திடீரென ஆள் மாற்றம் வேண்டுமென்ற கூக்குரல் எதற்காக எழுகிறது என்றே அவர்களுக்குப் புரியவில்லை.

அரசாங்க நிர்வாகம் வயதானவர்களிடமிருந்து இளைஞர்களிடம் மாற வேண்டும் என்பது வேறு விஷயம். இதை மறுத்து வயதானவர்கள்தான் அரசில் இருக்க வேண்டுமென ராஜாஜி கூறவில்லை,

ராஜாஜி சில காரியங்களை பிறரைக் கலக்காமல் தானே செய்கிறார் என்பதும் வேறு விஷயம். அப்படி அவர் செய்யும் காரியங்கள் பொது மக்களுக்கு தீமையை விளைவிக்கவில்லை; மாறாக நன்மையே விளைவித்திருக்கிறது.

ஆகவே ராஜாஜியை யார் எதிர்க்கிறார்கள் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. பொது மக்கள் அவரை ஆதரிக்கிறார்கள்; அவர் சேவையை விரும்புகிறார்கள்.

நாமும் நீங்களும்

வணக்கம். தீபாவளி மலரை பாராட்டி வந்துள்ள ஏராள மான கடிதங்கள் எதிர்பார்க் கப்பட்டவைதான். இந்தப் பாராட்டுதல்களின் மூலம் தமி ழர்கள் தங்களைத் தாங்களே தான் பாராட்டிக் கொள்கின்ற னர். ஏனெனில் 'உமா' தமிழர் களின் சொத்து; செல்வக் குழந்தை! எனினும் உங்கள் ஊழியர்கள் என்ற முறையில் எங்கள் நன்றியை எல்லோருக் கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாராட்டுகளைப் பெற்ற அதே நேரத்தில் நூற்றுக் கணக்கான கோபக் குரல்களுக்கு நாங்கள் ஈடு கொடுக்கவேண்டி நேரிட்டி ருக்கிறது. வழக்கமாக பதிப்பிக் கும் பிரதிகளைவிட ஒரு மடங்கு அதிகமான பிரதிகளை அச்சிட் டும் அது மக்களின் அறிவுப் பசிக்குமுன் கடலில் பெருங் காயம் கரைத்தது போலாகி விட்டது. ஏராளமான வாசகர் கள் தீபாவளி மலரைப் பெற முடியாமல் ஏற்பட்ட ஆத்திரத் தில் சரமாரியாகக் கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கின் றனர். இவ்வளவு அருமையான மலரை இன்னும் கொஞ்சம் அதிகம் அச்சிட்டு எங்கள் தேவைகளை பூர்த்தி செய்திருக் கக்கூடாதா என்று மனம் புழுங்கி எழுதியுள்ளனர். நடந்துபோன சில எதிர்பாராத நெருக்கடிக்கு பிராயச்சித்தம் செய்வதன் மூலம்தான் வாசகர் களைத் திருப்திபடுத்த முடியும். ஆகவே ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியை மக்களுக்கு அர்ப் பணிக்கிறோம்.

ஜனவரி மாத இதழை பொங் கல் மலராக வெளியிடுவது என்று தீர்மானித்திருக்கிறோம். தீபாவளி மலரைவிட ஒரு மடங்கு அதிகமான சிறப்புடன் ஏராளமான பக்கங்களில் மலர் வெளியாகும். விலை எட்டணா தான். மலர் ஜனவரி மாதம் 12-ம் தேதியன்றே மக்கள் கையில் தவழுவதற்கான ஏற் பாடுகளை செய்து வருகிறோம். தயவு செய்து வாசகர்கள் — ஏஜண்டுகள் தேவையை கொஞ் சம் முன்னதாக தெரிவிக்கவும்.

ஆசிரியர்.

மேலட்டைச் சித்திரம் :

கள்ளும் காமமும் !

கள் போதையை ஊட்டுகிறது, நினைவைத் தடுமாற வைக் கிறது; வெற்றி வீரனின் கலங்காத உள்ளத்தையும், அறிவாளி யின் ஆழங்காண முடியாத மனதையும் அது ஒரு வினாடியில் கலக்கி அவர்களைக் குழந்தைகளாக்கிவிடுகிறது. காதலும் இத் தகைய விநோத வேறுபாடுகளை எல்லாம் உண்டாக்கும் தன்மை பெற்றது தான். ஆனால் கள்ளை உண்டால் மட்டுமே அதன் சக்தி வேலை செய்யத் தொடங்கும். மணிக்கணக்கில், நாட் கணக்கில் கள்ளைக் கையிலேந்தி நின்றாலும்; பழைய அனுப வத்தை நினைத்துக் கொண்டாலும் அது யாரையும் பாதித்து விடாது. ஆனால் காதல் அப்படிப்பட்டதல்ல. முன் அனுபவித்த இன்பத்தை இலேசாக மனதில் எண்ணினால் போதும்; அந்த இன்ப நினைவே போதையை உண்டாக்கி; மனதைத் தடுமாற வைத்து அலைக்கழித்து விடுகிறது. ஆகவே கள்ளைவிடக் காதலே (காமமே) பெரிது; இனியது என்று தீர்மானிக்கிறார் தமிழ் மறை தந்த வள்ளுவர்.

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது

—குறள்.

மலர்ந்த முகம்!

அன்புடைய தம்பி,

வேலைத் தொந்தரவில் சென்ற முறை உனக்குக் கடிதம் எழுத வாய்ப்பின்றிப் போய்விட்டது. இந்த இடைவேளை ஒரு வகையில் நல்லது என்றே கருதுகிறேன்.

உலகத்தில் வெகு சீக்கிரத்தில் சலிப்புத் தரக்கூடியது பிறர் தரும் புத்திமதிகள் தான் என்று சொல்வார்கள். ஒரு வேளை தொடர்ந்து நான் கூறும் புத்திமதிகள் உனக்குச் சலிப்பை உண்டாக்கியிருந்தால் இந்த இடைவேளை அதை ஒரு சிறிது போக்கியிருக்குமல்லவா! சும்மா விளையாட்டுக்காகத்தான் கூறுகிறேன். உன் மீது குற்றம் சாட்டுவதாகப் பயந்து போய்விடாதே.

இந்தத் தடவை என் கடிதத்தின் முறையில் சிறு மாறுதல் செய்ய இருக்கிறேன். மாறுதல் என்றால் வழக்கமாக உனக்குக் கூறும் விஷயத்தில் சிறு மாறுதல்தான்; மற்றபடி உனக்குப் பயனுள்ள விஷயமே.

இவ்வளவு நாட்களாக நான் உனக்கு கூறியவை வாழ்க்கையில் நீ முன்னேறுவதற்கான வழிகளாகும். இப்போது நான் சொல்ல இருப்பது உன் வாழ்க்கையின் வெற்றிக்கான சில ரகஸியங்கள். வழி வகைகளுக்கும் ரகஸியங்களுக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது.

வழி வகைகள் உழைப்பின் அடிப்படையானவை; ரகஸியங்கள் புத்திசாலித்தனத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆகவே சில ரகஸியங்களை நீ புரிந்து கொள்ளும் போதுதான் உன் பாதையில் நீ வெற்றியை சந்திக்க இயலும்.

''மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்'' என்று ஒரு பழமொழி கூறுவார்கள். இது மிகவும் ஆழம் நிறைந்த தத்துவம் ஒன்றைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு நிற்கிறது. வாழ்க்கையில் மலர்ந்த முகம் ஒரு லட்சிய ரகஸியமாகும்.

வாழ்வில் நாம் உயர்வும், சுகமும் அடைய, நம்மைப்போன்ற மற்ற மனிதர்களின் உதவியும் ஆதரவும் நமக்கு அவசியம் தேவை. மற்றவர்களின் அனுசரணை அறவே இன்றி தன்னந்தனியாக இந்த உலகில் யாராலும் எதையும் சாதித்துக் கொள்ள முடியவே முடியாது. ஆனால் இப்படி நம்மைச் சூழ்ந்து நிற்போரின் ஆதரவைத் தேடுவது சாமானிய விஷயமல்ல. இதைவிடச் சிக்கலானது வேறு ஒன்றுமே இல்லை.

பொழுது விடிந்து பொழுது போனால் நாம் எத்தனையோ ரகமான குண மாறுதல்கள் உள்ளவர்களை சந்திக்கிறோம். ஒவ்வொருவருடைய மனப்பண்பும் நாளடைவில்தான் புரிந்து கொள்ள முடியும். அவர்களுடைய நடைமுறை வழக்கங்கள் நிச்சயம் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி மாறுபட்டு இருக்கும். அவர்கள் எல்லோருடைய ஆதரவையும், உதவியையும் நீ பெறவேண்டுமானால் நீ எல்லோருக்கும் நல்லவனாகப் பழகக் கற்றுக்கொள்ள வேண்டும். இது முழுக்க முழுக்க சாத்தியப்

படுமா என்றால் முடியாதுதான். நம்முடன் பழகுபவர் விரும்பத்தகாதவராகவும், நல்ல குணங்களைப் பெற்றிராதவராகவும் இருந்துவிட்டால் முகம் சுளித்து அவரை வெறுத்து ஒதுக்கிவிடக் கூடாது. அவருடனும் நெருங்கிப் பழக வேண்டும். அப்படிப் பழகும்போது நம் மனதில் தோன்றும் விருப்பு வெறுப்புக்கள் வெளித்தோன்றக் கூடாது. அப்போதுதான் முகத்தில் மலர்ச்சியை சிரமப்பட்டு உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும். பழகுபவர் குணங்கள் நமக்குப் பிடிக்காமல் இருக்கும்போது, சுய நலத்துக்காக அவரிடம் முகமலர்ச்சியுடன் இருப்பதுபோல பகட்டாக நடிக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. உண்மையாகவே அவருடைய தீய குணங்களை மறந்துவிட்டு இதயம் கலந்த மலர்ச்சியுடன் அவருடன் பழக வேண்டும். அவருடைய நல்ல குணங்களை மட்டும் நாம் பெரிதும் பாராட்ட வேண்டும். அந்த குணங்களின் அடிப்படையில் அவர்களை நம்ப வேண்டும். நம்மிடம் அவர்களுக்கு நம்பிக்கை விழச் செய்ய வேண்டும். இப்படிச் செய்யும் போது அவர்களிடமுள்ள நல்ல சக்திகளின் ஒத்துழைப்பு மட்டும் நமக்கு கிடைக்கும்.

யாரிடமும் அர்த்தமின்றி அவநம்பிக்கைக் கொள்ளக்கூடாது. ஒருவன் சில இடங்களில் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டான் என்று நமக்குப் புரிந்திருந்தால் அதைக் கொண்டு அவன் எல்லா இடங்களிலும் அப்படித்தான் இருப்பான் என்று நினைத்து அவனை அறவே ஒதுக்குவதைவிட முட்டாள் தனம் வேறு இல்லை.

எந்த மனிதனும் இயற்கையில் கெட்டவனாக இருப்பதில்லை. எந்த மனிதனும் குற்றம் என்றும், தவறு என்றும் புரிந்துக் கொண்டு, வேண்டுமென்றே தவறுவதோ, குற்றமிழைப்பதோ கிடையாது. ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்யப்போக அது தீமையில் முடியும்போது, சமுதாயம் வெறுத்து ஒதுக்குமே என்ற பயத்தால் மனிதன் தன் முதல் தீமையை மறைக்க, மேலும் மேலும் தவறுகளைச் செய்துகொண்டே போகிறான். முதல் குற்றத்தையே உணர்ந்து மனித சமுதாயம் அவனை மன்னிக்கத் தயாராக இருந்திருந்தால் அப்போது குற்றம் நின்று போயிருக்கும், ஆகவே குற்றவாளி என்றும், முட்டாள் என்றும், மோசக்காரன் என்றும் பிறரால் தூற்றப்படுபவர்களிடம் கூட நீ மலர்ந்த முகத்துடன் பழகக் கற்றுக்கொள். அவர்களாலும் உன் வாழ்வு வளம் பெற நேரிடலாம்.

மேற்குறிப்பிட்ட கீழ்த்தர மனப் பண்புள்ளவர்களோடு ஒட்டிப் பழகினால் அவர்களுடைய குணங்கள் நம்மிடையே ஒட்டிக் கொண்டால் என்ன செய்வது என்று நீ பயப்படலாம். இது அர்த்தமில்லாத பீதி. உன் மனதிலே திடம் இருந்தால், உன் இதயத்திலே மாசுபடிய முடியாத பண்பு கலந்திருந்தால், உனது அறிவிலே தெளிவு இருந்தால் அது என்றும் பரிசுத்தமாக இருக்கும். அப்படியின்றி உன் மனம்பலவீன நிலையிலிருந்தால் நீ பரிசுத்தமான அறிஞர்கள் வட்டாரத்தில் பழகினால் கூட உன்னால் நேர்மையாளனாக வாழ முடியாது.

ஆகவே மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் என்ற முதல் ரகஸியத்தை உணர்ந்து எல்லா இடங்களிலும் அதைக் கடைப்பிடிக்க முயற்சி செய்து வரவும். இது பற்றி அடுத்த கடிதத்தில் இன்னும் சற்று விரிவாகக் கூறுகிறேன்.

உன் அன்பான தமையன்.

மனோரமாவின் மனமாற்றம்!

(சென்ற இதழ்களில் :—மேலப்பட்டி முனிஸிபல் சேர்மன் முருகானந்த முதலியார் உழைப்பால் உயர்ந்து முன்னுக்கு வந்த பெரிய மனிதர். கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வீடு வந்த அவருடைய செல்வப் பெண் மனோரமா பொதுநல சேவை செய்ய ஆசைப்படுகிருள். முருகானந்த முதலியாரின் பரம வைரிகளான டாக்டர் ரங்காச்சாரியும், அவர் மகன் டாக்டர் ராமநாதனும் மனோரமாவின் கபடற்ற மனதைப் பயன்படுத்திக் கொண்டு அவளுடைய 'பொது நலத் தொண்டு' ஆசையை வளர்த்து, அதை முருகானந்த முதலியாருக்கு எதிராகவே பயன்படுத்தி அவரைக் கவிழ்க்க முயற்சிக்கின்றனர். மனோரமா அவர்கள் சூழ்ச்சியில் சிக்கிக் கொள்கிருள். முருகானந்த முதலியாரின் ஆதரவாளனும், உண்மைத் தொண்டனுமான ஜெகதீசனையும் விரோதித்துக் கொள்கிருள். விஷயமுணர்ந்த முருகானந்தம் செல்லப் பெண்ணை மனோரமாவின் மனதைத் திருப்பும் வழியறியாது திகைக்கிருர். இனி மேலே....)

ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் தன் தோழிகளுக்கு நீண்ட கடிதங்கள் எழுதுவது மனோரமாவுக்குப் பொழுது போக்கு; இந்தக் கடிதங்கள் பெரும்பாலும் தன் சூழ் நிலையில் காணும் அதிசயங்களையும், தனக்கு ஏற்படும் வினோத அனுபவங்களையும், இன்னும் மனதில் எண்ணும் அந்தரங்க எண்ணங்களை குறிப்பனவாகவே இருப்பது வழக்கம். சமீபத்தில் தன் அந்தரங்க தோழி ஒருத்திக்கு அவள் எழுதிய நீண்ட கடிதத்தின் சில பகுதிகளைக் கவனிப்போம்.....

கடிதம்

அன்புள்ள தோழி,

கடைசியாக எனக்கு நீ எழுதிய கடிதத்தில் நீ ஏகப்பட்ட உபதேசங்களை பொழிந்து தள்ளியிருந்தாய்.

ஜெகதீசனைப் பற்றி நான் தாறுமாருக எழுதியிருந்ததைக் கண்டித்திருந்தாய். டாக்டர் ரங்காச்சாரியைப் பற்றி ஒரு வசை புராணமே பாடித் தீர்த்திருந்தாய். டாக்டர் ராமநாதனும், ஒரு முதல்தர அயோக்கியனைத் தான் இருக்க முடியும் என்றும், அவருடன் நெருங்கிப் பழகுவதைக் கூடிய வரையில் கத்தரித்துக் கொண்டுவிடு என்றும் ஆலோசனை கூறியிருந்தாய்; நான் ராமநாதனைக் காதலிப்பதாகக் கூறியதை 'பயங்கரமான கனவு' என வர்ணித்து இந்த நினைவையே அழித்துவிடு, என்று கண்டிப்பாக கேட்டுக்கொண்டிருந்தாய். கடிதத்தின் இறுதியில் புத்திசாலியான நான் நிச்சயமாக, மிக விரைவில் மனமாற்றம் அடைந்து சரியான பாதையைக் கண்டுபிடித்து விடுவேன் என்றும், அதற்கு முன்னதாக அவசரப்பட்டு படுகுழியில் விழுந்து விடக் கூடாதே என்று தான் எச்சரிக்கை செய்வதாகவும் கூறி கடிதத்தை முடித்திருந்தாய். அத்துடன் கடிதத்தின் பின் குறிப்பாக உன் ஆசையொன்றையும் குறிப்பிட்டிருந்தாய். ஜெகதீசனைப் பற்றி நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றும், அவரைப் போன்ற உத்தம குணம் படைத்த உண்மைத் தேசத் தொண்டரின் **மனைவி** என்ற முறையில் தேச சேவையில் இறங்கும்போதுதான் நான் சரியான பாதையில் காலடிவைத்ததாக அர்த்தம். இப்படி நிகழ வேண்டும் என்பது உன் ஆசை என்றும் உன் பின் குறிப்பு கூறியது.

நான் மன மாற்றம் அடைந்து விட்டேன் என்பதை நீ கேள்

விப்படும் பொழுது பேரானந்தம் அடைவாய் அல்லவா! ஜெகதீசன் எவ்வளவு உயர்ந்த தியாகி என்பதை அண்மையில் தான் உணர்ந்து கொண்டேன். எந்த ஒரு விஷயமும் ஒருவர் சொல்லிக் கேள்விப்படுவதை விட அனுபவபூர்வமாக உணரும் போது தான் அதன் பெருமை சரிவரப் புரிகிறது. இப்பொழுது ஜெகதீசன் தான் எனக்குக் கடவுள். வழி காட்டி இதில் சந்தேகமே இல்லை.

இன்னொரு மகிழ்ச்சிச் செய்தியையும் உனக்குக் கூறப்போகிறேன். எனக்கு திருமணம் நடக்க இருக்கிறது.

எனக்கு மண மாலை சூட்டப் போகிறவர் யார் தெரியுமா? ஜெகதீசன் அல்ல; டாக்டர் ராமநாதன் தான். என்ன மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாயா!

இந்தத் திருமணம், திருட்டுக் காதல் மணம் என்றோ, பெற்றோரை புறக்கணித்து நடக்கும் புரட்சி மணம் என்றோ எண்ணி விடாதே. என் தந்தையின் பரிபூரண ஆசியுடன் திரு. ஜெகதீசன் அவர்களின் முன்னிலையில் திருமணம் நடக்க இருக்கிறது. செய்தி பிரமிப்பாக இருக்கிறதல்லவா!

ஒரேயடியாக உன்னைத் திகைப்பில் ஆழ்த்தி திண்டாட வைக்க நான் விரும்பவில்லை, விஷயத்தைச் சுருக்கமாகக் கூறி கடிதத்தை முடிக்கிறேன்.

ஆரம்ப முதலே ரங்காச்சாரியின் நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்காமல் தான் இருந்தது. ஆனல் அவருடைய மகன் டாக்டர் ராமநாதன் நீங்களெல்லாம் நினைப்பது போல மோசமானவர் அல்ல. அவரைப்பற்றி இப்பொழுது நான் அதிகமாகப் புகழ்வது சரியல்ல. எனக்கு கணவராகப் போகிறவர். அதனல் தான் அப்படி வாயாரப் புகழ்கிறேன் என்று நீ என்னைக் குத்திக் காட்டுவாய். ஆகவே அவர் தந்தையின் குணங்களுக்கு மிகவும் மாறுபட்ட நல்லவர் என்ற அளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.

ஆனல் அவர் தந்தையிடம் பய பக்தி விசுவாசம் கொண்டவர். தந்தை சொல்லைத் தட்டிப் பேசியறியாமல் வளர்ந்து வந்தவர், தந்தையின் சொல் தவருனதாக இருப்பினும் அதை மறுத்துப் பேசாமல் ஏற்றுக் கொள்ளும் சுபாவம் துரதிருஷ்ட வசமாக அவரிடம் அமைந்து விட்டிருந்தது. இந்த காரணத்தால் தான் தந்தையின் கெட்ட பெயர் ஒரு

பாவமுமறியாத ராமநாதன்மீது படியத் தொடங்கிற்று.

டாக்டர் ரங்காச்சாரி என் தந்தையைக் கவிழ்க்க சதிசெய்கிறுர் என்ற உண்மையை நான் முதலில் உணரவில்லை. என் தந்தையைப் பற்றி பிரமாதமாக எனக்கு முன்னல் புகழ்வார். அவர் ஒரு ஒப்பற்ற, அப்பழுக்கில்லாத தேச பக்தர் என்றும் ஜெகதீசன் போன்ற சில சுயநலப் பேர்வழிகளின் கூட்டுறவால் அவர் கெட்டுவிடுவதாகவும் கவலைப்படுவார்.

என்னுடைய முழு ஆத்திரமும் ஜெகதீசன் பக்கம் திரும்பியது. அவரை ஒழித்துக் கட்டினலொழிய என் மனம் நிம்மதியடையாது என்ற மன நிலையை ரங்காச்சாரி எனக்கு உண்டாக்கிவிட்டார்,

நான், ரங்காச்சாரி, ராமநாதன் ஆகிய மூவரும் சேர்ந்து ஜெகதீசனை ஒழித்துக் கட்ட எத்தனையோ சதியாலோசனைகள் செய்தோம்.

ஜெகதீசன் மீது பெரியதொரு குற்றத்தை சுமத்தி அவரை நீண்ட காலம் சிறைக்கு அனுப்புவது என்பது எங்கள் முக்கியமான திட்டம். எவ்வளவோ முயன்றும் அதில் எங்களால் சுலபத்தில் வெற்றி காண முடியவில்லை.

ஒரு நாள் மாலை உல்லாசமாக உலாவச் சென்றுவிட்டு காரில் நான் மட்டும் வந்துக் கொண்டிருந்தேன். அப்பொ

மூது என் மனதில் ஒரு போராட்டமே நிகழ்ந்துக் கொண்டிருந்தது என்று கூறலாம்.

டாக்டர் ரங்காச்சாரியின் போக்கு இப்பொழு தெல்லாம் எனக்குப் பிடிப்பதே இல்லை. ராமநாதன்மனதையும் என்னல் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ரங்காச்சாரி கூறும் அளவுக்கு அவ்வளவு கொடுமை வாய்ந்தவராக ஜெகதீசன் என் மனதில் படவில்லை. ஜெகதீசனது தன்னலமற்ற சேவைகளைப் பற்றி பாமர மக்களெல்லாம் கதை கதையாக பேசுவதைப் பார்க்கும் போது என் மனம் குழப்ப மடையத் தொடங்கியது. ரங்காச்சாரி தன் சொந்த அநுகூலத்துக்காக ஏதோ கபட நாடக மாடுகிருர் என்று என் உள்ளுணர்வு அடிக்கடி எச்சரித்தது. ஆனல் ராமநாதனைப் பற்றித் தவருக கற்பனை செய்யக்கூட என் மனம் இடந்தரவில்லை. அவரை விலக்கி விடுவதும் எனக்குச் சுலபமாகப் படவில்லை.

இப்படி குழம்பிய உள்ளத்துடன் உலக நினைவே அற்று காரைச் செலுத்திக் கொண்டிருந்த நான் திடீரென உணர்வு பெற்று எதிரே நோக்கினேன். அடுத்த விநாடி என்னை மீறி எழுந்த பீதியுடன் ஓ, வென்று அலறினேன். கார் ஒரு பிர்மாண்டமான மரத்தை நோக்கி புயல் வேகத்தில் பறந்துக் கொண்டிருந்தது. மேற்கொண்டு நான் என்ன செய்வது என்று தீர்மானிக்கு முன்பு யாரோ என் தலையில் ஓங்கி அடித்தது போன்ற ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. அடுத்த கணம் உணர்வை இழந்தேன்.

கண் விழித்துப் பார்த்த போது நான் ஒரு கயிற்றுக் கட்டிலில் சாதாரண படுக்கையில் கிடப்பதை உணர்ந்தேன். என்னைச் சுற்றிலும் மங்கலான ஒளிபரவியிருந்தது. நிதானித்து சூழ்நிலையைக் கவனித்தேன். சாதாரண ஒரு கீற்றுக் கொட்டகை. மண் சுவர்; ஆனல் பரிசுத்தமாகவும் காற்ருேட்ட வசதிகளுடன் அமைக்கப் பட்டிருந்தது. ஒரு மூலையில் மூங்கில் கழிகளினல் அலமாரிபோல் செய்யப்பட்டபகுதியில் நிறைய புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. அதன் அருகே ஒரு சிறு மேஜையும் நாற்காலியும் கிடந்தன.

நேற்றைய சம்பவம் என் நினைவுக்கு வந்தது. நான் கார் விபத்துக்கு இலக்கான பிறகு என்னை யாரோ காப்பாற்றியிருக்கிருர்கள் என்பதை மட்டும் உணர்ந்தேன். உடலில் எங்காவது காயம் இருக்கிறதா என்று பார்த்த போது எனக்கு வியப்பாக இருந்தது. அப்படி ஒன்றுமில்லை.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்து ஜன்னல் வழியாகப் பார்த்தேன். தூரத்தில் அடிவானத்தில் வெளிச்சம் தெரிந்தது. காலை நேரம் என்று யூகித்துக் கொண்டேன். பக்கத்தில் ஒரு பெரிய தோட்டம் இருந்தது, அந்தத் தோட்டத்தில் பெரும்பாலும் காய்கறிகள் பயிரிடப்பட்டிருந்தன. யாரோ ஒருவன் வெகு கவனமாக மண்வெட்டியால் தோட்டத்தை வெட்டிக் கொண்டிருந்தான். யாரோ ஒரு குடியானவன் வீடு போலிருக்கிறது என்று மட்டும் என்னல் யூகிக்க முடிந்தது.

உடலில் எவ்வித வலியும் இல்லாததால் எழுந்து ஜன்னல் பக்கம் வந்து நின்றுக் கொண்டு தோட்டத்தைக் கொத்தும் குடியானவனை கைத் தட்டி அழைத்தேன். அவன் திரும்பவில்லை. தன் வேலையில் முழு கவனத்துடன் ஈடுபட்டிருந்தான்.

நான் வீட்டைவிட்டு வெளியே இறங்கி மெல்ல அவனை நோக்கி நடந்து சென்றேன். "ஐயா..." என்று மெதுவாகக் கூப்பிட்டேன்.

இந்தத் தடவை அவன் நிமிர்ந்து தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்து முகத்தில் வியர்வையைத் துடைத்துக் கொண்டே என்னை நோக்கினன்.

என்ன ஆச்சரியம்! அது.... ஜெகதீசன்....

"நீங்களா?" என்றேன் வியப்புடன்.

"உங்கள் உடல் நிலை சரியாக இருக்கிறதோ? அதற்குள் ஏன் எழுந்துவிட்டீர்கள்...." என்று பரிவுடன் கேட்டார் ஜெகதீசன்.

"அப்படி ஒன்றும் மோசமில்லை, இப்பொழுது மிகவும் சவுகரியமாகவே இருக்கிறேன். நீங்கள் என்ன....இப்படி....காலை நேரத்தில்...." என்று கேட்டேன்.

"வயிற்றுப் பிழைப்புக்கு ஏதாவது வேண்டுமல்லவா? இதில் விளையும் காய்கறிகளின் விற்பனைதான் என் வயிற்றுப் பசிக்கு உதவுகின்றது...." என்று சிரித்துக்கொண்டு கூறிய வண்ணம் மண்வெட்டியைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டார் ஜெகதீசன்.

"வேறு வகையில் உங்களுக்கு வருமானமே கிடையாதா?"

"வேறு வகையில் என்ருல்?" ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார் ஜெகதீசன்.

"இப்படிப் பொது மக்களுக்காக உழைக்கிறீர்களே....நீங்கள் இப்படி உங்கள் சொந்த வாழ்வுக்காக உடலை வாட்டி பாடுபடுவதை அவர்கள் பார்த்துக்கொண்டா இருக்கிருர்கள்?"

ஜெகதீசன் சிரித்தார்.

"என் சேவைக்காக அவர்களிடம் கூலி கேட்டால் கட்டாயம் கொடுக்கத்தான் செய்வார்கள். அதைக் கூலி என்று அழைப்பதில்லை. லஞ்சம் என்றுதான் அதற்குப் பெயர். அப்படி மக்களிடம் கைக் கூலி பெறும்போது நான் செய்வதை தேச சேவை என்று எப்படிச்சொல்ல முடியும். எனக்கு என்னவோ சம்பளம் வாங்காத தேச சேவகன் என்ற பட்டத்தில் மட்டுந்தான் அதிக ஆசை இருக்கிறது?...." என்று கூறிக் கொண்டு ஜெகதீசன் முன்னல் நடந்தார். நான் பின் தொடர்ந்தேன். வீட்டு வாசலின் முன் பக்கம் நேற்று விபத்துக்குள்ளான என் மோட்டார்கார் நசுக்குண்டு கிடந்தது.

"நேற்றைய விபத்திலிருந்து என்னைக் காப்பாற்றியதற்கு நான் நன்றி மறக்கமாட்டேன். இப்பொழுது நான் வீட்டுக்குப் போக வேண்டும். என்னைக் காணமல் அப்பா மிகவும் கவலைப்படுவார்...." என்றேன்.

"செய்தி உங்கள் தந்தைக்கு தெரியும். இரவு நீங்கள் உணர்வற்றிருந்த போது அவர் வந்து பார்த்து விட்டுத் தான் போனர். அதிர்ச்சி தவிர அடியொன்றும் இல்லாதது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. நீங்கள் மெதுவாகவே போகலாம்" என்று ஜெகதீசன் கூறியதை என்னல் தட்ட முடியவில்லை.

கொல்லைப் புறம் ஒரு கிணறு இருந்தது. பெரிய வாளியொன்றில் அவராகவே கிணற்றிலிருந்து நீர் இறைத்து மேலே வைத்து "முகத்தை அலம்பிக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு உள்ளே சென்ருர்.

நான் சற்று நேரம் கழித்து உள்ளே சென்ற போது அவர் ஒரு ஸ்டவ் அடுப்பின் உதவியால் டீ தயாரித்துக் கொண்டிருந்தார்.

"என்ன இது எனக்காகவா இவ்வளவு சிரமம்...." என்று பதட்டத்துடன் கேட்டேன்.

"வயிறு என்ன உங்களுக்கு மட்டுந்தானு இருக்கிறது. காலையில் டீ சாப்பிடுவது என் பழக்கம். இப்பொழுது ஒரு டம்ளர் அதிகமாக போட்டிருக்கிறேன்" என்ருர் விளையாட்டாக.

அவர் என்னுடன் பேசிக் கொண்டே இருந்தாலும் பல காரியங்களைக் கவனித்த வண்ணம் இருந்தார்.

அடுப்பில் தண்ணீரை விட்ட உடன் பக்கத்திலேயே உட்கார்ந்து முக்கியமான சில கடிதங்களுக்கு பதில் எழுதினுர். இடையிடையே அவருடைய ஆலோசனையைக் கேட்க வந்த பல குடியான மக்களுக்கும் பதிலளித்தார். ஏழெட்டு சிறுவர்கள் புத்தகமும் கையுமாக வந்து உட்கார்ந்து பாடம் படிக்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய சந்தேகங்களுக்கும் பதிலளித்தார். அவர்கள் சென்றதும் தயாரான தேநீரைக் கீழே இறக்கி வைத்து இரண்டு கண்ணுடி டம்ளர்களில் அதை ஊற்றினுர், ஒரு டம்ளரை என்னிடம் நீட்டினுர். நான் மரியாதையுடன் அதை வாங்கி அருந்தினேன்.

இதற்குள் ஒரு ஆள் ஒரு ஜட்கா வண்டி சகிதம் வந்து வாசலில் நின்ருன். அது எனக்காகத்தான் வந்திருந்தது.

"கார் இங்கேயே கிடக்கிட்டும்...ரிப்பேர் செய்த பின் வீட்டுக்கு வந்து சேரும். நீங்கள் வண்டியில் வீட்டுக்குப் போகலாம்" என்று வண்டி வரை வந்து என்னை வழி கூட்டி அனுப்பினுர்.

அங்கு நான் பழகிய சில மணி நேரங்களில் ஜெகதீசனின் வாழ்வின் ஒரு அணுவைத்தான் பார்த்தேன். ஆனுல் அந்த அணுவிலிருந்து அவரை நான் பூரணமாக உணர்ந்து விட்டேன் என்ருல் மிகையல்ல. அவரது அடக்கமும் அமைதியும் நிறைந்த சேவைக்கு முன்னுல் நான் செய்வதாக நினைக்கும் தேசப் பணி வெறும் தூசியாகவே எனக்குப் பட்டது.

அன்புள்ள தோழி...இப்படிப் பேசும் நான் அன்று மாலையே வெட்கித் தலைகுனியத்தக்க சின்னத்தனமாக காரியமொன்றைச் செய்தேன். மாலையில் ரங்காச்சாரி வீட்டில், எனக்கு நிகழ்ந்த விபத்தையும் அதன் பின் தொடர்ந்து நடந்த விஷயங்களையும் எடுத்துக் கூறி ஜெகதீசன் மீது ஆத்திரப்படுவது அர்த்தமற்றது என்று விளக்கினேன்.

ரங்காச்சாரி வாய்விட்டுச் சிரித்தார். "மனேரமா, நீ சின்னக் குழந்தை. உனக்கு உலகம் புரியாது. ஜெகதீசனின் நடிப்பு உன்னை ஏமாற்றிவிட்டது" என்று என்னென்னவோ விஷயங்களைக் கூறி என் மனதைக் கலைத்து விட்டார். எனக்கு நேர்ந்த விபத்தையே ஆதாரமாக வைத்து ஜெகதீசனை மடக்க திட்டம் போட்டோம்.

உலாவச் சென்று திரும்பும் போது மோட்டாரை வழி மறைத்து என்னிடம் ஜெகதீசன் ஒழுங்கீனமாக நடந்து கொள்ள முயற்சித்ததாகவும், நான் அவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள மோட்டாரை வேகமாக விட்டதனுல் தான் விபத்து நேர்ந்ததாகவும், விபத்தில் உணர்விழந்தபோது என்னை அவர் தன் வீட்டுக்கு தூக்கிச் சென்று என் ஆபரணங்களில் விலையுயர்ந்தவற்றை பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டதோடு என்னிடமும் துராக்கிரதமாக நடந்து கொள்ள முயன்றபோது நான் தப்பி ஓடிவந்து விட்டதாகவும், போலீஸாரிடம் நான் ஒரு வழக்கு தொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இது பற்றி என் தந்தையிடம் ஆலோசனை கேட்க விரும்புவதாக நான் கூறியபோது ரங்காச்

சாரி என் தந்தைக்கு ஜெக்தீச னின் சூழ்ச்சி புரியவில்லை என் றும் அவனை யோக்கியமானவர் என்று அப்பா கருதிக் கொண் டிருப்பதால் அவர் ஆட்சேபிப் பார் என்றும் கூறித் தடுத்துவிட் டார்.

தக்க பொய்ச் சாட்சிகளுடன் வழக்கு தொடரப்பட்டது. வழக் கில் உண்மை இருக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந் தாலும் சட்டம் எதையும் செய்யுமல்லவா, ரங்காச்சாரி எனக்காக ஏற்பாடு செய்த வக் கீல் தமது வாதத் திறமையில் நானே மயங்குமளவு பொய்யை உண்மையாக்கிவிட்டார். ஜெக தீசனுக்கு ஆறு மாத சிறைத் தண்டனை கிடைத்து விட்டது. சிறைக்குச் செல்லுமுன் ஜெகதீ சன் என்னை சந்தித்து புன்னகை முகத்தில் தவழ ''சகோதரி.... என்னைப் பற்றிக் கவலையில்லை. தயவு செய்து உங்களைக் காப் பாற்றிக் கொள்ளுங்கள். நொந்து போயிருக்கும் உங்கள் தந்தையின் உள்ளத்தை மேலும் நோக வைத்தால் அவர் உயி ருக்கே ஆபத்து விளைய நேரி டும்'' என்று கூறி விடை பெற் றுக் கொண்டார்.

என்னையுமறியாது துக்கம் என் தொண்டையை அடைத் தது. வாய்விட்டு அவரிடம் மன் னிப்புக் கேட்டுக் கதறி அழ வேண்டும் போல் இருந்தது.

அன்புத் தோழி, ஜெகதீசன் சிறை சென்ற மறுதினந்தான் என் வாழ்வில் மறக்க முடியாத தினம். அன்று தான் என் மன தில் மகத்தானதொரு மாற்றம் நிகழ்ந்தது.

அன்று காலை நான் ரங்கா சாரியின் வீட்டுக்குப் போன போது அறைக்குள் தந்தையும் மகனும் ஏதோ ரகஸியமாக தர்க்கம் செய்துக் கொள்வதைக் கவனித்தேன். அவர்கள் பேச் சில் என் பெயர் அடிபட்டதால் உடனேயே உள்ளே போகா விடாமல் ஒதுங்கி நின்று கவ னித்தேன்.

''இனிமேல் அவள் விஷயத் தில் நீ பட்டதும் படாததுமாகத் தான் பழக வேண்டும்!.... ஏனெ னில் நமது முக்கிய விரோதியை ஒரு வழியாகத் தீர்த்துக் கட்டி விட்டோம்....''

இது ரங்காச்சாரியின் குரல். அதட்டும் பாவனையில் குரல் இருந்தது.

''நான் சொல்வது என்ன வென்றால் மனோரமாவைப் பற்றி....''

அடங்கிய குரலில் ஏதோ சொல்ல ஆரம்பித்தார் ராம நாதன்.

ரங்காச்சாரி அவரைப் பேச விடவில்லை.

''அவளைப் பற்றி நீ ஒன்றுமே நினைக்கத் தேவையில்லை. எல் லாம் எனக்குத் தெரியும். முரு கானந்த முதலியை ஒழித்துக் கட்ட வேண்டுமென்பது நமது முக்கிய முடிவு. கிட்டத்தட்ட தளர்ந்துவிட்ட அவன் உள்ளத் திற்கு ஊக்கமளிக்கும் ஒரே சக்தியாக இருந்த ஜெகதீசனைத் தொலைத்துவிட்ட பிறகு இனி அவன் உயிரற்ற பொம்மை தான். சுலபமாக அவனைத் தட்டி விடலாம். ஆகவே இனி முரு கானந்தத்தின் மகளும் நமது விரோதிதான்.''

''இல்லை அப்பா நான் சொல் வது என்னவென்றால்....''

''நீ சொல்லவே தேவை யில்லை. இவ்வளவு நாள் நம் முடன் ஒத்துழைத்தவளைப் புறக் கணிக்கக் கூடாது என்று தானே சொல்லப் போகிறாய். அவளை யார் நம்பினார்கள். அப் படியே ஒத்துழைத்ததாக வைத் துக் கொண்டாலும் அவள் அப் பனுக்கு விரோதமாக நாம் ஏதா வது நடவடிக்கை எடுத்தால் நிச்சயம் அவள் ஒப்புக்கொண்

டிருப்பாளா? மேலும் இனி ஐந்தாம் படையாக தகப்பனுக்கு உதவி செய்தாலும் செய்ய முற்படுவாள். என்ன இருந்தாலும் பெற்ற தகப்பனல்லவா!...''

''நான் அவளைப் பற்றி ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன், அதைத்தான் சொல்ல நினைத்தேன்....''

''உன் பேச்சைக் கேட்க நான் தயாரில் இல்லை. நீ சின்னஞ்சிறு பையன். உனக்கு உலகம் புரியாது. நாளையிலிருந்து அவள் நம் வீட்டுக்கு வரக்கூடாது. வந்தால் நான் அவளிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ள நேரிடும்.... இதை அவளுக்கு அறிவித்து விடு. என்ன....புரிகிறதா?''

''சரி....'' என்றார் ராமநாதன்.

அவர் மீது அப்பொழுது எனக்கு ஏற்பட்ட ஆத்திரம் இவ்வளவு அவ்வளவென்று கூற முடியாது. ''மனதில் பட்டதை திடமாக துணிவுடன் சொல்ல முடியாத — சொல்ல பயப்படும் நீர் ஒரு மனிதரா? உம்மைப் போய் நான் கணவனாக ஏற்றுக் கொள்ளத் திட்டமிட்டேனே'' என்று திட்டித் தீர்க்க வேண்டுமென்ற வெறியுணர்வுதான் அப்பொழுது மேலோங்கி நின்றது.

எனினும் மனதை அடக்கிக் கொண்டு மெல்ல வீட்டை விட்டுக் கீழே இறங்கி வாசலில் நின்றிருந்த காரில் போய் ஏறிக் கொண்டேன்.

எதிர் பாராத விதமாய் வெளியே வந்த ராமநாதன் ''மனோரமா?'' என்று கூவிக் கொண்டே காரை நோக்கி ஓடி வந்தார்.

அவர் முகத்தில் அறைவது போல கதவை 'படா'ரென இழுத்துச் சாத்திவிட்டு அந்தப் பக்கம் திரும்பாமலே காரை வேகமாக விட்டேன்.

''மனோரமா....ஒரு வார்த்தை நில்....நில்....'' என்று பின்னால் ராமநாதன் போட்ட கூக்குரல் காற்றோடு காற்றாகக் கரைந்து விட்டது.

* * *

என் தந்தையின் மடியில் விழுந்து நான் அழுதேன். சிறு பிள்ளைத் தனமாக நான் செய்த செயல்களையும், அதனால் விளைந்த விளைவுகளையும் கூறி என்னை மன்னிக்கும்படி அவரை வேண்டினேன். நெஞ்சுத்திடமற்ற ஒரு கோழையைக் காதலனாக வரித்து அவனை மணந்து கொள்ளத் திட்டமிட்டதையும் வெளிப்படையாகக் கூறி வேதனைப்பட்டேன்.

அப்பா ஆழ்ந்த ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு ''உன் விளையாட்டுச் செயல்களினால் நன்மைதானம்மா விளைந்திருக்கிறது. உன்னிடம் ஏற்பட்டிருக்கும் இந்த புரட்சிகரமான மாற்றங்களை ஒரு வேளை நான் முயன்றிருந்தால் கூட செய்திருக்க முடியாது....'' என்றார்.

''என்னுடைய விளையாட்டு உத்தமரான ஜெகதீசனுக்கு வினையாகவல்லவா முடிந்து விட்டது, அவரது தூய்மையான பெயருக்கு களங்கம் விளைவித்ததோடல்லாமல் சிறையில் வாடி வதங்கும்படியல்லவா நான் செய்துவிட்டேன்'' என்று வேதனையுடன் கூறினேன்.

அப்பா புன்னகை தவழ ''மனோரமா, ஜெகதீசனுக்கு ஏற்பட்டுள்ள இந்த இன்னல்கள் அவனுக்கு தூசிக்கு சமானம். அவனை நீ சாதாரண மனிதனாக மதிப்பிட்டு விடாதே. அவன் உண்மையாகவே ஒரு மகாத்மா....ம்....அவனைப் பற்றி நான் என்னென்னவோ....நினைத்திருந்தேன்....'' என்று கூறி நிறுத்திக் கொண்டு ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார்.

''என்னப்பா நினைத்திருந்தீர்கள். இப்பொழுது தான் என்ன. நிறைவேற்றிவிட்டால் போகிறது....'' என்று நான் துடித்துக் கொண்டு கேட்டேன்.

''நிறைவேற்றலாம்.... அவன் விடுதலை யடைந்து வந்த உடனே கூட நிறைவேற்றலாம்! ஆனால்....அது என்னால் மட்டும் முடியக் கூடியதல்ல....உன் உதவி தான் முக்கியம்....''

''இப்பொழுது தான் நான் திருந்திவிட்டேனே அப்பா....... அவருக்காக உயிரைக் கொடுக்கக் கூடத்தான் சித்தமாக இருக்கிறேனே'' என்று உணர்ச்சியுடன் நான் கூறினேன்.

அப்பா நிதானமாக என்னைப் பார்த்துவிட்டு'' எந்த விஷயத்திலும் நான் உன்னை வற்புறுத்தமாட்டேன். எல்லாம் உனக்கு மனமிருந்தால் தான். என் ஆவல்....உங்கள் இருவரையும் மணக் கோலத்தில் பார்க்க வேண்டுமென்பது தான்....'' என்றார்.

நான் ஒரு கணம் திகைத்தேன். ஜெகதீசனைப் பற்றி நான் இப்படி ஒரு நிமிஷம் கூட கற்பனை செய்தது கிடையாது. திடீரென மனம் மாறி நான் ஜெகதீசன் மீது அன்பு கொண்டது உண்மைதான். என்றாலும் அந்த அன்பு ஒரு தெய்வத்தினிடம் பக்தன் காட்டும் பக்தியைப் போன்றது தான்.

வேறு சமயமாக இருந்தால் இதைப் பற்றி என் மன நிலையை விளக்கிக் கூறி அப்பாவின் எண்ணத்தை மாற்றியிருப்பேன். ரங்கநாதன் விஷயமாக ஏற்பட்ட ஏமாற்றம் காரணமாக அப்பொழுது என் மனம் மிகவும் சலிப்படைந்திருந்தது. அதனால் ஏதோ ஒரு குருட்டு வெறி மனதில் உந்தித்தள்ள ''உங்கள் விருப்பத்தை நான் கட்டாயம் நிறைவேற்றுகிறேன் அப்பா..'' என்றேன். அவர் முகம் மலர்ந்தது.

* * *

சுமார் பதினைந்து நாட்கள் பறந்துவிட்டன. இந்த பதினைந்து நாட்களில் நான் பதினையாயிரம் வகையில் என்னை மாற்றிக்கொண்டேன். வீட்டை விட்டு வெளியே புறப்படுவது கிடையாது. வேலைக்காரர்கள் எல்லோரையும் நிறுத்திவிட்டு எல்லா வேலைகளையும் நானே செய்ய ஆரம்பித்தேன். சலிக்காமல் உழைப்பதும் ஓய்வு கிடைக்கும் போது தந்தைக்கு நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது பற்றி சிந்திப்பதுமாக காலத்தை ஓட்டினேன். ஜெகதீசன் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்பு அவர் எனக்கு கணவரான பின்பு எப்படி நடந்து கொள்வது என்றெல்லாம் இப்பொழுதே திட்டமிடத் தொடங்கினேன்.

என்ன முயன்றும் மனம் ஜெகதீசனிடம் ஒட்ட மறுத்து ராமநாதனிடமே பாய்ந்தது. அடுத்த வினாடி அவருடைய கோழையுள்ளத்தை எண்ணி மனம் அருவருப்பும் கொண்டது. அன்று அவர் தந்தையிடம் ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசியிருந்தால் இன்று அவரை நான் தெய்வமாகப் பணிந்துப் போற்றியிருப்பேன். தவறிவிட்டார். தகப்பனார் குட்டிய குட்டுக்கு குனிந்து கொடுத்து தன் தகுதியையும் குறைத்துக் கொண்டுவிட்டார்.

எப்படியாவது ராமநாதனை மறந்து ஜெகதீசனுக்கே இதயத்தில் இடமளிப்பதென்று தீவிரமான தீர்மானம் கொண்டேன்.

ஒருநாள் மாலை நான் வீட்டு முன்பக்கத்து ஹாலில் உட்கார்ந்து பத்திரிகையொன்றைப் புரட்டிக் கொண்டிருந்

தேன். தலை நிமிர்ந்து பார்த்த போது ஒரு வினாடி நான் திகைப் படைந்தேன். என் முன்னால் ராமநாதன் நின்றுக் கொண்டிருந்தார்.

"மனோரமா!" என்று மெல்லிய குரலில் அவர் அழைத்த போது எனக்கு குபீரென கோபம் பொங்கி எழுந்தது.

"மரியாதையாக வெளியே போய் விடுங்கள் ..." என்று ஆத்திரத்துடன் கத்தினேன்.

"அவசரப்படாதே.........நான் சொல்வதை...." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்த அவர் பேச்சை நான் காது கொடுத்துக் கேட்கவே இல்லை. "மரியாதையாகப் போகப் போகிறீர்களா இல்லையா" என்று கூச்சல் போட்டுவிட்டு உள்ளே போய் கதவைப் படாரென்று தாளிட்டுக் கொண்டேன்.

ராமநாதன் போன பிறகு தான் நான் வெளியே வந்தேன். சுமார் ஒரு வாரத்திற்குப்பிறகு தண்டனை காலம் முடியாமல் இருக்கும்போதே திடீரென ஒரு நாள் ஜெகதீசன் விடுதலையடைந்தார்.

சிறை வாசலுக்கு நானும் தந்தையும் போயிருந்தோம். மகிழ்ச்சி பூத்த முகத்துடன் வெளியே வந்த ஜெகதீசன் என்னைக் கண்டு வியப்படைந்து "உங்களை எதிர் பார்க்கவில்லை" என்றார்.

அப்பா சந்தோஷம் பொங்கும் முகத்துடன் "ஜெகதீசா ஒரு விஷயம் தெரியுமோ? மனோரமா மனம் மாறிவிட்டாள். இன்னொரு அதிசயம் நீ கேட்டால் பிரமித்து விடுவாய்! என் விருப்பப்படி அவள் உன்னையே மணப்பது என்று தீர்மானித்து விட்டாள்" என்றார்.

ஜெகதீசன் சத்தம் போட்டு சிரித்துவிட்டு "வேடிக்கையாக இருக்கிறதே! மனோரமா என் தங்கையல்லவா! அவளை நான் மணப்பதாவது! மனோரமாவின் மனது எனக்கு நன்றாகப் புரியும்! அவர்களுடைய காதலன் இப்போது தியாகியாக சிறையிலல்லவா இருக்கிறார்" என்றார்.

நாங்கள் இருவரும் ஒன்றும் புரியாமல் விழித்தோம். ஜெகதீசன் விளக்கினார்: ராமநாதன் தன் தந்தையை விரோதித்துக் கொண்டு அவரை விட்டு விலகி விட்டதோடு ஜெகதீசன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மையல்லவென்றும், தாமும் தம் தந்தையும் செய்த சூழ்ச்சியே அது என்றும் நீதிபதியிடம் ஒப்புக் கொண்டாராம். அத்துடன் இது நாள் வரை தன் தந்தை செய்து வந்த மோசடிகள் அவ்வளவையும் புள்ளி விவரத்துடன் நிரூபித்து விட்டாராம். உடனே அவரையும் அவர் தந்தையையும் கைது செய்துவிட்டு ஜெகதீசனுக்கு விடுதலை அளித்துவிட்டனர். ராமநாதன்மீது குற்றம் ஒன்றும் ருசுவாகாததால் அவரும் விரைவில் விடுதலை செய்யப்படலாம். இந்த விவரங்களைக் கூறிய ஜெகதீசன் "பாவம், சிறையில் ராமநாதன் தான் மனோரமாவின் அன்பை இழந்துவிட்ட குறையை அழாத குறையாக கூறினார். பயப்பட வேண்டாம். மனோரமா அப்படியொன்றும் கொடிய சுபாவம் படைத்த பெண்ணல்ல, என்று தைரியம் கூறி வந்திருக்கிறேன். நான் சொன்னது சரிதானே...." என்று என்னைப் பார்த்துக் கேட்டார். எனக்கு வெட்கமாகப் போய்விட்டது...."

மனோரமாவின் கடிதத்தின் முக்கிய பகுதிகள் இவை தான். இனி மேற் கொண்டு அவள் கடிதத்தைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லாததால் மற்ற விஷயங்களை நாமே யூகித்துக் கொண்டு நிறுத்திக் கொள்வோம்.

—(சண்முகம்)

ஒலிபெருக்கி

ஆர். பி. மல்லாரி

"அந்தோ போகுதே!" என்று ஜாம் ஜாமென்று, கலியாண வீட்டிலிருந்து, ஒலிப்பெருக்கி மூலம் பாட்டு கதறிக் கொண்டிருந்தது!

"ஆஹா! பாட்டுன்னு இதுல்லே பாட்டு; என்ன ராகம் என்ன சாரீரம்!" என்று ஒரு கூட்டம் இதை அந்த மங்களகரமான வேளையின் போது ரசித்துக் கொண்டிருந்தது.

உள்ளே கெட்டி மேளம் கொட்ட, மணமகன் தாலியைக் கட்ட ஆரம்பித்தார்.

வேறு இசைத்தட்டை ஒலி பெருக்கியில் வைத்தார்கள்.

"மங்கையே நீ மறைந்தாயோ....!"

இந்தப் பாட்டையும் இன்னெரு ரசிகமணிக் கூட்டம் ரசிக்கத்தான் செய்தது!

இவ்வளவு ஏன் சொல்கிறேனென்ருல், உலகில் இப்போது ஒலிப் பெருக்கிக்கு இருக்கும்மகத்துவம், அதற்குத் தரும் தனிப் பெருமை. எதற்குமே இல்லை என்று சொல்லி விடலாம்!

ஒலிப்பெருக்கி நவயுகத்தின் நாகரிக அவதாரம்! வாழையடி வாழையாக வந்துள்ள சின்னத்தின் முத்திரை! சின்னத்தின் முத்திரை என்ருல் என்ன பொருள் என்கிறீர்களா? எனக்குத்தெரியாது!

ஒலிப்பெருக்கியில் சோக ரஸம் அக்ராசனம் வகிக்க, நவரஸங்களும் அடங்கித் ததும்புகின்றன. நம் கதாநாயகிகள் எல்லோரும் அழுவதில் மணியாக இருப்பதால், லதா மங்கேஷ்கர் வழிகாட்ட, தென்னிந்தியாவின் பிரபல ஒரிஜினல் சங்கீத டைரெக்டர்களெல்லாம் பின்னணி ஆட்களை அழவைக்கிருர்கள். பாட்டு அழும்போது, டான்ஸ் செய்ய முடியுமா? அப்படி இருந்தாலும் சோக டான்ஸாகத்தான் இருக்க முடியும்! நம் கதாநாயகிகள் கிளிஸரின் போட்டுக் கொள்ளுகிருர்கள். முகத்தில் பாவமில்லா விட்டாலும், நடுக் கண்ணிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டும் - சிலசமயம் கிளிஸரினே கொட்டும். நாமும் மூக்கை சிந்தி விட்டு, பாதி படத்திலேயே எழுந்து, நடுவில் ஒரு ஆறு குளம் வந்தால் முழுக்கு போட்டு, ஜாக்கிரதையுடன் வந்து சேருகிருேம்!

தாலியைக் கட்ட ஆரம்பித்தார்....

ஆண்களின் சுயநலத்தை
எண்ணும்போது ....!

இப்படியாக, இசைத்தட்டுக் கிரல்களில் சோகம் பதுங்கிக் கிடக்க, ஒலிப்பெருக்கி மூலம் எல்லாச் சுப காரியங்களிலும் அந்த சோக இசை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்தக் கண்ணீரில் பல வகை உண்டு. ஆனந்தக் கண்ணீர், முதலைக் கண்ணீர், நீலிக் கண்ணீர் இத்யாதி....!

ரேடியோவுக்கு ஹ்ருதயம் போன்றது ஒலிப் பெருக்கி. ஒலிப் பெருக்கி இல்லையேல் ரேடியோ ஏது? ரேடியோ இல்லையென்றால், எதனுடைய கழுத்தைப் பிடித்துத் திருகி, நம்மிஷ்டம் போல மௌனமாக்க முடியும்? இதற்காகவாவது, ஒலிப்பெருக்கி வாழ்க! அழுதாலும், பெருத்தகுரலில் அழுதுகொண்டே வாழ்க!

இந்த ஒலிப் பெருக்கி வீர ரஸத்தை, அதிலும் வீராங்கனைகளின் மெல்லிய முணுமுணுப்பைச் சித்தரிக்கும் போது, இன்னும் பெருமை கொள்ளுகிறது.

"சகோதரிகளே! ஆண்களின் சுயநலத்தை எண்ணுபோது, என் மனம் கொதிக்கிறது! நெஞ்சு குமுறுகிறது! வீரம் கொப்பளிக்கிறது! இதயம் வெடித்துவிடும் போல இருக்கிறது...."

ஒலிப் பெருக்கியும் கொஞ்சம் நடுங்குகிறது — அதாவது 'டிஸ்டார்ட்' செய்கிறது! எத்தனை தடவைதான் இது போல சொற்பொழிவுகளைக் கேட்பது! அதுவும் கைகால்கள் வெடவெடக்க, பேப்பரைப் பார்த்து படிக்கும்போது, குரல் நடுங்க... வீரத்துக்கும் ஒரு அளவு இல்லையா? அளவுக்கு மிஞ்சினால் 'ஸ்ட்ரைக்'தானே! வாயில்லாப் பூச்சிகள் எல்லாம் 'ஸ்ட்ரைக்' செய்யும் போது, லவுட் ஸ்பீக்கர் சும்மா இருக்கலாமா?

நம் தலைவர்கள் பலருக்கு, அவர்கள் கர்ஜனையைக் கேட்பதற்கு ஒலிப்பெருக்கி ஒன்று மாத்திரம் அவசியம் வேண்டும். அப்படி இருந்துவிட்டால் பிச்சு 'பிளுட்டி' எடுத்து விடுவார்கள்! எதிரே ஜன சமுத்திரத்துக்குப் பதில் வெறும் சமுத்திரமாக இருந்தாலும் கவலைப்படமாட்டார்கள்.

இந்த ஒலிப் பெருக்கிகள் பெரிய தியாகிகள்! சற்றும் அகம்பாவம் கிடையாது. தலைவரின் உரை கேட்ட அதே ஒலிபெருக்கி, ஒரு வானில் உட்கார்ந்து, தங்கள் தயாரிப்புகளை கதறிக் கதறி விளம்பரப்படுத்தும் கம்பெனிக்காரர்களின்



விளம்பரக் கதறல்....!



போலீஸ் வானே நடைபாதையில்....!

கூச்சலையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்கும்!

சிலசமயம் இந்தக் கார், சங்கீதம் சகிதம் போய்க் கொண்டிருக்கும். சங்கீதத்தினிடையே அறிவிப்புகள் வரும். இந்த சேவையும் ஒலிப் பெருக்கியினுடையதே! சில சமயங்களில் அறிவிப்பு கொஞ்சம் புரியவும் செய்யும்!

“எங்கள் புஷ்கோட்டு அவசியம் அணியுங்கள்! எங்கள் குரங்கு மார்க் பார்த்ததில்லையா? தயவுசெய்து ஒருமுறை காணுங்கள். பிறகு குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொள்வீர்கள்!” ....இப்படியாக....

நடை பாதையில் செல்லும் பாதசாரிகளை கடைத்தேற்றுவதற்காக போலீஸ்காரர்களின் ‘வான்’ பவனி வருவதை நாம் பார்த்திருக்கிறோம். போலீஸ்காரருக்கும் ஹாஸ்யத்துக்கும் வெகு தூரம் என்று யாரோ சொன்னதை ‘பீட்’ அடிப்பது போல வெகு சுவாரஸ்யமான ஹாஸ்யங்களை ‘போலீஸ் வான்’ அறிவிப்பாளர் அள்ளி வீசுவார்.

“ஏ.... புஷ்கோட்.... மேலே ஏறப்பா.... ஏ.... கருப்புக்குல்லா நடை பாதையில் போ.... ஏ... கத்தரிக்கா.... (அதாவது கத்தரிக்காய் கூடைக்காரி) சாகறதுக்கு முடிவு பண்ணிட்டியா.... நடை பாதையிலே ஏறு....” உயர்திணைப் பொருள்களை அஃறிணைப் பொருள்களாக்கி ஹாஸ்யம் செய்வார். இந்த ஹாஸ்யத்தை ரஸித்தவண்ணம் நடை பாதையில் நடப்பவர்கள் கூட ரோட்டில் இறங்கி விடுவர். நடைபாதைக்கு போகுமாறு எச்சரிக்கை செய்யும் போலீஸ் வானே சில சமயம் நடைபாதையில் ஏறி விடுவதும் உண்டு. இந்தகோலாகலத்திற்கெல்லாம் ஒலி பெருக்கி தானே காரணம்.

நாம் நம் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போது, இந்த ‘ஓசை’ நம் காதைத் துளைக்கலாம். இதற்காக, இதற்கு ஓசைப் பெருக்கி என்று பெயர் கொடுத்து விடமுடியுமா? சரி ஓசைப் பெருக்கியாகவே இருக்கட்டுமே, என்ன தவறு?

இந்த ஒலிப் பெருக்கியினால் இன்னும் எவ்வளவோ பயன்கள் இருக்கின்றன. உங்களுக்கு வீடு வசதியாகக் கிடைக்கவில்லை. பக்கத்து வீடு நன்றாக இருக்கிறது. அதில் ஒரு சில அப்பாவிகள் தானிருக்கிறார்கள்... ம்?.... யோசிக்காதீர்கள்!

இந்த சமயத்தில் உங்களுக்கு சமய சஞ்சீவி எது தெரியுமா? உங்கள் வயலின் சாதகமா? இல்லை! உங்கள் பெண் பாட வேண்டுமா?.... அதுவுமில்லை.... கம்பராமாயணப் பாடலுக்கு உரை சொல்ல வேண்டுமா?.... இவை எல்லாமே தேவை இல்லை. உங்கள் ரேடியோப் பெட்டியைத் திறந்து, ரேடியோ நிலையத்தின் காலை சங்கீதத்தைக் கொஞ்சம் அதிகமாகத் திருப்பி விட்டால் போதும். அதில் ஒன்றும் பலன் கிடைக்கவில்லை. மத்தியான்னம் ஒரு

தலைவரின் கர்ஜனை....!

டோஸ் கொடுங்கள், இதிலும் இல்லை. பிடியுங்கள் சாயந்திரத்தை; அதிலும்சனிக்கிழமையாக இருந்து, சாஸ்திரியசங்கீதமாக இருந்து விட்டால், கைமேல் பலன் கிடைக்கும்..... ஒரு மணி நேரம் தாக்கு பிடித்தால் போதும்! மறு நாள் காலை ''வாடகைக்கு விடப்படும்!'' என்ற போர்டு அடுத்த வீட்டில், தென்றலில், மிகவும் சொகுஸாக அசைந்து கொண்டிருக்கும்!

ஒரு வீதியிலுள்ள அத்தனை வீட்டையும் காலி செய்ய வேண்டுமா? இதற்கு ஒரு சிநேகிதர் தேவை. வீதியின் இக்கோடியில் நீங்களும், அந்தக் கோடியில் அவருமாக வெவ்வேருக கர்நாடக சங்கீத இசைக் கொலையை, ஒலிப்பெருக்கிக்கு உணவாகஅளித்தால் போதும்! மறுநாள் 'பாம்ப்' போட்ட மாதிரி வீதி தென்படும்! நீங்களும் பயந்து, வேறு வீடு தேடி, வீட்டுக்குப் போய் விடுவீர்கள்!

ஒலி பெருக்கி கல்யாணத்தையும் செய்து வைக்கிறது என்ருல், ஒருவேளை சிலர் ஆச்சரிய மடையலாம்! இதில் ஆச்சரியத்துக்கு இடமே இல்லை. தன் வீட்டில் புதிதாக ரேடியோ வாங்கி, அதற்கு லைசென்ஸும் வாங்கியாகி விட்டது என்பதை எப்படி விளம்பரப் படுத்த முடியும்? கைக்குக் கிடைத்த மாப்பிள்ளையாக ஒருவரைப் பிடித்து கல்யாணம் செய்து, அந்த சாக்காக ஒலிப்பெருக்கியை ஸ்பானர் கொண்டு இயன்ற வரை லூஸ் செய்யலாம். இதற்கு இடஞ்சலாக ஒலிப் பெருக்கியை அகாரணமாக, அநுமதியின்றி உபயோகப் படுத்தக் கூடாது என்று சொல்லுபவர்கள் எல்லாம் வெறும் கிலி பிடித்தவர்கள் தான்! கலா ரஸனை இல்லாதவர்கள்!.... வேண்டுமானல் ''ஒலிப்பெருக்கி ஜாக்கிரதை'' என்று ஒரு போர்டு போடச் சொன்னல் போதுமே!

சிலருக்கு ''லவுட் ஸ்பீக்கர்', என்ற கௌரவ டைட்டில் உண்டு. இதைப் பெற்ற பாக்ய சாலிகளே, அந்தப்பட்டினத்தின் உண்மையான மதிப்பை உணர்வார்கள். இதற்கு எத்தகைய பயிற்சி வேண்டும்? எவ்வளவு ''தம்'' வேண்டும். வெறும் 'லொட்' 'லொட்' என்று பேசினல் போதுமா? விடாமல் பேசவேண்டும்! எப் போதும் பேசவேண்டும்! எவ் வளவு வேண்டுமானலும் பேச வேண்டும்! ஜனங்கள் கண்டு ஓடுவார்கள் — துரத்திப் பிடித்துப் பேசவேண்டும்! மறை கழன்றுவிட்டதோ என்பார்கள், டைப் செய்துகொண்டு பேச வேண்டும்........

ஒலிபெருக்கி இல்லையேல், 1953-உலகமில்லை. உலகம் ஒலிப்பெருக்கியால் உய்யும் ஒரு பார்க்! ஒலிப்பெருக்கி உய்ய, மானிடஜாதி உய்யும்! ஒலிபெருக்கி வாழ்க! ஒலி பெருக்கியின் ஓசையில் பார்க்கில் நாம் ரேடியோ கேட்டு தூங்குவோமாக.

தாம்பத்யம்

நா. ஜகந்நாதன்

கீழேயிருந்து 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டது. இன்னொரு சிரிப்பொலியையும் கேட்டேன். ஆகா! இந்த இரண்டு சிரிப்பொலிகளைக் கேட்டு எத்தனை நளாகி விட்டது? கள்ளங் கபடமற்ற இரண்டு உள்ளங்களின் சிரிப்பைக் கேட்டுப் பல வாரங்களாகி விட்டன! இவர்களுக்குள் எப்படி சண்டை மூண்டது! ஏன் இது நாள் வரை சண்டை சச்சர வில்லாமல் வசித்து வந்த தம்பதிகள் திடீரென்று நாலைந்து வாரங்களாகப் பூனையும், நாயும் போல் இருந்தார்கள் என்பதை ஆராயப் புகுவதற்குள், இண்டு குரல்கள் என் காதில் விழுந்து மேலே ஆராயவொட்டாமல் தடுத்தன.

''ஆமாம்! அன்றொரு நாள் நீங்கள் ஆபீஸிருந்து வரும் போது உங்கள் சட்டைப் பாக்கெட்டில் ஏதோ சிவப்புக் கறை படிந்திருந்ததே! அது என்ன? அதைப் பார்த்ததும் என் மனம் என்ன பாடு பட்டது தெரியுமா? அடேயப்பா! அப்படியே என் வயறு கலங்கி விட்டது! ஆனால் உங்களிடம் பேசவும் எனக்கு மனமில்லை. வாய் விட்டுக் கேட்போம் என்றாலும் நான் உங்களிடம் தோற்றவளாகி விடுவேன்! உங்களிடம் ஏன் நான் வலியு வந்து பேச வேண்டும் என்று தான் நினைத்தேன். என்றாலும் அந்தக் கறையைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் அதிகரித்துக் கொண்டே வந்தது. எங்கே என் திடம் குறைந்துவிடுமோ என்று கூட சஞ்சலப் பட்டேன். ஆனால் உங்களை அதைப்பற்றி கேட்டே ஆகவேண்டும் என்று முடிவு செய்து வாயைக் கூடத் திறந்து விட்டேன். பேசுவதற்குள் மறுபடியும் என் வைராக்கியம் ஞாபகத்திற்கு வந்தது.... ஆமாம், அந்தக் கறை என்ன?'' என்று ஓர் இளம் பெண்ணின் மென்மையான குரல் கேட்டது.

''அதுவா! அது ஒன்று மில்லை, ஆபீஸிற்குச் சிவப்பு மை போட்ட பேனாவை எடுத்துக் கொண்டு போகிறேன் அல்லவா? அந்தப் பேனாவின் மூடி எனக்குத் தெரியாமல் கழன்று, கீழ் பாகம் பாக்கெட்டின் மேல் சாய்ந்து விட்டது. ரொம்ப நேரம் வரை நான் பார்க்கவேயில்லை. மேல் மூடி பாக்கெட்டின் மேல் குத்தின படியே இருந்ததால், அதைப் பற்றி நான் நினைக்கவே இடமில்லை. அப்புறம் மத்தியான்னம் காபி சாப்பிடப் போகும் போதுதான் ராகவன் ''என்ன ஸார் இது! ஒரேயடியாய் இப்படியாகி விட்டதே!'' என்று கேட்டதும் பார்த்தேன்; பகீரென்றது. பேனாவின் கீழ்பாகத்தை எடுத்து, மேல் பாகத்தோடு சேர்த்து மூடினேன்..... வீட்டிற்கு வந்தால் நீ பயந்து போய் விடுவாய் என்று நினைத்தேன்; வலிய வந்து நீ பேச ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததே என்று என்னை யறியாமல் மகிழ்ந்தேன்; என்ன தான் சண்டை, சச்சர விருந்தாலும், மறுபடியும் யார் முதலில் பேசுவது என்றுதானே தம்பதிகளின் மனம் யோசித்துக் கொண்டிருக்கும்.... ஆனால் நீ என்னடா என்றால் கல் போன்ற மனத்தைக் கொண்டவளாய் திரும்பிக் கூடப் பார்க்காமல் இருந்து

விட்டாய். எனக்கு உன் மேலிருந்த கோபம் அதிகமாகி விட்டது.'' என்று ஓர் ஆண் குரல் கேட்டது.

''ஆ! அப்படியா நினைத்துக் கொண்டீர்கள்! நான் வெளியே பேசவில்லையே தவிர, என் மனம் பட்ட பாட்டை நீங்கள் எப்படி அறிவீர்கள். என்னை மாத்திரம் அந்த மாதிரி நினைக்காதீர்கள்..... நீங்கள் பார்க்காத சமயங்களில் எல்லாம் உங்களைப் பார்ப்பதும் உங்கள் உடம்பில், மார்பில், கைகளில் எங்காவது காயம், கியம் பட்டிருக்கிறதா என்று நான் ஒளிந்து கொண்டும், மறைந்து கொண்டும் பார்த்ததும் உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது ?'' இது பெண் குரல்.

''ஆமாம், அது தெரியாதா? என் மனைவி என்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறுள் என்று எனக்குத் தெரியாதா என்ன?'' என்று கூறிச் சிரித்தது ஆண் குரல்.

சிறிது நேரம் ஒன்றும் என் காதில் விழ வில்லை. பிறகு பெண் குரல்பேச ஆரம்பித்தது. அதைச் சொல்வதற்குள், இந்த இந்த அதிசயத் தம்பதிகளைப் பற்றி முன்னுரை கூறி விடுவது நல்லதல்லவா? விநாயகம் இந்த தேசத்தில் வாழ்ந்து வரும் பல்லாயிரக் கணக்கான நடுத்தர வகுப்பு குமாஸ்தாக்களில் ஒருவன். அப்படிப்பட்ட குமாஸ்தாக்களின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் மனைவிகளில் பரிமளம் ஒருத்தி. இருவரும் ஓரளவுக்கு மகிழ்ச்சியாகவே வாழ்க்கையை நடத்திக்கொண்டு போனுர்கள். நூற்றைம்பது ரூபாய் சம்பளம் பெறும் விநாயகம், தன் மனைவியின் மனம் கோணுமல் அவளுக்கு வேண்டியவைகளை எல்லாம் வாங்கிக் கொடுத்து வாழ்க்கையை இன்ப மயமாக நடத்திக்கொண்டு போனுன். கல்யாணம் ஆகி இரண்டு வருடங்களாகின்றன ; இதுவரை தம்பதிகள் சண்டை, சச்சரவு என்பதே இல்லாமல் வாழ்க்கைப் படகை ஓட்டிக்கொண்டு போனுர்கள். ஒருநாள் நடந்த சில சம்பவங்கள் அவர்களை மூன்று வார காலம் பிரித்து வைத்தன. அதற்குப் பிறகு இப்போதுதான் பேசுகிருர்கள். இனி....

''ஆமாம்! அன்றைக்கு ஆபீஸிற்கு டிபன் செய்து கொடுக்கவேயில்லையே நான். நீங்கள் அன்றெல்லாம் பட்டினியாகவா இருந்தீர்கள்? உங்களைப் பட்டினியாய் இருக்கச்சொல்ல நான் என்ன அப்படிப்பட்ட பாவியா? ஆனுல் நான் என்ன செய்வேன்! வீட்டில் அரிசி, பருப்பு ஒன்றுமே யில்லை. கையில் பணமுமில்லை. நானும் உங்களிடம் பேசுவதில்லை. வேறு என்ன செய்வது?.... யாரிடமாவது கடன் வாங்கிக் கொடுக்கலாம் என்று பார்த்தால், அதற்குள் உங்களுக்கு மணியாகிவிட்டது. நீங்கள் ஆபீஸிற்குப் போக இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறீர்கள்! அன்றைக்கு என்ன செய்தீர்கள்!'' என்று ஆவலோடு கேட்டாள் பரிமளம்.

''நீ தான் ஒன்றும் கொடுக்காமல் ஆபீஸிற்கு அனுப்பிவிட்டாய்! என் சிநேகிதர்கள் உன்னைப் போல அல்லவே! ஒவ்வொருத்தரும் 'என்னேடு சாப்பிட வரவேண்டும்' என்று உயிரை எடுத்துவிட்டார்கள். கடைசியில் ஒவ்வொருவரிடமும் கொஞ்சம் கொஞ்சம் வாங்கிச் சாப்பிட்டேன்........இந்த மாதம் ஐம்பது ரூபாய் தண்டச் செலவு ஆகிவிட்டது. இல்லாவிட்டால் என் அருமை மனைவி என்னைப் பட்டினி போட்டு வேடிக்கை பார்க்கமாட்டாள்........'' என்று கூறினுன் விநாயகம்.

''ஆமாம்! தண்டச் செலவு யார் பண்ணியது! உங்க அம்மாவும், தங்கையும் ஊரிலிருந்து வந்தால், அதற்கு

என்று செலவு பண்ணுமல் இருக்க முடியுமா?.... அது சரி. நான் உங்களை வேண்டுமென்று பட்டினி போட்டேன்'' என்று கோபத்துடன் கேட்டாள் பரிமளம்.

''போனது போகட்டும்........ ஆமாம் அன்றொரு நாள் நீ ஏதோ காரணத்தை முன்னிட்டு அழுது கொண்டிருந்தாயே! அது ஏன்? நீ அழுவதைப் பார்த்ததும், என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? ஏன். அழுகிருய் என்று கேட்கத்துடிக்கிறது மனம். ஆனுல் உன்னேடு நான் பேசுவதில்லையே! எப்படிக் கேட்பது! நீ என்னிடம் பேசாமல் இருக்கும் போது, நான் ஏன் உன்னிடம் வலியப் பேச வேண்டும்! ஆனுலும் மனம் அடித்துக் கொள்கிறது. பரிமளத்துக்கு என்னவோ, ஏதோ தெரியவில்லையே என்று நான் பட்ட பாடு உனக்குத் தெரிய இடமில்லை... ஆமாம் நீ ஏன் அழுது கொண்டிருந்தாய்! உன் கண்ணில் நீர் வடிந்தால், என் கண்ணில் இரத்தம் வடிகிறதே!....'' என்று பரிவோடு கேட்டான் விநாயகம்.

''ஓ! அதுவா! அது ஒன்றுமில்லை. அன்றைக்கு முன்நாள் விறகு மழையில் நனைந்துவிட்டது. மாடியில் வெயிலில் உலரட்டுமே என்று விறகைப் போட்டிருந்தேன்; அதை எடுத்து சமையலறையில் வைக்க மறந்துவிட்டேன். மழையில் நனைந்த விறகு ஒரேயடியாய்ப் புகைய ஆரம்பித்துவிட்டது. என் கண்ணில் ஒரேயடியாய் ஜலம் கொட்ட ஆரம்பித்துவிட்டது. எங்கே நீங்கள் அதைப் பார்த்துவிட்டு என்னமோ, ஏதோ என்று பயந்துவிடப் போகிறீர்களோ என்று கண்ணைத் துடைத்துக் கொள்கிறேன். அப்போது நீர் வடிவது நின்றபாடில்லை. நான் துடைக்கத் துடைக்க கண்ணீர் அதிகமாக வருகிறது. என்ன பண்ணுவது? உங்கள் கண்ணில் படாமல் இருக்கலாம் என்ருலோ, நீங்கள் சுவரைப் பார்த்து, ''காபியில் சர்க்கரை இல்லையே!'', ''நேற்றைய பேபரை யாரிடம் கொடுத்திருக்கிருய்?'' ''வாங்கி வந்த வெற்றிலையைப் பெட்டியில் போடுவதற்கென்ன?'' என்று சதா என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்....அது சரி. அன்றொரு நாள் நீங்கள் வரும் போது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு மிகவும் விசனமடைந்த முகத்துடன் வந்தீர்கள்! உங்களுக்கு அன்று என்ன உடம்பு! ஆனுல் உங்களுக்கு ஏதாவது உடம்பிற்கு வந்துவிட்டால் மற்ற வேலைகளைச் செய்யாமல், பேசாமல் படுக்கையை விரித்துக் கொண்டு தூங்கிவிடுவீர்கள். அன்று வழக்கம்போல் மற்ற வேலைகளைக் கவனிக்கவே, உங்கள் மனசுக்கு ஏதோ கஷ்டம் என்று நினைத்துக் கொண்டேன்...'' என்ருள் பரிமளம்.

''ஓ! அதுவா! ஒன்றுமில்லை. எங்கள் ஆபீஸிலிருந்து ஒருவர் விமான மூலம் மேனுடுகளைச் சுற்றிப் பார்த்து விட்டு வரக் கிளம்பினுர். என் சிநேகிதர் அவர். புறப்பட்டுப் போன இரண்டு, மூன்று மணி நேரத்தில் விமானத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டுவிட்டது.... எல்லாப் பிரயாணிகளுக்கும் ஆபத்து. விமானம் கீழே இறங்கினுல் தான் பிழைக்க முடியும். ஆனுல் விமானத்தைத் திடீரென்று பூமியில் இறக்கிவிட முடியுமா? நல்ல பரந்த வெளியாகப் பார்த்து இறக்க வேண்டும். அதற்குள் என்ஜின் வெடிக்காமல் இருக்க வேண்டுமே!.... இப்படியெல்லாம் செய்திகள் வந்தன. விமானம் என்னவாயிற்று என்பது தெரிவில்லை. நண்பர் என்னவானுரோ என்ற கலவரத்தோடு வீட்டிற்கு வந்தேன். அன்று முழுவதும் ஒரே பீதியாய் இருந்தது....அதுதான் அப்படியிருந்தேன்.... மறுநாள்

ஆபீஸிற்குப் போனதும் தான் தெரியவந்தது. விமானி தன்னுடைய சாதுர்யமான புத்தியினால் விமானத்தில் இருந்தவர்களை எல்லாம் ஒரு வழியாகக் காப்பாற்றிவிட்டான். அப்புறம் தான் எனக்கு உயிர் வந்தது... அது சரி. அன்றொரு நாள் நீ ரொம்ப உற்சாகமாய் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும், சதா புன்னகையுடனும் காட்சி அளித்தாயே! எதனால் உனக்கு அப்படி உற்சாகம் கரைபுரண்டு ஓடிவிட்டது? எனக்கே சந்தேகம் வந்துவிட்டது. ஏது! ஒரு பெண் தன் கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு பேசாமல் இருக்கும் சாலத்தில் இவ்வளவு சந்தோஷமாக இருப்பதாவது! இதில் ஏதோ ஒரு மர்மம் இருக்க வேண்டும்! ஒரு சமயம் என்னுடன் பேசுவதற்காக இப்படி சிங்காரம் செய்து என்னை மயக்கப் பார்க்கிறாள் போலும் என்று நினைத்துக் கொண்டேன். பேசுவாய், பேசுவாய் என்று காத்திருந்தேன். நீ பேசுகிற வழியாய்க் காணோம்....'' என்று விநாயகம் பேசிக் கொண்டே போக அதற்குள் பரிமளம் குறுக்கிட்டு, ''நான் ஒன்றும் உங்களிடம் வலியவந்து பேச வேண்டும் என்று விரும்பவில்லை. வேறு ஒரு காரணம் இருந்தது, அதனால் தான் அவ்வளவு சந்தோஷமாக இருந்தேன்....'' என்றாள்.

விநாயகம் மிகவும் ஆவலோடு, ''அது என்ன, சொல்லேன்'', என்றான். பரிமளம், ''அதுவா! அது ஒன்றுமில்லை. என் சிநேகிதி ரேவதி இருக்கிறாள் பாருங்கள், அவளுக்கு



ரொம்ப நாளாகக் கல்யாணம் ஆகாமல் இருந்து வந்தது. எத்தனையோ வரன்கள் பார்ப்பது. ஒன்று கூடப் பொருத்தமில்லாமல் போய்விடுவது, இப்படியே அவள் பருவம் எல்லாம் வீணுகக் கழிந்து வந்தது. இருபத்து ஐந்து வயதை எட்டிப் பிடித்து விட்டாள்.... பதினறு வயது முதலே அவளுக்குக் கல்யாணம் பண்ண முயற்சிகள் தொடங்கி விட்டார்கள்....! ஆனல் ஒன்ருவது பொருந்த வேண்டுமே? ஊஹஉம்.... கடைசியில் எப்படியோ ஒரு வரன் பொருந்திவிட்டது... கல்யாணமும் நிச்சயமாகி விட்டது. அதை என்னிடம் சொல்லிக் கட்டாயம் கல்யாணத்திற்கு நாலைந்து நாட்கள் முன்னடியே வந்து உதவி செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனுள். என் அத்யந்த சிநேகிதிக்கு இவ்வளவு நாள் இல்லாமல் திடீரென்று கல்யாணம் நடக்கப் போகிறது என்று கேள்விப் பட்டதும் எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஆகவே தான் அன்றெல்லாம் அவ்வளவு குஷியாக இருந்தேன்.... ஊம். அது சரி. அன்றொரு நாள் நீங்கள் ஒரு சிநேகிதரை அழைத்துக் கொண்டு வந்து என்னென்னமோ பேசிக் கொண்டிருந்தீர்களே! அவர் யார்! ஏதுக்காக நீங்கள் அவருக்கு ஏதேதோ உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தீர்கள்....'' என்று பரிமளம் கேட்டாள்.

''ஓ! அதுவா அது ஒன்றுமில்லை! என் சிநேகிதன் பாலு என்று ஒருத்தன் வாழ்க்கையில்



வெறுப்படைந்து விட்டான். இளங்கன்று அல்லவா! ஒரு சிறு கஷ்டம் கூட அனுபவித்ததில்லை அவன். இப்போது ஒரேயடியாய்ப் பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்து விட்டது. அவனுல் சமாளிக்க முடியவில்லை. அவனுக்குப் பொறுமையில்லை. ஆகவே எங்கேயாவது ஓடிப்போய் விடுகிறேன், குளத்தில் விழுந்து விடுகிறேன் என்று சொல்கிருனும். அவனுடைய மனைவி என்னிடம் சொல்லி அவரைச் சமானப்படுத்துங்களேன் என்று அழமாட்டாக் குறையாய் வேண்டிக் கொண்டாள்; அவனுடைய குழந்தைகளைப் பார்த்தாலோ, பரிதாபமாக இருக்கிறது. வீட்டில் இருக்கிற தரித்திரம் அவைகளுக்கு எப்படித் தெரியும்? ''அப்பா! ஆபீஸிலிருந்து வரும் போது முட்டாய் வாங்கிக் கொண்

டுவா!'' என்று கொஞ்சுகிறது ஒரு குழந்தை. இன்னென்று தெருவில் போகிற பலூன்கார னைக் கூப்பிட்டு ஒரு பலூனை வாங்கிக் கொண்டு பணத்தை கொடுப்பதற்குள் உடைத்து விட்டு மற்றொன்று வேண்டு மென்று அழுகிறது. இரண்டு பலூனுக்கும் சேர்த்து நான் பணம் கொடுத்து அனுப்பிவிட் டேன். மாதம் நூறு ரூபாய் தான் வாங்குகிருன். இந்தக் காலத்தில்போதுமா?...கடைசி யில் என்ன வழி என்று யோசனை செய்தான் போலிருக்கிறது. ஒன்று எங்காவது ஓடிப் போய் விடனும், அல்லது குளம், குட்டையாகப் பார்த்து இறங்கி விடனும் என்று முடிவு செய்து விட்டான்.... நான் அவனை ஒரு நாள் வீட்டிற்கு அழைத்து வந்து, ''நீ செத்துவிட்டால் உன் ஒருவனுக்குத்தான் விடிவு ஏற்படும். உன் மனைவியும், குழந்தைகளும் என்ன ஆவார் கள்? இப்போதாவது எப் படியோ சாப்பாடு கிடைக் கிறது, சாப்பிடுகிருர்கள்! நாளைக்கு நீ போய்விட்டால் அவர்கள் நடுத்தெருவில் தான் நிற்பார்கள். தற்கொலை செய்து கொண்டால் 'பட்டினிச் சாவு' என்று போட்டோ எடுத்து போட எந்தப் பத்திரிகைக்கார னும் முன்வர மாட்டான். ஏனென்ருல் நீ சாவதற்கு முன் ஞல் கூட பாதம் ஹல்வாவும், மசாலா தோசையும் சாப்பிட் டிருப்பாய் என்பது எனக்குத் தெரியும்........ ஆகவே தீர யோ சித்து முடிவு செய்! நான் வேண் டுமானல் யாரிடமாவது சொல்லிவேறே வேலை வாங்கித் தருகிறேன்'', என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பினேன். கடை சியில் எப்படியோ ஒரு வழி யாக அவன் சமாதானமடைந்து வாழ்க்கையை நடத்தி கொண்டு போக முடிவு செய்தான். அவன் மனைவி என்னைப் பார்க்கும் போ தெல்லாம் ''நீங்கள் செய்த உதவியை என்றும் மறக்க மாட் டேன் உங்களால்தான் அவர் மனம் மாறியது'' என்று கூறி வந்தனம் செலுத்துகிருள்........'' என்று விநாயகம் விளக்கினுன்.

* * *

நான் கடியாரத்தைப் பார்த் தேன். இரவு மணி பனிரெண் டிற்கு மேலாகிவிட்டது. காகித மும், பேனவும் அப்படியே மேசை மீது இருந்து என்னைப் பார்த்துச் சிரித்தன. கதை எழுத வேண்டுமென்றுதான் நான் உட்கார்ந்தேன். ஆனல் கீழேயிருந்த தம்பதிகளின் இன் பப் பேச்சுக்கள் என் கவனத் தைக் கவர்ந்தன; அதில் ஈடு பட்டு நான் எழுத வந்ததை மறந்து, என்னையறியாமல் பனி ரெண்டுமணி வரை தூங்காமல் இருந்து விட்டேன். தம்பதிகள் இதுவரை பேசாதவைகளை எல் லாம் இன்று ஒரேயடியாய்ப் பேசித் தீர்த்துக் கொண்டிருந் தார்கள். சண்டை போட்டுக் கொண்டு பேசாமல் இருந்த காலத்தில் நடந்தவைகளை எல் லாம் மனத்தில் ஞபகமாய் வைத்துக் கொண்டு சண்டை தீர்ந்த பிறகு ''அன்ரொரு நாள்....'' என்று ஒருவர் கேட்க, மற்றவர், ''ஓ! அதுவா!'' என்று அதைவிளக்க இப்படியே ஓயாமல் பேசிக் கொண்டிருந் தார்கள்; இன்னமும் அவர்கள் குரல் கேட்டுக் கொண்டிருக் கிறது. எனக்குத் தூக்கம் கண் ணைச் சுழற்றுவதால் அவர்கள் என்ன பேசுகிருர்கள்; என்று தெளிவாகவில்லை, ஆனல் கடை சியில் பரிமளம் கேட்டது மாத் திரம் என் காதில் விழுந்தது. ''சீமாட்டி டாக்கீஸில் நல்ல படம் ஒன்று ஓடுகிறதாம், நாளைக்கு அவசியம் போக வேண்டும்........'' என்ருள். ''நீ ஆசைப்பட்ட பிறகு அதை மறுக்க எனக்குத் தைரியம் ஏது!'' என்று விநாயகம் கொஞ் சலாகக் கூறினுன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அந்த நண்பரிடம் (விநாயகத்திடம்) நான் அளவளாவுவது அன்று தான். நான் முதலில் பேச ஆரம்பித்தேன்.

"என்ன சார்! இத்தனை நாள் பேசாததெல்லாம் நேற்று ஒரேயடியாய் பேசித் தீர்த்து விட்டீர்கள் போலிருக்கிறது. இரவு எத்தனை மணிக்குத் தான் பேச்சை முடித்தீர்கள்! மேலே ஒரு மனிதன் இருக்கிறானே என்பது கூடத் தெரியாமல் அவ்வளவு இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தீர்களே" என்று நான் குறும்பாகக் கேட்டதும், நண்பரின் அருகில் இருந்த பரிமளத்தின் முகம் வெட்கத்தால் சிவக்க, உடனே தலையைக் குனிந்தபடி, தன் கணவனைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டே உள்ளே போய் விட்டாள்.

விநாயகம் சொன்னான்: "ஆமாம், சார்! தம்பதிகள் சண்டை போட்டுக் கொண்டாலும், எப்போது மற்றவரிடம் பேசுவோம் என்று தான் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.... ஆனால் யார் முதலில் பேசுவது என்பதில் தான் கௌரவம் வந்து குறுக்கிகிறது.... அதனால் ஒருவரோடு ஒருவர் பேசுவது தள்ளிக் கொண்டே போகிறது. இதற்குள் பல சம்பவங்கள் நிகழ்ந்து விடும். அதை அறிந்து கொள்ள மனம் துடிக்கும். ஆனால் கேட்கவோ கௌரவம் குறுக்கிடுகிறது. கடைசியில் யாரோ உங்களைப்போன்ற ஒருவர் குறுக்கிட்டு தம்பதிகளைப் பேசவைக்கிறார்கள்.... சண்டை, சச்சரவு; அதற்குப்பிறகு சரஸ, சல்லாபம். இது தான் தாம்பத்தியம். இதெல்லாம் கட்டை பிரம்மசாரியாகிய உங்களுக்கு எங்கே தெரியப்போகிறது?..." என்று எனக்குத் தெரியாத ரகசியத்தை வெளியிட்டு விட்டவன் போல் பெருமையோடு என்னைப் பார்த்தான்.

"நான் கட்டைப் பிரமசாரி என்று யார் உங்களிடம் சொன்னதாம்?" என்று கேட்டேன்.

லோட்டஸ் கிராஸ் வேர்ட்ஸ்

மாதந்தோறும் சராசரி

ரூ. 70,000க்கு மேல் பரிசுகளைப் பணமாகவே தரப்படுகிறது:

தமிழகத்தின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக நிற்கும் தலை சிறந்த, போட்டி ஸ்தாபனம் இது.

பரிசுகளை எல்லாம் 'மணியார்டர்' மூலம் பணமாகவே அனுப்பித் தருவதில் போட்டி உலகின் வழி காட்டியாக விளங்குகிறது. **"லோட்டஸ் கிராஸ் வேர்ட்ஸ்"**

நாடெங்கும் கலெக்டர்கள் தேவை:

விவரங்களுக்கு; மானேஜர்:

லோட்டஸ் கிராஸ் வேர்ட்ஸ்

பிரபாத் டாக்கீஸ் பில்டிங்ஸ், சென்னை-1.

"யாரோ சொன்னார்கள். நீங்கள் பிரமசாரி அல்லவா?" என்று ஆவலோடு கேட்டான் விநாயகம்.

"நான் கல்யாணமானவன் தான் ஸார்! ஆனால் நீங்கள் சற்று முன்னால் சொன்னீர்களே, தாம்பத்திய ரகசியம், சண்டை, சச்சரவு; ஸரஸம்; சல்லாபம் அது தெரியாமல் போய்விட்டது எனக்கு. மனைவியோடு ஏதோ சிறு விஷயமாகச் சண்டை போட்டேன். அது பெரிய சண்டையாகி விட்டது, கடைசியில் அவளை ஊருக்கு அனுப்பிவிட்டு, நான் இங்கே வந்து விட்டேன். இப்போது தான் எனக்குத் தெரிகிறது. தம்பதிகள் என்று இருந்தால், சண்டையும் இருக்கும், சல்லாபமும் இருக்கும் என்று இப்போது தான் உணர்கிறேன்," என்றேன் நான்.

"அப்படியா சேதி! அடபாவமே! உங்களை நினைத்து உங்கள் மனைவி பாகாய் உருகி விட்டிருப்பாளே!.... சரி. சரி. உடனே புறப்படுங்கள் ஊருக்கு. இனி, கொஞ்சம் கூடத் தாமதிக்கக் கூடாது. மனைவியை விரட்டி விட்டு வந்த மகானுபாவர் என்று தெரிந்திருந்தால் உங்களுக்கு என் வீட்டில் ரூமே கொடுத்திருக்க மாட்டேன்..... நீங்கள் கூட அதனால் தான் நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே போகிறீர்கள், எனக்கே சந்தேகம் ஏற்படும். ஏது இந்த மனிதன் வாழ்க்கையில் ஏதோ ரகசியம் இருக்க வேண்டும். அதனால் தான் இப்படி இளைத்துக் கொண்டே போகிறார் என்று நினைப்பதுண்டு.... சரி. சரி. பனிரெண்டு மணி வண்டியைப் பிடிக்கப் புறப்படுங்கள்," என்று அதிகாரக் குரலில் கட்டளையிட்டான்.

நான் என் மனைவியைப் பார்க்க அடுத்த ரயிலிலேயே ஊருக்குப் பயணமானேன் என்று கூறத் தேவையில்லை.

தீபாவளி மலர் கிடைக்கவில்லை என்று குறைபட்ட வாசகர்களுக்கு மகிழ்ச்சிதரும் அறிவிப்பு.

'உமா' பொங்கல் மலர்

ஜனவரி இதழ் பொங்கல் மலராக 12-1-54ல் வெளிவருகிறது.

தீபாவளி மலரைவிட அதிகமான சிறப்புடன் ஏராளமான பக்கங்கள்.

விலை எட்டணா தான்

பிரதிகளுக்கு உள்ளூர் ஏஜண்டிடம் இப்பொழுதே பதிவு செய்துக் கொள்ளவும்.

விபரங்களுக்கு :

மானேஜர் : **'உமா'** த. பெ. நெ. 1377. சென்னை-1.

புலி வந்தது

ரா. ஆறுமுகம்

"முயிலு, மயிலு! இன்னுமா தூக்கம்? விடிஞ்சு எவ்வளவு நேரமாச்சு பாரு" என்ற சத்தத்தைக் கேட்டு மயிலம்மா வாரிச் சுருட்டி எழுந்தாள். எப்போதுமே விடியற் கருக்கலில் வழக்கமாக எழுந்துவிடும் அவள், அன்று என்னமோ அயர்ந்துவிட்டாள்.

"வட்டியிலே பழைய கஞ்சி ஊத்தி வைச்சிருக்கேன். பல்லை விளக்கிட்டு அதைக் குடிச்சுட்டு சீக்கிரம் போ. வெய்யிலுக்கு முன்னே பாதி தூரமாவது போனுத்தானே நல்லா யிருக்கும்" என்று துரிதப்படுத்தினுள் அவளுடைய பாட்டி.

மளமளவென்று தன் காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு மத்தியானச் சாப்பாட்டிற்கும் தயாராகக் கட்டி வைத்திருந்த சாதத்தை எடுத்துக்கொண்டு பட்டியில் அடைத்திருந்த ஆடுகளையெல்லாம் ஓட்டிக் கொண்டு வேகமாகக் கிளம்பிவிட்டாள் மயிலம்மா. அந்தக்கிராமத்திலிருந்து ஐந்து மைல் தூரம் சென்ருல்தான் பசும் புல் தரையைப் பார்க்கலாம். அது மலையடிவாரம். செழிப்பான பிரதேசம். அங்கே தான் அநேகமாக சுற்று வட்டாரத்திலுள்ள கிராம மக்களெல்லாம் தங்கள் ஆடு மாடுகளை ஓட்டி வந்து மேய்ப்பது வழக்கம்.

மயிலம்மாளுக்கு சுமார் பதினறு வயதுதானிருக்கும். சிறு வயதிலேயே அவளுடைய பெற்ரேர்கள் இலங்கைக்கு கூலியாட்களாகப் போயிருந்த இடத்தில் இறந்துவிட்டார்கள். ஐந்து வயதிலிருந்து அவள் தன் பாட்டியின் ஆதரவில்தான் வளர்ந்து வந்தாள். மயிலம்மாளின் தகப்பனுக்கு ஒரு வீடும், காடும், ஒரு ஜதை காளை மாடும், வண்டியும், சில ஆடுகளும்தான் சொத்தாக இருந்தது. அதிலிருந்து வரும் வரும்படியைக் கொண்டுதான் மயிலம்மாவும் அவள் பாட்டியும் தங்கள் ஜீவனத்தை நடத்தி வந்தார்கள்.

வண்டி ஓட்டுவதற்கு ஒரு ஆளைப் போட்டிருந்தாள் பாட்டி. அவன் அந்தக் கிராமத்தில் உள்ள வயல்களுக்கு யாரும் குப்பை, உரம் கொண்டுபோய்க் கொட்ட வேண்டியிருந்தால் வாடகைக்குப் போய் வந்து வாடகையை பாட்டியிடம் கொடுப்பான். ஆடுகளை மேய்ப்பதற்கும் ஒரு ஆளை ஏற்படுத்தியிருந்தாள். ஆனல் மயிலம்மா பெரிய பெண் ஆனதும் அவளே அந்த வேலையைச் செய்ய ஒப்புக்கொண்டு விட்டாள். அன்று முதல் அவள் தினமும் அதிகாலையில் எழுந்து ஆடுகளை ஓட்டிக்கொண்டு புறப்பட்டு விடுவாள். நல்ல புல் தரை உள்ள இடங்களாகப் பார்த்து மேய்த்துவிட்டு மாலையில் இருட்டுவதற்கு முன் திரும்பி விடுவாள். அவளைப் போல எத்தனையோ சிறுமிகளும் சிறுவர்களும் அந்த இடத்திற்கு தங்கள் தங்கள் ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு வருவார்கள். அவர்களில் சிலர் மயிலம்மாளுக்குப் பழக்கமாகி விட்டார்கள். அவர்களிடம் தன் வீட்டுக் கதைகளை யெல்லாம் சொல்லுவாள். அவர்களும் தங்கள் வீட்டு விஷயங்களைச் சொல்லுவார்கள். மயிலம்மாவின் பாட்டி அவளைத் தன் சொந்த மகள் போலவே கருதி அன்போடு

ஆதரித்து வந்தாள். மயிலம்மா ளுக்கும் தன் பாட்டியின் பேரில் அளவுகடந்த பிரியம்.

மயிலம்மாவின் தகப்பன் இறக்கும்போது சுமார் ஐம்பது ஆடுகள் தானிருந்தன. இப்போது அவை நூற்று ஐம்பதாகப் பெருகிவிட்டன. ஒவ்வொரு நாளும் ஒரே இடத்தில் ஆடுகளை மேய்த்து வருவதில் அவளுக்கு அலுப்புத் தட்டியது. ஒரு நாளைக்காவது மலையின் மேல் ஆடுகளை யெல்லாம் ஓட்டிக் கொண்டு போய்வர வேண்டுமென்று வெகு நாட்களாகவே அவள் மனதில் ஒரு ஆவலிருந்தது. அதைத் தன் போன்ற மற்ற பெண்களிடம் சொன்னாள். அவர்களும் அதற்கு இணங்கினார்கள். அவர்கள் மேய்த்த இடம் மேற்குத் தொடர்ச்சி மலையின் சாரல் தான். பெரிய மரங்களும், ஆழமான வாய்க்கால்களும், பல இடங்களில் பயங்கரமான காடுகளும் கொண்ட பிரதேசம். அந்த இடத்திலிருந்து இருபது மைல் தூரத்தில்தான் கொடைக் கானலும் இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஒருநாள் மயிலம்மாளும் அவள் சிநேகிதிகள் இருவரும் தங்கள் ஆடுகளை யெல்லாம் அடிவாரத்திலிருந்து மலையின்மேல் ஓட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். முந்நூறு ஆடுகளடங்கிய பெரிய மந்தையை அவர்கள் நடத்திக் கொண்டுசென்றார்கள். போகும் வழி யெல்லாம் ஆடுகள் இரு பக்கங்களிலு மிருந்த செடி, கொடிகளை இங்கு மங்கும் ஒடிக் கடித்துத் தின்று கொண்டே சென்றன.

அவர்களுக்கு எதிரில் மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த ஒருவன் அந்தப் பெண்களைப் பார்த்து, "இதென்ன ஆச்சரியமாயிருக்கே. இன்னைக்கு என்ன விசேஷம். ஆடுகள் மேலே புறப்பட்டுவிட்டதே! புலி வேட்டைக்குப் போகிறீர்களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான். அவன் மயிலம்மாளுக்குத் தெரிந்தவன் தான்.

"என்ன நாகப்பா இப்படிச் சொல்லுறே? மலை மேலே புலி பயம் ஜாஸ்தியா?" என்று பீதியோடு கேட்டாள்.

"ஏன், உனக்கு இத்தனை நாளும் தெரியாதோ. நேத்துக் கூட ஒரு கன்னுக் குட்டியை அடித்து இழுத்துக் கொண்டு போயிட்டதாகச் சொன்னாங்களே. அதுனாலேதான் யாருமே மலைமேலே ஆடு மாடுகளை ஓட்டிட்டு வந்ததில்லை. நீங்க என்னமோ துணிஞ்சு புறப்பட்டிட்டிங்க. போயி பாத்திட்டுத் தான் வாங்க," என்று சொல்லி விட்டு அவன் வேகமாக நடந்து சென்றான். அவனோடு அவள் பேசிக் கொண்டிருக்கையில் ஆடுகள் ஒரு பள்ளத் தாக்கில் இறங்கிப் போய்க் கொண்டிருந்தன. மற்ற பெண்களும் ஆட்டின் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள். மயிலம்மா ஓடோடியும் சென்று அவர்களிடம் விஷயத்தைச் சொன்னாள்.

"அடி போடி பைத்தியம். அவன் சொன்னானுன்னு நீ பயப்படுறியே. பட்டப்பகலிலே புலி வருமா. ரெண்டு நாளைக்கு முன்னாலே ராத்திரியிலே எங்கிருந்தோ கன்னுக் குட்டி தவறி இந்த மலைப் பக்கத்திலே வந்ததாம். அதைத்தான் புலி அடிச்சிட்டதாகச் சொல்லிக்கிட்டாங்க" என்றாள் அந்தப் பெண்களில் ஒருத்தி.

"எனக்கென்னமோ பயமாத் தானிருக்கு. நாம ரொம்ப ஜாக்கிரதையாத்தான் இருக்கணும். ஆடுகளை அடிக்க வரும் புலி நம்ம மேலேயும் பாய்ஞ்சா என்ன செய்யிறது?" என்று தன் பயத்தை வெளியிட்டாள் மயிலம்மா.

''அப்படி வரும்போது பாத்துக்கலாம். நீ சும்மா தைரியமா வா. இல்லையானா இப்படியே திரும்பிப் போயிடலாமா. ஆடுகளை மடக்கி ஓட்டவா?'' என்று கேட்டாள் இன்னொருத்தி.

''வேண்டாம், வேண்டாம். இவ்வளவு தூரம் வந்திட்டுத் திரும்பிப் போகலாமா. இன்னைக்கு ஒருநாள் போய்த்தான் பாக்கலாமே'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் மயிலம்மா.

ஆட்டு மந்தையும் கும்மாளத்தோடு குதித்து மலைமேல் ஏறிக்கொண்டிருந்தது. இரண்டு மூன்று மலைகளைக் கடந்ததும் ஒரு சமவெளிப்பிரதேசம் தென்பட்டது. புல்லும் மண்டிக் கிடந்தது. சற்று தூரத்தில் உயரமான பாறையிலிருந்து ஒரு நீர் வீழ்ச்சியும் விழுந்துகொண்டிருந்தது. அந்த இடம்தான் மேய்ச்சலுக்குச் சரியான இடமென்று அந்தப் பெண்கள் தீர்மானித்து அங்கேயே ஆடுகளை மேயவிட்டார்கள். தாங்கள் கொண்டு வந்திருந்த கட்டுச் சாத மூட்டைகளை மரக்கிளைகளில் கட்டித் தொங்கவிட்டதும், மரத்தின் நிழலில் பெண்கள் மூவரும் நடந்துவந்த களைப்பின் மிகுதியால் சோர்ந்து போய் அமர்ந்தார்கள். சுற்றிலும் கண்ணுக்கு எட்டிய வரையில் ஒரே பசுமையாகவும் மரங்களடர்ந்தும் குளுகுளுவென்று இருந்த அந்த இடம் அவர்கள் மனதிற்கு பெரிய ஆறுதலாயிருந்தது. மலை உச்சியில்

அவர்களிருந்தபடியால் அங்கேயிருந்தபடியே அடிவாரத்தையடுத்திருந்த ஒரு பெரிய கிராமம் அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது. பெரிய பெரிய வீடுகள் எல்லாம் சிறு குடிசைகள் போல் காட்சியளித்தன.

"அந்த ஊரில்தான் நாகப்பன் இருக்கிருன். இன்னேரம் அவன் ஊர்போய்ச்சேர்ந்திருப்பான்" என்ருள் மயிலம்மா.

"யாரடி அந்த நாகப்பன். உன்னை வழியில் கண்டு பேசினுனே, அவன்தானே. அவனை உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் அவளுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த குருவம்மா.

"அவன் எனக்கு ஒரு வகையில் சொந்தம் தாண்டி. எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவான். எங்க பாட்டிக்கு அவன்பேரிலே ரொம்ப பிரியம். அவளுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் அவன் வாங்கி வந்து கொடுப்பான். நான் தினமும் வரும் போதெல்லாம் அந்த ஊரைத் தாண்டித்தானே வரணும். அப்போ அவனும் என் கண்ணில் படுவான்" என்ருள் மயிலம்மா.

"ஓஹோ, அப்படிச் சொல்லு. அதனுல்தான் அவன் உன்னேடு அவ்வளவு பிரியமாகப் பேசினுன் போலிருக்குது. அது சரி, அவன் இந்த நேரத்தில் மலைமேல் எங்கே போயிட்டு வந்தான்?"

"இங்கே யிருந்து இன்னும் மூனு மைல் தூரத்திலே ஒரு கிராமம் இருக்குதாம். அங்கே அவனுக்குத் தெரிஞ்சவுங்க இருக்கிருங்களாம். அவுங்களைப் பாக்க நேத்துப் போயிருப்பான். ராத்திரி அங்கே தங்கிட்டு அதிகாலையிலே புறப்பட்டு வர்ருன் போலிருக்கு" என்ருள் மயிலம்மா.

"அவனுக்குக் கல்யாணம் ஆகிட்டதா?" என்று கேட்டாள் இன்னெரு பெண்—அழகம்மா.

"இன்னும் ஆகலை. அவனுக்கு வயசும் ரொம்ப இருக்காதே. இருபதுதானிருக்கும். அதுக் குள்ளேயா கல்யாணம் செய்வாங்க?" என்ருள் பதிலுக்கு மயிலம்மா.

"சரியாய் போச்சு போ. அவன் இப்பவே ஒரு தினுசாத் தானே திரியுருன். எனக்கும் அவனுக்கும் ஒருநாள் சண்டை கூட வந்திட்டதே" என்ருள் குருவம்மா.

"சண்டையா அதென்ன. இத்தனை நாளும் என் கிட்டேச் சொல்லலையே. அவனை ஏற்கனவே உனக்குத் தெரியுமா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மயிலம்மா.

"ஏன் தெரியாது. அவனும் அங்கே நாமெல்லாம் ஆடு மேய்க்கிற இடத்திலேதானே மாடுகளை மேய்க்க வருவான். ஒருநாள் நான் தனியா மாரியம்மன் கோயில் படியிலே படுத்திருக்கும்போது என் பக்கத்திலே வந்து 'குருவம்மா வெத்திலை இருக்கான்'னு கேட்டான். 'நான் வெத்திலை போடுற பழக்கமில்லை'ன்னு சொன்னேன். சரி, நான் தர்றேன் இப்ப. போட்டுக்கிறியா'ன்னு கேட்டான். 'உன் கிட்டே வெத்திலையிருந்தா என்னை ஏன் வந்து கேக்கிறே'ன்னு கோபமாச் சொன்னேன். 'கோவிச்சுக்காதே, சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டேன்'னுன். 'உனக்கு உடம்பு எப்படி இருக்குன்னு' நான் முறைச்சுப் பாத்தேன். சிரிச்சுக் கிட்டே போயிட்டான். இனி வந்தா சரியாப் புத்தி சொல்லியனுப்பனுமின்னு இருக்கேன்" என்ருள் குருவம்மா.

"அடடே, அவ்வளவு தூரத்துக்கு அவன் மிஞ்சிட்டானு.

ரொம்ப நல்லவனுக்குமின்னு நெனெச்சு இருந்தேனே. என் கிட்டேப் பேசும்போதெல்லாம் எவ்வளவு பணிவாப் பேசுறுன் தெரியுமா?'' என்று அவனைப் பற்றி சற்று உயர்வாகச் சொன்னுள் மயிலம்மா.

''வெளிப் பார்வையை வைச்சு யாரையும் மதிச்சிடக் கூடாது. நெருங்கிப் பழகினுத் தான் தெரியும். நான்கூட நாகப் பனைக் கவனிச்சிருக்கேன். அவன் ஒரு தினுசுதான்'' என் ருள் அழகம்மா.

''நீங்க சொல்லுறதையெல் லாம் பாத்தா இனி நான்கூட அவனிடம் அதிகம் பேச்சு வைத் துக் கொள்ளாமே இருக்கிறது தான் நல்லதுன்னு தெரியுது''.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே ஆட்டு மந்தையிலிருந்த சில ஆடுகள், மேய்ந்துகொண்டே அடுத்த மலைக்கு ஏறிவிட்டன. அங் கிருந்து அவைகள் மற்ற ஆடு களைப் பார்த்து சத்தமிட்டன. அதைக் கவனித்த மற்ற ஆடு களும் அங்கே போக முயற்சித் தன. பேச்சு சுவாரஸ்யத்தில் இதையெல்லாம் மயிலம்மா கவ னிக்கவில்லை. அழகம்மா மட் டும் பார்த்துவிட்டு எழுந்து ஓடி ஞள். தூரத்தில் போய் மேய்ந்த ஆடுகளை யெல்லாம் மடக்கி ஒட்டி வந்தாள். தனித்தனி யாகச் சிதறிப்போய் மேய்ந்த வைகளையும் ஒன்று சேர்த்து விட்டாள். நரியோ, புலியோ, வேலி ஓரங்களில் மறைந்து இருக்கிறதா வென்று ஒரு பார் வையும் சுற்றிப் பார்த்தாள். ஆபத்து ஏதுமில்லை யென்று தெரிந்து தைரியமாக வந்து மறுபடியும் முன்போலவே மரத் தடியில் அமர்ந்தாள்.

''ஏண்டி குருவம்மா, ரொம்ப விஷயம் தெரிஞ்சவ மாதிரி எல் லாச் சேதியும் சொல்லுறியே. இவ்வளவும் எங்கே கத்துக் கிட்டே?'' என்று ஆவலாகக் கேட்டாள் மயிலம்மா.

''இதைக் கத்துக்கவா வேணும்? மத்த பெரிய பெண் கள் பேசிக்கிறதிலிருந்து தெரிஞ்சு கொள்ள வேண்டியது தான். ஒவ்வொரு விஷயத்தை யும் நம்ம சொந்த அனுபவத்தி லிருந்து கத்துக்க முடியுமா?'' என்ருள் குருவம்மா.

''என்னதானிருந்தாலும் குரு வம்மா நம்மளையெல்லாம் விடப் பெரியவளில்லையா. நமக்குத் தெரியாத எவ்வளவோ விஷ யங்க அவளுக்குத் தெரியும்'' என்ருள் அழகம்மாள்.

''சே, சே, அப்படியெல்லாம் உசத்திப் பேசாதிங்க. எனக்கு என்ன ரொம்பத் தெரிஞ்சு போச்சு. வெறும் பேச்சுப் பேசு றவ காரியத்திலே சோடையாத் தானிருப்பா. மயிலம்மாவைப் போல மௌனமா யிருக்கிறவ காரியத்திலேயே கண்ணு யிருப்பா'' என்று கிண்டலாகச் சொன்னுள் குருவம்மா.

''அதென்னமோ நிஜந்தான். நாகப்பனும் இவளும் எத்த னையோ நாள் தனியாக நம்ம மாரியம்மன் கோயிலுக்கு முன் னலே நின்னு பேசிக்கிட்டிருந் ததை நானே பாத்திருக்கி றேனே. இப்ப நம்மகிட்டே அவனைப் பத்தித் தனக்கு ஒண் ணுமே தெரியாதது போலச் சொல்லுறுளே. இவளும் அவ னும் என்னென்ன பேசி முடிச் சிருக்கிறுங்களோ, யாருக்குத் தெரியும்'' என்ருள் வேடிக்கை யாக அழகம்மாளும்.

''நீங்க என்ன நினைச்சுக்கிட் டாலும் சரி. நான் அவன்கூட எப்பவும் தாராளமாத்தான் பேசுவேன். என்னு அவன் எனக்கு ஒரு வழியிலே அத்தை மகன். என் கிட்டே அவனும் தப்பா ஏதும் பேசமாட்டான். ஒரே ஒரு தடவைதான் உனக்கு எப்ப கல்யாணம் அப்படின்னு

கேட்டான். அதைப் பத்தி உனக்கு என்ன கவலே. வேறே பேச்சு இருந்தாப் பேசு. இதையெல்லாம் என் கிட்டே வைச்சுக்காதேன்னு சொன்னேன். அந்தமட்டோடு அவனும் நிறுத்திக்கிட்டான். அவ்வளவுதான்'' என்ருள் மயிலம்மா.

''மெதுவா கல்யாணப் பேச்சை அவன் ஏன் எடுக்கணும். அவ்வளவு தூரத்துக்கு இவளும் இடம் குடுத்துத்தானே பேசியிருப்பா. இதிலிருந்தே அவனுக்கும் இவளுக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தமிருக்கிறது தெரியுதில்லேயா! இதிலேயெல்லாம் ஒன்னும் குத்தமில்லே மயிலம்மா. வயசு காலம் வந்திட்டா இப்படியெல்லாம் பேச்சு வரத்தான் செய்யும்'' என்ருள் விளேயாட்டாக அழகம்மா.

''சரி, சரி, உன் சந்தேகப்படியே வேணு மானுலும் வைச்சுக் கொள்ளேன். நான்தான் கேக்கிறேன். நம்ம பக்கத்துக் கிராமத்திலே இந்த நாகப்பனே விட நல்லவன் யாரும் இருக்கானு? எனக்கென்னமோ அவன் நல்லவனுகத்தான் படுகிறது'' என்று தன் மனதிலுள்ளதையும் இலேசாக வெளியிட்டாள் மயிலம்மா.

''அப்படி வா வழிக்கு. சரி, கல்யாண ஏற்பாடுகள் எப்போது?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் குருவம்மா.

''அதுக்கும் காலம் வந்தால் தன்னுலே நடந்து விட்டுப் போகுது. நான் ஏன் கவலேப் படணும். என் பாட்டி யிருக்கிற வரை எனக்குக் கவலே இல்லே'' என்ருள் மயிலம்மா.

பேச்சு சுவாரஸ்யத்தில் மறுபடியும் ஆடுகள் பல இடங்களுக்கும் போனதை அவர்கள் கவனிக்கவில்லே. சற்று தூரத்தில் கும்பலாக மேய்ந்து கொண்டிருந்த ஆடுகள் திடீரென்று எதையோ பார்த்து வெருண்டு ஓடியது. பக்கத்தில் நின்ற மற்ற ஆடுகளும் துள்ளிக் குதித்தன. அவைகளெல்லாம் மயிலம்மாவின் ஆடுகள். அதைக் கண்டதும் அவள் பதறி விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள். ஆடுகள் மிரண்டு வந்த பக்கம் கவனித்

தாள். கோரப் பற்களைக் காட்டிக் கொண்டு ஒரு புலி புதருக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தது. அதன் கால்களுக்கு அடியில் ஆட்டுக் குட்டி சவமாகக் கிடந்தது. "ஐயோ! புலி, புலி!" என்று கதறிக் கொண்டு ஓடி வந்தாள். பயத்தாலும், கால்கள் பின்னிக் கொண்டதாலும் ஒரு இடத்தில் இடறி விழுந்து விட்டாள். அதைக்கண்ட அவள் சிநேகிதிகள் இருவரும், தங்கள் பக்கத்தில் கிடந்த இரண்டு தடிகளையும் எடுத்துக் கொண்டு பெரிய சத்தம் போட்டுக் கொண்டு மயிலம்மாள் விழுந்த பக்கம் ஓடினார்கள். அதற்குள் புலியும் அந்த ஆட்டை வாயில் கவ்விக் கொண்டு ஓடி மறைந்து விட்டது. மயிலம்மாளுக்கு மயக்கம் போட்டு விட்டது. சிநேகிதிகள் இருவரும் அவளைத் தூக்கி நிறுத்தி கைத்தாங்கலாக மரத்தடிக்கு அழைத்து வந்தார்கள். நிழலில் படுக்க வைத்து தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் அவளுக்கு மயக்கமும் தெளிந்தது. "புலி, புலி, ஐயோ. என் ஆடு" என்று அலறினாள். "பயப்படாதே மயிலம்மா புலி ஓடிட்டது. ஆடு போனால் போகட்டும். நல்ல வேளை நீ தப்பினாயே" என்று அந்தப் பெண்கள் அவளுக்கு ஆறுதல் சொன்னார்கள். அவளுக்கு இன்னும் நடுக்கம் நிற்கவில்லை.

"நான் போனாலும் பரவாயில்லையே. அருமையா வளர்த்த என் ஆடு போயிட்டதே" என்று அழுதாள்.

"நான்தான் நீங்களெல்லாம் இங்கே வரும்போதே சொன்னேனே, கேட்டிங்களா? நல்ல வேளை உங்களுக்கு ஒன்னும் ஆபத்து இல்லாமல் தப்பினது கடவுள் செயல்தான்" என்று சொல்லிக் கொண்டே அவர்கள் முன் வந்து நின்றான் நாகப்பன்.

"நாகப்பா, நீ எப்படி இங்கே வந்தே, உன் ஊருக்குப் போகலையா" என்று எழுந்து உட்கார்ந்து கேட்டாள் மயிலம்மா.

"உன்னை வழியில் பாத்தப்புரம் எனக்கு போக மனம் வருமா. இங்கே உனக்கு ஏதாவது ஆபத்து வருமின்னு எனக்குத் தெரியும். அதுனாலே தான் நான் உங்க பின்னாலேயே வந்துட்டேன்" என்றான்.

"அப்படியானு இவ்வளவு நேரமும் எங்கே யிருந்தே?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் மயிலம்மா.

"இதோ இந்தப் புதருக்குப் பின்னலே தான் மறைஞ்சு உக்காந்திருந்தேன். நீங்க மூனு பேரும் என்னைப் பத்திப் பேசின தெல்லாம் கேட்டுக்கிட்டுத்தானிருந்தேன்".

குருவம்மாளுக்கும், அழகம்மாளுக்கும் அதைக் கேட்டதும் முகம் வெட்கத்தால் சிவந்தது.

"நீங்க ரெண்டு பேரும் என்னைப் பத்தி குறைவாப் பேசினதுக்கு நான் கோவப்பட மாட்டேன்" என்று சிரித்துக் கொண்டே அவர்களைப் பார்த்துச்சொன்னுன் நாகப்பன்.

"அழகம்மா, வாடி போகலாம். நம்ம ஆடுகள் எல்லாம் எங்கேயோ ஓடுது. புலி மறுபடியும் வந்திடப் போகுது" என்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு குருவம்மா அந்த இடத்தை விட்டு அகன்ருள்.

"சமயம் தெரிந்து நடந்துக்கிறதுலே குருவம்மா கெட்டிக்காரிதான்" என்று சிரித்துக் கொண்டே சொன்ன நாகப்பன் மயிலம்மாளின் எதிரில் உட்கார்ந்தான்.

"நீ இங்கே இருந்துமா என் ஆடுகளிலே ஒன்னு புலி வாய்க்கு இரையாகணும்?" என்று பரிதாபமாகக் கேட்டாள் மயிலம்மா.

"நான் இங்கே வந்த நோக்கமே புலியினுல் உனக்கோ உன் சிநேகிதிகளுக்கோ, உன் ஆடுகளுக்கோ வரும் ஆபத்தைத் தடுக்கத்தான், ஆனு நீங்க பேசிக்கிட்டிருந்ததையே ரசிச்சுக் கேட்டுக்கிட்டிருந்ததிலே புலி வந்ததையே கவனிக்கலே. அது போனுல் போகட்டும். இப்படி நீயும் நானும் தனியாச் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா?" என்று விளையாட்டாகச் சொன்னுன்.

"ஓஹோ நீ இங்கே வந்த நோக்கம் இப்பத்தான் எனக்குத் தெரியுது. இதுக்காகவா இவ்வளவு சிரமப்பட்டு வந்தே. ஆனு என் குணம் உனக்குத் தெரியுமில்லையா?" என்று கோபம் கலந்த குரலில் கேட்டாள்.

"தெரியும் மயிலம்மா, நீ எதுக்குமே இடம் குடுத்துப் பேசமாட்டே என்கிறது எனக்கு நல்லாத் தெரியும். இன்னைக்கி ரெண்டிலே ஒன்னு கேட்டு விடுறதுன்னு தீர்மானிச்சுத்தான் வந்தேன்" என்றுன் உறுதியாக.

"உனக்குக் கொஞ்சம் கூட முன்யோசனை இல்லை நாகப்பா. என்னேடு கூட இந்த ரெண்டு பெண்களும் இருக்கிறபோது நீ எப்படி வந்து பேசலாம். அவுங்க என்ன நினைச்சுக்குவாங்க. ஊரெல்லாம் தமுக்கடிச்சிடமாட்டாங்களா?"

"அவுங்களைப் பத்தி நீ கவலைப்படாதே. என் விஷயத்திலே அவுங்க தலையிடவே மாட்டாங்க. ஏன்னு, அவுங்க ரெண்டு பேருக்கும் உள்ள காதலர்கள் ரெண்டு பேரையும் எனக்கு நல்லாத் தெரியும். எத்தனையோ தடவை அவுங்க தனியாயிருந்து பேசிய போதெல்லாம் நான் பாத்திருக்கிறேன்!"

> ஒரு வேலையை நீங்கள் செய்ய முடியுமா? என்று யாராவது கேட்டால் உடனே முடியும் என்று சொல்லிவிடுங்கள். அதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றிப் பிறகு யோசித்துக் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.
>
> —ரூஸ்வெல்ட்

"என்ன? நிஜமாத்தானு? குருவம்மாள் அப்படியெல்லாம் போஅமாட்டாளே. அழகம்மா அதைவிட நல்லவளாச்சே. வீணு அவுங்கமேலே பழி சொல்லாதே!"

"மயிலம்மா நீ வெளுத்ததெல்லாம் வெண்ணென்னு நினைக்கிறவ. சுண்ணும்பும் வெள்ளைதான் என்கிறதை மறந்திடாதே. இந்தக் குருவம்மாளும், அழகம்மாளும் சேந்துக்கிட்டு நம்ம பக்கத்து வாலிபர்களையெல்லாம் கிரங்கவைக்கிறது எனக்கல்லவா தெரியும். அதுனலேதான் என்னைக் கண்டதும் மெதுவா நழுவிட்டாங்க. நீ இவங்களோட சிநேகம் வைச்சுக்கிட்டதே தப்பு" என்று எச்சரித்தான்.

"அவுங்க ரெண்டு பேரும் உன்னைப் பத்தியும் இப்படித்தானே சொல்ருங்க!"

"சொல்லத்தான் செய்வாங்க, என்னைக் கண்டாலே அவுங்களுக்குப் பிடிக்காது. இரண்டொரு தடவைகளிலே அவுங்க நடத்தையைப் பத்தி அவுங்க அப்பன்களிடமே சொல்லிட்டேன். அதுதான் காரணம்" என்று விளக்கிச் சொன்னுன்.

"இப்ப நீ வந்து இங்கே பேசினதையும் இவுங்க என் பாட்டிகிட்டே சொல்லிடுவாங்களே" என்று பயந்தாள் அவள்.

"பாட்டி உன்னை ஒன்றும் சொல்லாது. எனக்கு உன்னையே கண்ணுலம் செய்துதர்றதாக ரெண்டு வருஷத்துக்கு முன்னேயே சத்தியம் செய்து குடுத்திருக்குது!" என்று இரகசியத்தை வெளியிட்டான்.

"சத்தியமா" இத்தினி நாளும் பாட்டி என்கிட்டே ஒரு பேச்சுக் கூடச் சொல்லலையே"

ஒரு மனிதனின் உடம்பில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன. என்று நீங்கள் அவனிடம் சொன்னுல் அதை அவன் நம்பிவிடுவான். ஆனுல் "பெயிண்ட் உலரவில்லை. இதைத் தொடாதீர்கள்!" என்று போட்டிருக்கும் நோட்டீஸை அவன் நம்பமாட்டான். ஆராய்ச்சி புரியத் தொடங்கிவிடுவான்.

—காமெட்

என ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"சொல்ல வேண்டாம்னு நான்தான் சொல்லி வைத்திருந்தேன். உன் மனசைத் தெரிஞ்சுக்கிட்டுச் சொல்லலாமின்னு இருந்தேன்!"

"இப்ப மட்டும் தெரிஞ்சுக்கிட்டியோ?"

"நல்லாத் தெரிஞ்சுக்கிட்டேன். வெளிக்கு மட்டும்தான் நீ கோபமாப் பேசுறே. அந்தரங்கத்திலே என் பேரிலேதான் பிரியம் என்கிறதை உன் கண்களே சொல்லுதே!"

"இப்படியெல்லாம் பேசினு நான் ஏமாந்திடமாட்டேன் நாகப்பா. இன்னைக்குப் புலிக்குப் பலியான ஆட்டைப் பத்தி என் பாட்டி கேட்டா நான் என்ன சொல்லுறதின்னுதான் நடுங்கிக்கிட்டிருக்கேன். இந்தக் கவலையிலே நீ என்ன பேசுறே என்கிறதும் எனக்குச் சரியா விளங்கலே!" என்ருள் மயிலம்மா.

"புலி விஷயத்தைக் கேட்டா உன்பாட்டி நாளை முதல் உன்னை ஆடு மேய்க்க அனுப்பாது. அப்புறம் நான்தான் ஓட்டி வரணும்! நீ எனக்கு எப்போதாவது கஞ்சி மட்டும் கொண்டு வந்தாப் போதும்."

"ஓஹோ, அவ்வளவு துணிச்சல் வந்திட்டதா. கல்யாணமே ஆகிட்டமாதிரில்ல பேசுறே?"

"இனியென்ன சந்தேகம். நாலு நாளைக்கு முன்னே உன் பாட்டியும், எங்கப்பனும் எல்லாம் பேசி முடிச்சிட்டாங்களாம். இன்னும் பத்து நாளிலே கண்ணாலம் முடிஞ்சிடுமாம். எங்க வீட்டிலே உனக்கு நகை, சேலையெல்லாம் வாங்க நாளைக்கு மதுரைக்குப் போகப் போறாங்களே" என்று சந்தோஷ மிகுதியால் மட மடவென்று சொன்னான்.

"இதெல்லாம் நிஜந்தானா நாகப்பா?" என்று அவன் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

"சத்தியமாத்தான், உன் தலையிலே வேணுமானாலும் அடிச்சுச் சொல்றேன்" என அவள் தலையில் அடித்தான்.

"என்ன, மயிலம்மா. நீங்க ரெண்டு பேரும் விளையாடிக்கிட்டிருக்கிற வரைக்கும் நாங்க ரெண்டு பேரும் காத்திருக்கணுமா?" என்று மரத்தின் மறைவிலிருந்து சத்தமிட்டாள் குருவம்மா.

சட்டென அவன் கையை விட்டு விட்டு எழுந்து திரும்பிப் பார்த்தாள் மயிலம்மா. தன் சிநேகிதிகளைக் கண்டு நாணிக் குனிந்தாள்.

"நீ மலை மேலே வரணும். வரணுமின்னு சொல்லிக்கிட்டிருந்த ரகசியம் இப்பத்தான் எங்களுக்குத் தெரிந்தது" என்றாள் வேடிக்கையாக அழகம்மா.

"சே, சே, அப்படியெல்லாம் ஒன்னுமில்லை. இவர் நம்மளைப் புலி அடிச்சிடுமோன்னு பாத்துக் கூட்டிட்டுப் போகத்தான் வந்தாராம்" என்று மழுப்பினாள் மயிலம்மா.

"புலியை அடிக்க வந்தவர் இப்ப உன்னையே அடிச்சிட்டுப் போறாராக்கும்" என்று கிண்டல் செய்தாள் குருவம்மா.

"உன்னையும் ஒருத்தன் இப்படித்தான் அடிச்சிட்டுப் போவான்" என்றாள் மயிலம்மா.

"மயிலம்மா, நீயோ மயில். அவரோ நாகம். நாகத்தின் சப்த நாடியும் மயிலைக் கண்டதும் அடங்கிடுமில்லையா. அந்த மாதிரி இவரை நீ ஆட்டி வைக்கணும். ஜாக்கிரதை" என்று யோசனை சொன்னாள் அழகம்மா.

"சரி, சரி, நேரமாகுது. மறுபடியும் புலி வர்றதுக்குள்ளே அடிவாரம் போயிடலாம், புறப்படுங்க" என்று துரிதப்படுத்தினான் நாகப்பன்.

"இரு, நாகப்பா, சாப்பிட்டுட்டுப் போகலாம்" என்றாள் மயிலம்மா.

நால்வருமே அமர்ந்து சாப்பிட்டார்கள். "கல்யாணச் சாப்பாடு உடனேயே கிடைச்சிட்டதே" என்றாள் குருவம்மா.

எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

கருவம் பிடித்தவன் கௌரவத்தை இழக்கிறான்; விஷமம் செய்பவன் நண்பனை இழக்கிறான்; தொழிலைவிட்டவன் குலத்தை இழக்கிறான்; பணத்தில் அதிக ஆசையுள்ளவன் தருமத்தை இழக்கிறான்; லோபி தன் சுகத்தை இழக்கிறான்; கோபத்தால் வித்தையின் பலனை இழக்கிறான்.

—பஞ்ச தந்திரம்

சோகச் சிலை

மயிலன்

"அப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தாள் சிறுமி லலிதா. அவள் கூப்பிடுவது அரைகுறையாகத்தான் காதில் விழுந்தது பாலமுகுந்த ஆசாரிக்கு. அவர் கவனம் முழுவதும் எதிரே உருவாகிக் கொண்டிருந்த சிலையில் அழுந்திக் கிடந்தது.

"அப்பா! காப்பி சாப்பிடவில்லையே நீங்கள். நேரமாகிறதே, வீட்டுக்கு வருகிறீர்களா? அல்லது இங்கே எடுத்து வரட்டுமா?"

இத்தனை வார்த்தைகள் பேசிய பிற்பாடுதான் அவருடைய கவனம் மகளிடம் திரும்பியது. கையில் இருந்த சுத்தியலையும் கல்லுளியையும் கீழே வைத்துவிட்டு மகள் பக்கம் திரும்பினார்.

"என்ன சொல்லுகிறாய்? காப்பியை இங்கே கொண்டு வருகிறேன் என்கிறாயா?.... வேண்டாம் ஆறிவிடும். நான் இதோ வருகிறேன். நீ போ வீட்டுக்கு, முன்னால்".

லலிதா திரும்பிப் போகவில்லை. மாறாக, தந்தைக்கு அருகில் உட்கார்ந்து கொண்டாள். அவள் பார்வை உருவாகிக் கொண்டிருந்த சிலையில் ஆவலோடு படர்ந்தது.

"ஏம்ப்பா.. எத்தனை சிலை இதுவரையிலும் நீங்கள் பண்ணியிருப்பீர்கள்?" என்று கேட்டாள் அவள். இந்தக் கேள்வியில் ஒரு பெருமித உணர்ச்சியோடு இனம் புரியாத ஏக்கமும் தொனித்தது!

"எத்தனையோ சிலைகள்! நான் கணக்கா வைத்திருக்கிறேன்?

"உங்கள் சிலைகள் எல்லாம் கோயிலையும் அரண்மனையையும் அலங்கரிக்கத்தானே உதவுகின்றன?"

"இதற்கு மேற்பட்ட கௌரவம் ஒன்று இருக்கிறதா லலி?"

"அதற்குச் சொல்லவில்லை அப்பா. நம் வீட்டில் ஒரு சிலை இல்லையே என்பது தான்........"

பால முகுந்தாசாரியார் பெருமூச்சு விட்டார். அண்ணாந்து பார்த்தார். எதிரே கல்லிலிருந்து உற்பவித்துக் கொண்டிருக்கும் அழகுருவத்தை உன்னிப்பாய் கவனித்தார். அதன் பிறகு மகளை நோக்கிப் பார்வையைத் திருப்பி, அவள் கையைப் பிடித்து இழுத்து அருகில் அமர்த்திக் கொண்டார்.

தந்தையின் இந்தச் செயலின் முழு அர்த்தத்தையும் சிறுமி லலிதா உணர்ந்தாள் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அவருடைய மனதிலும் ஏதோ குறை இருக்கிறது என்பது மட்டும் அவளுக்குப் பட்டுவிட்டது. அவர் மடியில் சாய்ந்து கொண்டே அவர் கையை மிருதுவான தன் கையால் தடவிக் கொடுத்தாள்.

மகளுடைய இன்ப ஸ்பரிசத்தில் ஈடுபட்டுக் கண்ணை மூடிய வண்ணம் மௌனமாக இருந்தார் அவர். அந்த மனதில் ஓடிய எண்ணங்களின் நிழல் போல முகத்தில் ஒரு சோகச் சாயல் படராலாயிற்று.

"அப்பா! நேரமாகிறது. நான் வீட்டுக்குப் போகிறேன். நீங்கள் சீக்கிரம் வாருங்கள்"

என்று எழுந்திருக்க முயன்றாள் சிறுமி.

இதைக் கேட்டுக் கண்ணைத் திறந்து, மகள் கையைப் பிடித்து அருகில் உட்காரச் செய்தார் சிற்பி ''காப்பிதான் தினம் சாப்பிடுகிறோமே இன்று கொஞ்சம் தாமதமானால் என்ன முழுகிப் போய்விடுகிறது? லலி, இங்கே கொஞ்ச நேரம் இரு என் மனதுக்குச் சற்று ஆறுதலாக இருக்கும்...''

லலிதா சம்மதித்துவிட்டாள். எனினும், அவளுக்குத் தந்தையின் மனக்குறை என்ன என்பது திட்டமாகத் தெரியவில்லை. இருந்தாலும், தன்னால் அந்த மனக்குறை ஓரளவாவது நீங்குமானால், அது தான் செய்த பாக்கியந்தான் என்கிற பெருமை உணர்ச்சியோடு பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா! இந்தச் சிலை....'' என்று ஏதோ சொல்ல வந்தவர் மேலே பேசாமல் நிறுத்திவிட்டார். என்ன தயக்கமோ அவருக்கு!

''இந்தச் சிலை உங்கள் பெருமையை இன்னும் அதிகப்படுத்தும். இதற்கு இடம் எங்கே

குறித்திருக்கிறீர்கள்? எந்தக் கோயிலுக்காவது போகும். அல்லது அரண்மனைக்கு……''

''இல்லை. இதை நமக்காகச் செய்கிறேன்.''

இதைக் கேட்டவுடன் லலிதாவுக்குச் சொல்ல முடியாத ஆச்சரியம். ''வாஸ்தவமாகவா அப்பா?'' என்று உரக்கக் கேட்டாள்.

''ஆமாம் லலி''—சிற்பி அசாதாரண சாந்தத்தோடு பதில் சொன்னார்.

2

சிலை நாளுக்கு நாள் வடிவமும் உருவமும் பெற்று வெளிப்படலாயிற்று. மௌனமாகத் தரையில் கிடந்த கல்லை எடுத்து நிறுத்தி, அதன் அந்தரங்கத்தில் உறங்கிய அழகை சிற்றுளி கொண்டு தேடித் திரட்டி வெளியே இழுத்துவரும் பணியில் பாலமுகுந்தாசாரியாரின் மனம் முழுவதும் ஈடுபட்டிருந்தது. கையில் உளி ஏந்தி வேலை செய்த காலத்திலும் அப்படிச் செய்யாமல் இருந்த காலத்திலும் அவர் மனதில் நிறைந்திருந்து வளர்ச்சியும் வனப்பும் பெற்றது அந்தச் சிலைதான்.

அவர் கையால் எத்தனையோ சிலைகள் செய்திருக்கிறார் இதற்கு முன்பு. எனினும், இந்தச் சிலை அவர் கவனத்தைக் கவர்ந்திருப்பது போல் வேறு எந்தச் சிலையும் கவர்ந்ததில்லை. காரணம், மற்ற சிலைகள் எல்லாம் வேறு ஒருவரின் உத்தரவின் பேரில் எழுந்த சிருஷ்டிகள். இதுவோ சொந்த மனத்தின் ஆதங்கத்தைத் தணிக்கத் தானாகவே உதிக்கும் ஒரு கலா சிருஷ்டி.

அன்று ஒருநாள். காலை முதல் சிலையும் தாமுமாக இருந்து வெகு நேரம் உளி கொண்டு உழைத்ததால் களைத்துப்போயிருந்த சமயம் மகள் அங்கே வந்ததைக் கண்டு மன ஆறுதல் கொண்டார் சிற்பி. அவளை அருகில் அழைத்து, சிலையையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தார்.

சிலை பெரும்பாலும் முடிந்துவிட்டது. சிறுமி அதையும் தந்தையையும் பார்த்தாள். பார்த்துவிட்டு ''அப்பா, இது

யார் உருவம்?'' என்று ஆவலோடு கேட்டாள்.

''ஏன், தெரியவில்லை? உன் உருவந்தான்''

''என்னை அசையாத பதுமையாகச் செய்யவா உங்கள் உத்தேசம்?'' என்று வேடிக்கையாகக் கேட்டாள் லலிதா.

மகளுடைய புத்திகூர்மையை மெச்சிய வண்ணம் மௌனமாக இருந்தார் சிற்பி. அவர் உள்ளத்தில் ஒரு இன்ப உணர்ச்சியும் அதைத் தொடர்ந்து ஒரு வேதனையும் எழுந்தன.

''இது அசையாத கல் சிலை அல்ல லலி. அழியாத நித்திய வாழ்க்கை'' என்றார் சிற்பி.

''என்னை அழியாச் சிலையாக்கி, தேவ மங்கையாக்க நினைக்கிறீர்கள் நீங்கள். இல்லையா அப்பா? உங்களுக்குக் கோடி நமஸ்காரம்'' என்றாள் லலிதா.

இதைக் கேட்டுப் புளகாங்கிதம் கொண்டார் சிற்பி. 'இந்த வயதில் இப்படிப் பேச யார் இவளுக்குக் கற்றுக் கொடுத்தது?' என்று வியப்படைந்தார். மகளை இரு கைகளாலும் இழுத்து அணைத்துக் கொண்டார்.

''அம்மா லலி! உனக்கு இதைச் சொல்லத்தான் வேண்டும். நம்முடைய குடும்பம் பரம்பரையாகச் சிற்பத் தொழிலில் ஈடுபட்ட குடும்பம். குலப் பெருமை கெடாமல் என் வரையில் காப்பாற்றிக்கொண்டு வந்தாய்விட்டது. எனக்குப் பின்னால் இந்தச் சிற்பத் தொழிலில் ஈடுபட நம் குடும்பத்தில் வேறு யாரும் இல்லை. நான்தான் இந்த வம்சத்தின் கடைசி கரணை....''

''ஏன் இந்தச் சங்கிலி உங்களோடு முடிவு பெற வேண்டும்? உங்களுக்கு ஒன்றும் வயதாகி விடவில்லை. நீங்கள் இன்னொரு கல்யாணம் செய்து கொண்டால், எனக்கு ஒரு தம்பி பிறக்க மாட்டானா? ....''

''ஹி! ஹி! நல்லாச் சொன்னாய். உன்னுடைய அம்மாவுக்கு மறு விவாகம் செய்து கொள்ள வில்லை என்று நான் சொன்ன சொல்....''

''என்னை உத்தேசித்துத் தானே அப்படி நீங்கள் சொன்னது? நான் என்ன, இப்பொழுது சின்ன குழந்தையா? சித்தி ஒருத்தி வந்தாளானால், அவளிடம் நான் தாயன்பை நிச்சயம் பெற்று விடுவேன். நீங்கள் இதற்காக யோசிக்க வேண்டாம். உங்களுக்குப் பெண் கொடுக்க எத்தனையோ பேர் தயாராய் இருப்பார்கள்''.

''லலி! என் உத்தேசம் அதல்ல. நம்முடைய குடும்பம் ஒளி மிக்க குடும்பம். அதன் பிரகாசம் கெடாமல் இது வரை காப்பாற்றியாகி விட்டது. இதுவே எனக்குப் போதிய பெருமை தரத்தக்க விஷயம். ஆண் சந்ததி இல்லையே என்று நான் துளிக் கூட கவலைப்பட வில்லை. நீ ஒருத்தி எனக்குப் போதும்.....

''இந்தச் சிற்பக் குடும்பத்தில் ஒரு அழகான சிலையை நிர்மாணித்து அமைக்க வேண்டும் என்பது என்னுடைய நெடுநாளைய ஆசை. அதற்காக, உன்னுடைய அம்மா உயிரோடு இருந்த காலத்தில் ஒரு நாள் என் உத்தேசத்தைச் சொல்லி உன் தாத்தாவின் உத்தரவு கேட்டேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா?''

''என்ன சொன்னார் தாத்தா?'' என்றாள் லலிதா ஆவலோடு.

''அப்பா முகுந்தா! உன் உத்தேசம் எனக்குப் புரிகிறது. உன் மனைவி அமிர்தவல்லியைச் சிலையில் நிறுத்த விரும்புகிறாய். இந்த வழக்கம் நம் குடும்

பத்துக்குக்கிடையாது. அமிர்த வல்லியைவிட ஆயிரம் மடங்கு அழகு படைத்த பெண்கள் நம் வம்ச வாழ்க்கையில் பங்கு கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய சிலே ஏதாவது ஒன்று செய்திருக்கிருர்களா பார், நம் முன்னேர்கள். உன் உத்தேசத்தை விடு. அதில் ஆபத்து உண்டு. நம் கலே அரசர்களேயும் தெய்வங்களேயும் தான் அழகு படுத்த உதவ வேண்டும். நமக்கென்று அது பயன் படக் கூடாது; தெரிகிறதா?'' என்று எனக்குப் புத்தி புகட்டினர்.

''அப்படியா?''

''ஆமாம். அவர் உயிரோடு இருந்த வரையிலும் எனக்கு அந்த எண்ணம் மறுபடி அழுத்தமாக உதயமாகவில்லே. அவர் இறந்தபிறகு, உன் அம்மாவின் சிலேயை அமைக்க வேண்டும் என்று பல தடவை நான் நினைத்ததுண்டு. ஆனல், அந்தச் சமயத்தில் அரச காரியத்தில் அதி மும்முரமாக ஈடுபட்டிருந்ததால் சொந்த காரியத்தில் ஈடுபட அவகாசம் இல்லே. அவகாசம் இருந்திருந்தால் ஒரு சமயம்.....''

''ஒரு சமயம் என்ன? நிச்சயமாகவே என்று சொல்லுங்கள். அம்மா எப்படி இருப்பாள் என்று நினைத்து நினைத்து நெஞ்சுக்குள்ளே துழாவும் இந்தக் கஷ்டம் எனக்கு ஏற்பட்டிராது. அவள் சிலே உங்கள் கைத்திறமையில் உருவாகி இருக்கும்.''

''அரச காரியம் முடிந்து திரும்பி வந்து நாலு மாதத்துக்குள் உன்னுடைய அம்மா என்னேப் பிரிந்து போய்விட்டாள். அவள் விஷயத்தில் செய்யத் தவறியதை ஈடுகட்ட, உன் சிலேயை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கிறேன்.

> மனிதன் ஒரு மிருகம். அவன் சப்பைக் கட்டுக்கட்டி சமாதானம் கூருத அக்கிரமம் உலகத்தில் ஒன்றுமே இல்லே. இதில் ஒரு பரிதாபம் என்னவென்ருல் சவுக்கடியும், தூக்கு மேடையும் இன்றி மனிதனுல் வாழமுடியாது என்ற நிலே ஏற்பட்டுவிட்டதுதான்.
>
> —அறிவுத்திரள்.

''தாத்தா, ஏதோ ஆபத்து என்றுரே....?''

''சிலே அமைப்பதில் என்ன ஆபத்து வந்துவிடும்? சுயநலக் கலப்பு கூடாது என்பதுதான் அவர் சொல்லின் தாத்பரியம்''

''பின் என்ன, பேஷாய்ச் செய்யுங்கள். அம்மாவுடைய சிலேயும் இதற்குப் பிறகு செய்யுங்கள். நல்லது''

''உன் சிலேயிலே உன்னே மட்டும் அல்ல உன் அம்மாவையும் காண முடியும்''

''அப்படியா?'' என்று தந்தையைக் கட்டிக் கொண்டாள் சிறுமி!

டங்! டிங்! டடங்! டிடிங்! டண் டங்!....

கையிலுள்ள உளி எதிரில் இருந்த சிலேயோடு லாகவமாக உறவாடியது. பால முகுந்தாசாரியார் அன்று சூரியோதயம் முதல் சிலே முன்னல் அமர்ந்து வேலே செய்கிருர்.

சிலே முழு உருவம் பெற்று விட்டது. கண் திறப்பது ஒன்றுதான் பாக்கி. அதைச் செய்யும் முன்பு, இதர அங்கங்களுக்கு மெருகு கொடுத்துக் கொண்டிருந்தார்.

கையில் சூடான காப்பியோடு அங்கே வந்து சேர்ந்தாள் லலிதா. சிற்பியும் அதை வாங்

கிக் குடித்து விட்டு வேலையில் ஈடுபடலானார்.

ஆயிற்று, கண்ணைத் திறக்க வேண்டிய கட்டம் வந்து விட்டது. அதற்கு முன், பக்கத்தில் நின்று கொண்டிருந்த மகளைப் பார்த்தார். அவள் விழி அகல இமையாமல் சிலையைப் பார்த்த வண்ணம் நின்றாள். 'கண்ணாடியில் தன்னுடைய உருவம் கண் மூடிய நிலை'யில் காட்சி அளிப்பது போல் பட்டது அவளுக்கு.

அந்தக் கண்ணில் பொங்கிய இன்பத்தை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டு, சிற்றுளியால் சிலையின் கண்களைத் திறந்து விட்டார் சிற்பி.

டங் !

மறுகணம் 'ஹோ !' என்று கண்ணைப் பொத்திக் கொண்டு சுருண்டு விழுந்தாள் லலிதா ! சிலையின் கண்ணிலிருந்து தெறித்த கற் செதிள் அவள் கண்ணில் பாய்ந்து, ரத்தம் ஆறாய்ப் பெருகி வழிந்தது.

சிலையின் கண்கள் திறந்து இந்தக் கொடுமையைக் கண்டன ! சிற்பி நடந்ததை உணர்ந்து துடிதுடித்தார்.

தந்தை கூறிய சொல் சிற்பிக்கு ஞாபகம் வந்தது. உளியை எடுத்து, சிலையின் கண்ணிரண்டிலும் ஒரு சிறு மாறுதல் செய்தார். கண்களில் பொங்கி, வடிவம் முழுவதும் வழிந்த அழகு இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அதற்குப் பதிலாக, அந்தக் கண்களில் அடக்க முடியாத, வரம்பு கட்டிக் காண இயலாத பெருத்த சோகம் !

அவ்விடத்தைவிட்டு மகளுடன் அகன்றார் சிற்பி பால முகுந்தாசாரி. அந்தச் சிலை சோகச் சிலையாய், தந்தையும் மகளும் செல்வதைக் கவனித்த வண்ணம் நின்றது !

வீட்டிலேயே அச்சிடக்கூடிய பாக்கெட் பிரஸ் :—

பெயர்கள், விலாசம், கடிதங்கள் லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியமானது. நெ. 1 ரூ. 1-4-0 நெ. 2 ரூ. 2-4-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0, உயர்ந்த ரகம்ரூ. 3-8-0.

Big Size High Class Rs. 4-4 0.

தபால் செலவு அணு 1-8-0

உயர்தர கடிகாரங்கள்

ஸ்விஸ் மேக் 10 ஹு உத்திரவாதம் 5 ஜுவல் க்ரோமியம் கேஸ் ரவுண்டு ஷேப் ரூ. 16. சிறந்தது ரூ. 16|8. நீண்ட சதுரம் க்ரோமியம் கேஸ், 7 ஜுவல் ரூ. 24. ரோல்டுகோல்டு 15 ஹு உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 28. சிறந்தது ரூ. 30. ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 27. அலாரம் டைம்பீஸ் ரூ. 10. சிறந்தது ரூ. 17.

தபால் செலவு அணு 1-8-0.

French Commercial Stores, (B·S·B.)
P. B. No. 12216. CALCUTTA. (5)

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம், ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல் !

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக்கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு
(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-1.

எழில் துலங்கும் காஷ்மீரம்

சுகுமாரன்

அகில உலகிலும் அழகு மிக்க இடமும், இந்தியாவின் மிகப் பெரிய மாகாணமும் ஆகும் காஷ்மீரம். பசுமையான புல்வெளிகளும் பனி மூடிய மலைச் சிகரங்களும், பளிங்கு நீரினைக் கொண்ட ஏரிகளும், செழிப்பான பள்ளத்தாக்குகளும், கண்ணைக் கவரும் தோட்டங்களையும் கொண்டு கனவு லோகமாகக் காக்ஷியளிப்பது இந்தியாவின் முடியாக (கிரீடமாக) விளங்கும் காஷ்மீரம் தான்!

முகலாய மன்னர்களான அக்பர், ஜஹாங்கிர், ஷாஜஹான் போன்றவர்கள், காஷமீரத்தின் வனப்பைக் கண்டு, ''காஷ்மீரம் முத்துக்கள் பதித்த வைர மாலையாக விளங்குகிறது'' என்பதாகக் கூறியுள்ளனர். மேலும் காஷ்மீரத்தின் இயற்கை வனப்பை விசித்திர வேலைப்பாடு அமைந்த தோட்டங்களும், நீரூற்றுகளும் அமைத்ததின் மூலம் அதிகப்படுத்தினர். இயற்கை அளித்த வரப்பிரசாதங்களான பழம், பூ, ஏரிகளின் சௌந்தரியத்தை முகலாய மன்னர்கள் கற்பனை நயத்துடன் செப்பனிட்டு, கண் கவரும் வண்ணம் மாற்றி அமைத்தனர்.

இந்த எழில் மிக்க நாட்டின் பரப்பளவு, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆகியவைகளின் மொத்த பரப்பளவுக்குக் கொஞ்சம் குறைவானதாகும். ஹைதராபாத் மாகாணத்தைவிட பெரியது மாகும். மைசூர், பிகானீர், குவாலியர், பரோடா, ஆகியவைகளின் மொத்த விஸ்தீரணத்தைவிட மிக மிகப் பெரியதாகும். இந்தியாவின் வட மேற்கே அமைந்துள்ள இந்நாடு 84,471, சதுர மைல் பரப்புள்ளது. மலைகளும், பள்ளத்தாக்குகளும், ஏரிகளும், சம வெளிகளும் நிறைந்துள்ள இந் நிலபரப்பு அமைந்துள்ள இடம் இந்தியாவின் சரித்திரத்தில் மிக முக்கியத்வம் வாய்ந்ததாகும். காஷ்மீரத்தின் வடக்கெல்லை, ஆப்கானிஸ்தான், ரஷ்யா, சீனு ஆகிய நாடுகளின் எல்லைகளைத் தீண்டியபடி உள்ளது. இந்து நதி காஷ்மீரத்தின் கிழக் கெல்லையாக நின்று, வடமேற்கு மாகாணத்தைப் பிரிக்கிறது.

காஷ்மீரத்துக்கு இயற்கை அளித்திருக்கும் எல்லைக் கோட்டை மறக்க முடியாது. ஜீலம், இந்து, ஷீயாக் நதி பள்ளத்தாக்குகளை வேலி கட்டி பாதுகாப்பது போல, மலைத் தொடர்கள் காத்து வருகின்றன. லடாக் மாகாணத்துக்கு மேலே உள்ள காரகோரம் மலைத் தொடர், திபேத்திலிருந்து இந்தியாவுக்கு அன்னியர் வராதபடி காவல் புரிகின்றது. இந்தத் தொடர் இமய மலையின் மிகப் பெரிய தொடராகும். 25,000 அடிகளுக்கு மேல் உள்ள சிகரங்களைக் கொண்டதாகும். எவரெஸ்ட் சிகரத்திற்கு அடுத்தபடியாக உள்ள காட்வின் ஆஸ்டின் சிகரம் இதில் தான் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக, லடாக் தொடர், 10,000 முதல் 12,000 அடி வரை உயரம் கொண்டது. இந்து நதியின் பள்ளத்தாக்கு இந்த தொடருக்கு அடியில் தான் உள்ளது. இதற்கு நேர் எதிராக ஜாஸ்கார் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இமய மலையின் மற்ளொரு பிரிவுத் தொடரே இந்து நதி பள்ளத்தாக்கை, ஜீலம் நதி பள்ளத்தாக்கினின்றும் பிரிக்கிறது. இந்த அகன்ற சமவெளி, மற்ளொரு மலைத் தொடரால் தடுக்கப்பட்டு, பரந்த திடலாக விளங்குகிறது.

இந்த மூன்று நதிப் பள்ளத்தாக்குகளும், பச்சைப் பசேல் என்று கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றன. பழங்களும், பூக்களும், அபரிமிதமாக உண்டாகின்றன சமுத்திர மட்டத்திற்கு 5,000 அடிகளுக்கு மேலே உள்ள இச் சமவெளிகளில்.

பஞ்சாபிலிருந்து புறப்படும் ரயில் பாதை பெஷாவரில் முடிவடைகிறது. ராவல்பிண்டியிலிருந்து காஷ்மீருக்கு, முர்ரே வழியாக ஸ்ரீநகருக்கு பஸ் செல்லுகிறது. காஷ்மீரத்திலிருந்து, திபேத்திற்கு வியாபார வழி ஒன்று உள்ளது. இதன் வழியாகத்தான் வியாபாரிகள் தங்கள் பொருள்களுடன் அந்நிய நாடான திபேத்திற்குச் சென்று வியாபாரஞ் செய்து வருகின்றனர். இந்த வழி, ஜாஸ்கார் பள்ளத்தாக்கிலுள்ள, ஜோஜிலா கணவாய் வழியாகச் சென்று, காரகோரம் மலைத் தொடரை ஊடுருவி, திபேத்தை அடைகிறது. இந்த காரகோரம் மலைத்தொடர்தான், காஷ்மீரத்தை திபேத்தினின்றும் பிரிக்கிறது என்பதை வாசகர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக, பஸ் பாதைகளும், கால்வாய்களும்தான், காஷ்மீரின் முக்கிய நகரங்களை இணைக்கிறது. காஷ்மீர மக்கள் பெரும்பாலும் நடந்தே பல இடங்களுக்கும் சென்றுவிடுவர். சிலர் குதிரைகளில் பயணம் செய்வார்கள். வியாபாரிகள் "டங்கராஸ்" என்றழைக்கப் படும் படகிலேயே தங்கள் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்துவிடுவார்கள். அப்படகிலேயேதான் அவர்கள் வாசமும். சமீபத்தில்தான் ஜம்முவுக்கும், பாத்தன் கோட்டிற்கும் ஒரு மோட்டார் பாதை போடப்பட்டுள்ளது. காஷ்மீரத்தின் சாலைகளின் இரு பக்கங்களிலும், நீண்ட மரங்கள் தொடர்ந்தாற்போல் இருப்பது கண்ணுக்கு போதை கொடுக்கும் காக்ஷியாகும்.

ஜீலம் நதி பாயும் பரந்த சமவெளியைத்தான், உலகம் புகழும் காஷ்மீர் பள்ளத்தாக்கு என்றழைக்கிருர்கள். இது 120 மைல் நீளமும், 75 மைல் அகலமும் கொண்டதாகும். இதில் ஜீலம் நதி தவழ்ந்து செல்லும் பகுதி மாத்திரம் 80 மைல் நீளமும், 20 மைல் அகலமும் கொண்டது. பலகோடி வருஷங்களுக்கு முன்பு, இந்தப் பகுதி பரந்த ஏரியாக இருந்ததாக

சொல்லப் படுகிறது. இன்று அதன் சின்னமாகத்தான் **உலார் ஏரி,** அங்கு இருக்கிறது. இப்போதும் அந்த ஏரிதான் இந்தியாவிலேயே சுத்த தண்ணீர் நிரம்பிய ஏரியாக விளங்குகிறது.

இந்தியாவிலேயே மிக அழகான ஏரிகள் என்று புகழப்படும், **மனஸ்பால், டால்** ஏரிகள், இங்குதான் உள்ளது. கோடைகாலங்களில், **டால்** ஏரியில், பல ஏக்கர் பரப்புக்கு, வண்ணத் தாமரைகள் மண்டி கிடக்கும். படகில் அதனைக் கடந்து செல்வதற்குள் படகோட்டியின் பாடு தர்ம சங்கடமாகிவிடும், இந்த ஏரி ஐந்து மைல் நீளமும், 2½ மைல் அகலமும் கொண்டது. இதன் தண்ணீர் பளிங்கு போல் வெண்மையுடன் இருக்கும்.

இந்த நதியின் மேற் பரப்பில், தாமரைகளும், மிதக்கும் தோட்டங்களும், புஷ்பத் தீவுகளுமாக விளங்கும். டால் ஏரியின் கரைகளில் பல பூங்காக்கள் உள்ளன. இவைகளெல்லாம் பதினாறும் நூற்றாண்டில், முகலாய மன்னர்கள், அழகுக்காகக் கட்ட பட்டவைகளாம். அக்பரின் கலை வெறி, அப்பூங்காவில் தெரிய வருகிறது. கால்வாய்களின் இரு கரைகளும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு, நீரூற்றுகளினடியில் விளக்குகள் பொருத்தப்பட்டு, அழகின் சிகரமாக விளங்குகின்றன. இம்மாதிரியே மற்ற பூங்காக்களும், ஒன்றை ஒன்று தோற்கடிக்கும்படி அழகுடன் போட்டி போட்டு, பார்ப்போரை பரவசப் படுத்துகின்றன.

இந்தப் பிராந்தியத்தில் தான், காஷ்மீரின் அழகை ரஸிக்க வரும் அந்நிய நாட்டாரின் தங்கு மிடங்கள் உள்ளன. அதில் முக்கியமானது **குல் மார்க்** இங்கு பலவித விளையாட்டுக்களில் ஈடுபடுவோர் தங்குவர். பனியில் சறுக்கி ஆடும் நபர்களும், காட்டில் வேட்டையாடிக் களிப்போரும் இங்குதான் தங்குவர். குல் மார்க்கைப் போலவே, அழகும் வசதியும் கொண்டவைகள் தான், **பால்கம். காண்டர்பல், கோகிர்னுக், ஸோனுமார்க், படோடி, பத்ரவா, குட்,** போன்ற மலை வாசஸ்தலங்கள்.

காஷ்மீரின் மலைப் பள்ளத் தாக்குக்களில் காட்டு மிருகங்கள் ஏராளம் உலவிய வண்ணம் இருக்கும். முரட்டு காட்டு ஆடுகளும், கருப்பு கரடிகளும், காட்டு மான்களும் நிறைய உண்டு. பறவை இனங்கள் கணக்கிலடங்காத வண்ணம் நிறைந்த நாடு காஷ்மீரின் அழகுக்கு அழகு சேர்த்த வண்ணம் உள்ளன.

காஷ்மீரத்தின் கோடை கால தலை நகராகிய ஸ்ரீநகர், ஹரிபர்பத் மலைக்கும், டக்த்-இ-ஸலை மான் சரிவுக்கும் இடையில் உள்ளது. இதன் ஜனத்தொகை 175,000. ராவல்பிண்டி, முர்ரேவிலிருந்து, இந்நகரை அடைய பாதை ஒன்று உள்ளது. அப்பாதை, ஜீலம் நதி கரை ஓரமாகவே அமைந்துள்ளது. பாரமுலாவினருகில், ஜீலம் நதி, காட்டிற்குள் ஓடி விடுவதால், இப்பாதை வேறு ஒரு மார்க்கமாக ஸ்ரீநகரை அடைகிறது.

பல வாய்க்கால்கள் சேர்ந்ததே ஸ்ரீநகர் என்று சொன்னாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஜீலம் நதி, ஸ்ரீநகரின் மத்தியில் ஊடுருவி, அந்நகரை இரு பிரிவாகப் பிரிக்கிறது. அவ்விரு பகுதிகளையும் ஏழு பாலங்கள் இணைக்கின்றன. வெளி நாட்டினர்கள் இப்பாலங்களினடியில், **சிக்காராஸ்** என்று காஷ்மீரிகளால் அழைக்கப்படும், உல்லாசப் படகுகளில் அமர்ந்தபடி செல்வதையே பெரும்பாலும்



கலையழகு ததும்பும் பொருள்கள் தயாராகின்றன

விரும்புகின்றனர். இப்படகுகள், நல்ல மெத்தை விரிப்புகளுடனும், ஜன்னல் திரைகளுடனும் விளங்குகின்றன.

காஷ்மீரின் அழகு பலரை ஆட்கொண்டிருக்கிறது. "உலகம் முழுவதும் சுற்றிய எவராயினும், ஒரு சில இடங்கள், அந்த இடங்களின் சுற்றுச் சார்புகளினுலேயே சிரஞ்சீவித் தன்மை அடைந்து விடுகிறது என்பதை உணர்வார்கள். அதே போன்று, காஷ்மீரும் ஒன்று. அதன் மலைப் பாங்கான வனப்பும், பூ மெத்தை போட்டாற் போன்ற பள்ளத்தாக்குகளும், பழத் தோட்டங்களை கொண்ட மலைச் சிகரங்களும், மிதக்கும் தீவுகளும், என்றென்றும் மனத்தைக் குதூகலிக்கச் செய்வன ஆகும்" என்பதாக ஒரு யாத்ரீகர் கூறியிருக்கிருர்.

காஷ்மீரின் சீதோஷ்ண ஸ்திதியும் விசித்திரமானது தான். கடும் குளிரும் அங்கு உண்டு. தகிக்கும் உஷ்ணமும் அங்கே வீசுகிறது. லடாக் பகுதிகளில் கொஞ்சம் மழையும், வருஷ முழுவதும் பனியும் உண்டு. ஆனல் காஷ்மீரின் மேற்கே, 30 முதல் 60 அங்குலம் வரை மழை பெய்கிறது. வருஷத்தில் பெரும்பாலும், பனுஹால் வீதி, லடாக் பகுதிகள், பனியால் மூடப்பட்டு போக்குவரத்துக்கள் தடைபடுகிறது.

காஷ்மீரத்தின் மொத்த ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லீம்கள். ஹிந்துக்கள் 100-க்கு 20 பேர்கள். மற்றும் சீக்கியர்கள், ஜைனர்கள், இதர இனத்தவர்கள் உள்ளனர்.

காஷ்மீரத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் ஆரியர்கள் ஆவார்கள். அவர்கள் வெண்மை நிறமும், கரிய கண்களும், அடர்த்தியான புருவமும் கொண்டு விளங்குகிருர்கள். காஷ்மீர பெண்களின் உடற் நிறமும், தேக கட்டும், உலக முழுவதும் பிரசித்தமானது. லடாக் பிரதேசத்தின் சில பகுதிகளில், மங்கோலிய இனத்தின் கலப்பு காணப்படுகிறது. ஒரு சமயத்தில் இந்தப் பகுதி, திபேத்தின் ஆட்சியில் இருந்ததே அதற்குக் காரணமாக இருக்கலாம். இவர்களிடம் புத்த மதம் பலமாக வேறூன்றி இருக்கிறது. இவர்களில் பெரும்பாலோர் புத்த மதத்தை தழுவியுள்ளனர்.

காஷ்மீருக்கென்று பொதுவான ஒரு பாஷை கிடையாது. அங்கு, ஒன்னரை கோடி மக்களுக்கு மேல் காஷ்மீரி பாஷை பேசப்படுகிறது. சுமார் ஒரு கோடி மக்கள் பஞ்சாபி பேசுகின்றனர். முப்பதினயிரம் மக்கள், டோக்ரி பேசுகின்றனர். பத்தாயிரம் பேர் பால்டி மொழி பேசுகின்றனர். இருந்தாலும் காஷ்மீரி பாஷையில் தான் இலக்கியம் செய்யப்பட்டுள்ளது.

காஷ்மீரத்தின் பழைய இலக்கியமான **லாலா—வாக்யானி,** ஒரு பெண்ணல் இயற்றப்பட்ட

தாம். இது சைவ சித்தாந்த பாடல்களின் தொகுப்பாகும்.

காஷ்மீரத்தில், சரித்திர சம்பந்தமான பாழடைந்த சின்னங்கள் நிறைய உள்ளன. வெளிநாட்டினர் கண்டு களிக்க, அபூர்வ இடங்களும் அநேகம் உள்ளன. லடாக் பகுதியில், கனிஷ்க மன்னனின் காலத்தில் சிறப்படைந்திருந்த புத்த விஹாரங்களின் சிதைந்த சின்னங்களைக் காண முடிகிறது. கர்கில் எனுமிடத்தில், 25 அடி உயரமுள்ள கல்லால் செதுக்கப்பட்ட புத்த உருவம் ஒன்று உள்ளது.

தக்த்-இ-சுலைமான் எனுமிடத்தில், காஷ்மீர முறைப்படி செய்த சங்கராச்சாரியாரின் கோயில் ஒன்றும், மார்த்தாண்டர் கோவிலும் உள்ளன. இவைகள் இன்று பாழடைந்து தோற்றமளித்தாலும், அக்காலத்து வேலைப்பாடுகளை உணர முடிகிறது. இக் கலைக் கோவில்கள் எல்லாம், பதினைன்காம் நூற்றாண்டின் இறுதியில், ஸிக்கந்தர் ஆட்சியின் போது அழிந்ததாகும்.

டால் ஏரியை நோக்கியபடி கட்டப்பட்டிருக்கும், ஹஸ்ரத் பால் மசூதி (ஸ்ரீநகர் அருகில்) மகம்மது நபியின் தலை முடியின் சின்னத்தை வைத்து கட்டப்பட்டதாகும். காஷ்மீர முஸ்லீம்கள் இதனை பக்தியுடன் வணங்குகின்றனர். மற்றும், ஜம்மா மசூதி, ஷாஹமா தான் போன்ற இரு மசூதிகளும் ஸ்ரீநகரிலேயே உள்ளன. இவைகள் கலையம்சங்களுடன் கட்டப்பட்டதாகும்.

காஷ்மீரில் எண்ணற்ற நீர் வீழ்ச்சிகள் உள்ளன. கந்தக ஊற்று ஒன்று டாடாபாணி எனுமிடத்தில் உள்ளது. பாரம்கோலா எனுமிடத்தில் உள்ள நீர் வீழ்ச்சி, நகரை பார்க்க வருபவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் சாதனமாக விளங்குகிறது.

காஷ்மீரின் ஜனத்தொகையில் ஐந்தில் நான்கு பாக மக்கள், விவசாயம், ஆடு மாடு பண்ணைகள் போன்ற காரியங்களையே தங்கள் ஜீவனமாகக் கொண்டுள்ளனர். பள்ளத்தாக்குகளின் அடிப்பாகத்தில், பண்படுத்தபட்ட நிலத்தில், கண்ணும் கருத்துமாக நெல் சாகுபடி செய்கின்றனர். மற்ற சாகுபடிகள் எல்லாம், மலைச் சரிவுகளில் நடைபெறுகிறது. கோதுமை, சோளம், பார்லி போன்றவைகளையும் சாகுபடி செய்கின்றனர். காஷ்மீரின் சில பகுதிகளில், பழமும், காய் கறி வகைகளும் முக்கிய பயிராக உள்ளன. பழவகைகளில் முக்கியமாக ஆப்பில், பியர்ஸ், அபரிமிதமாக பயிராகின்றன. இவைகள் பெருவாரியாக ஏற்றுமதி செய்யப் படுகின்றன. ஸ்கர்டு, லடாக் பகுதிகளில் திராட்சை ஏராளமாகக் கிடைக்கின்றன.

பீட்ரூட், காளிப்பிளவர், காபேஜ், போன்ற காய்கறி வகைகள் பயிராகின்றன. குடி

படகு ஓட்டுவது காஷ்மீர மக்களின் வாழ்வோடு ஒட்டிய பழக்கம்



யானவரின் வீட்டுக்கு அருகாமையிலேயே பயிராகும் இவைகள், அவர்கள் உபயோகத்திற்கும், விற்பனைக்கும் உதவுகின்றன. போக்கு வரத்துக்கு வசதியும், பயிரிடும் முறையில் விஞ்ஞான கலப்பும் அவர்களுக்குக் கிடைத்தால், இன்னும் அவர்கள் நிறைய உற்பத்தி செய்து விரைவில் விற்பனை செய்வார்கள். மலைப் பகுதியில் உள்ளவர்கள் ஆடுகளை வளர்த்து வருகிறார்கள். விதவிதமான வர்ண ரோமங்களுடன் ஆட்டை வளர்ப்பது அவர்களுக்கு ஒருகலையாக இருந்து வருகிறது.

காஷ்மீரின், லடாக்பகுதியில், வெள்ளி, போரக்ஸ், அஸ்பெஸ்டாஸ், போன்ற கனிப் பொருள்கள் கிடைக்கின்றன. மற்றும், தேயிலை, ஸில்க், ரோமத்தால் நெய்த ஆடைகள், சால்வைகள், போன்றவைகளும் விற்பனை பொருள்களாக உள்ளன. குடிசைக் கைத்தொழில்களான், மட்பாண்டம் செய்தல், ஆடை, சணல் நெய்தல், வர்ணக் குழம்பு செய்தல், சித்திர வேலைப்பாடமைத்தல் போன்றவைகள் அங்குள்ள மக்களின் 100 க்கு 7 பேரின் வேலைகளாகும். குறிப்பாக ஸ்ரீநகர் பூவேலை செய்தல், சித்திர வேலைப்பாடான செயல்களின் கேந்திரஸ்தானமாகும். இவ் வேலைகளில் காஷ்மீர மக்களின் திறமை உலகப் பிரசித்திப் பெற்றதாகும்.

காஷ்மீரத்தின் சிறப்பு வாய்ந்த வேலையான துணிகளில் பூவேலை செய்வது, சுமார் இரண்டாயிரம் மக்களின் ஜீவனத்துக்கு வழிகாட்டியாக உள்ளது. அடுத்தபடியாக உலக கவனத்தைக் கவர்ந்தது காஷ்மீர் சால்வைகள். அதன் வர்ணம், வேலைப்பாடு எல்லோர் கவனத்தையும் கவர்ந்த ஒன்றாகும். கையினாலேயே நெய்யப்படும் இச்சால்வைத் தொழில் 8,575 மக்களின் வேலையாகும். இத்தொழிலின் வருமானம் மாத்திரம் வருஷத்திற்கு பதினெட்டு லட்ச ரூபாயாகும். இதில் ஆறுலட்ச ரூபாய் தொழிலாளிகளுக்கு கூலிகளாகக் கொடுக்கப்பட்டு விடுகிறது.

காஷ்மீரின் மற்றொரு ஏகபோக வேலை வெள்ளிப் பாத்திரங்களில் சித்திர வேலைப்பாடுகளை செதுக்குவதாகும். எழுத்தறிவில்லாத தொழிலாளியின் விரல் நுணியின் அசைவில் உருவாகும் இந்தக் கலை, மிகவும் உயரிய ஒன்றாகும். மற்றும், மரத்தால் செய்யப்பட்ட பொருள்கள், அதன் மீது காணப்படும் வேலைப்பாடுகள் இவைகளைக் கண்டதும், "இது காஷ்மீர் சரக்கு" என்று எவரும் சொல்லி விடுவார்கள். அவ்வளவு பிரசித்தமும், காஷ்மீருக்கே உரிய வேலைப்பாடும் கொண்டது. பேப்பரினால் செய்யப்பட்ட நவீன சாதனங்கள் கூட கலையம்சங்களுடன் விளங்கும்.

தொழிலில் திறமை, கலையில் உயர்வு, இவற்றுடன் இயற்கையளித்த எழில் பூச்சுடன் காஷ்மீர், இந்தியாவின் ஸ்வர்க்கமாக விளங்குகிறது. பூகோள ரீதியாகவும், சரித்திர வாயிலாகவும், கலை உணர்வோடு பார்த்தாலும் காஷ்மீரம், ஈடு இணையற்ற ஸ்வர்க்க பூமியாகத்தான் விளங்குகிறது. ஆதிகாலம் முதற்கொண்டே காஷ்மீரம் இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதற்கு சரித்திர சான்றுகள் உள்ளன. எந்த விதத்திலும் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள காஷ்மீரம், இந்தியாவின், ஏன் அகில உலகின் ஸ்வர்க்க பூமி என்பதில் தவறு இருக்க முடியாது அல்லவா?

பழியும் பரிவும்

கோரா

தூக்கமும் இல்லாது, விழிப்பும் அல்லாத ஒரு நிலையில் கண்களை மூடியபடி கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் இந்திரா. சிந்தனை என்னும் வெந்தழலில் அவள் உள்ளம் வெந்து கொண்டிருக்க வேண்டும். அவள் சிந்தனைப் பயணத்தை இழுத்து நிறுத்தியது, நர்ஸ் ரமா மேஜையின் மேல் வைத்த கண்ணாடி டம்ளரின் 'டக்'கென்ற ஓசை. புரண்டு கொண்டிருந்த இந்திரா ஒருக்கணித்தபடியே கண்களைத் திறந்தாள்.

அந்தப் பார்வையில்தான் எத்தனை வெறுப்பு! இனந்தெரியாத வெறுப்புணர்ச்சி அவள் இதயத்தில் இடம் பெற்றிருப்பதின் காரணம்?

"அவர் இன்னும் வரவில்லையா?"

"இல்லை, மணி இப்போது தானே ஐந்தரை ஆகிறது. பஸ் பிடித்து வீடு வந்து சேர வேண்டாமா?" நர்ஸ் ரமாவின் இதழில் புன்னகை நெளிந்தது.

அந்த பொல்லாத புன்சிரிப்பு, வலிய வரவழைத்து கொண்டது தான் என்பதில் இந்திராவுக்கு துளிகூட சந்தேகமில்லை.

"அது தெரிகிறது எனக்கு. இதை நீ சொல்லித்தானா நான் தெரிந்து கொள்ள வேண்டும். என் புருஷர், வீட்டுக்கு எப்போ வருவார்னு எனக்கு தெரியும். நீ உன் வேலையைப்பார்!" என்றாள் இந்திரா வெறுப்பும், ஆத்திரமும் கலந்த தொனியில்.

நர்ஸ் ரமாவை இந்த அம்புச் சொற்கள் தைத்ததாகத் தெரியவில்லை. அவள் வழக்கப்படி புன்முறுவலுடன், அங்கிருந்த சாத்துக்குடி பழம் ஒன்றை எடுத்து சாறு பிழிய ஆரம்பித்தாள்.

ஆத்திரத்தில் பொரிந்து தள்ளிய இந்திரா, அசதியால் கண்களை மூடியபடி கிடந்தாள். ஆம்! அவளுக்கு உடலை உருகச் செய்யும் காசநோய். சேர்ந்தாற்போல் இரண்டு வார்த்தையைப் படபடப்புடன் பேசினால் உடனே இரைக்க ஆரம்பித்துவிடும். அவ்வளவு பலஹீனம்.

இந்திரா கண்மூடி கட்டிலில் கிடந்தாலும் அவள் உள்ளமெல்லாம் இன்னும் நான்கு நாட்கள் கழித்து வரப்போகும் தீபாவளியைப் பற்றியே இருந்தது. இந்தத் தீபாவளி எப்படி வரப்போகிறது என்பதை பற்றிதான் அப்போது அவள் கவலை எல்லாம். அவளின் திருமணத்திற்குப் பிறகு மூன்று தீபாவளிகள் வந்து போய்விட்டன. நான்கு நாட்கள் கழித்து வரப்போகும் இந்த தீபாவளி, அவளுடைய நான்காவது தீபாவளி ஆகும். இந்த தீபாவளி ஒருவேளை தன் உயிருக்கே எமனாக வந்து தொலைக்குமோ என்ற எண்ணம் அவளை உலுக்கியது.

உடல் வேர்க்க, நா துவள, 'தண்ணீர் வேண்டும்' என்பதாக சைகையில் தெரிவித்தாள்.

சாத்துக்குடி ரஸத்தில் கொஞ்சம் குளுகோஸை கலந்து அவளுக்குப் பருக தந்தாள் நர்ஸ் ரமா.

பழ ரஸம் உள்ளுக்கு சென்றதும், கொஞ்சம் தெம்பு வந்தவளாகவே காணப்பட்டாள் இந்திரா. நிம்மதியாக உறங்கினால்

தேவலாம் போலத் தோன்றியது. கை, கால்களை போட்டது போட்டபடி கிடத்தி கண்களை மூடினுள்.

அவள் மனத் திரையில் அந்த சம்பவம் விரிந்தது.

அது இந்திராவின் கல்யாணத்திற்கு முந்திய வருஷம்.

மணல்மேடு கிராமம், பேருக்குத்தான் மணலாகத்தான் தெரிகிறதே அல்லாமல், சங்கீதம் பாடும் சிற்ருறை கிராமத்தின் மத்தியில் கொண்டிருந்தது. பச்சை பசும் வயல்களும், ஊரின் கோடியில் சுப்ரமணிய ஸ்வாமி கோயிலும் கொண்டு சுபிக்ஷத்துடன் விளங்கியது. அந்த கிராமத்தின் மிராசுதார் பொன்னம்பலத்தின் இரண்டாவது மகள்தான் இந்திரா. சின்ன வயதில் பெற்ருேரால் செல்லமாக வளர்க்கப்பட்டு வந்த இந்திரா, வாட்டத்தையோ, வறுமையையோ கண்டதில்லை. தானுண்டு, தன் விளையாட்டுண்டு என்று இருந்த வந்தாள்.

இந்திராவின் விளையாட்டுக்கு, கோபத்துக்கு, கொஞ்சுதலுக்கு எல்லாவற்றிற்குமே ஈடு கொடுத்து வருவது ஒரு கிளி! ஆம், பஞ்ச வர்ண கிளி!! அதற்கு பாலும் பழமும், பரிவு வார்த்தைகளும் தருவது இந்திராவின் நித்திய கடமை யாகும்.

வந்த வரன்களை யெல்லாம் தட்டி கழித்து வந்த பொன்னம்பலத்துக்கு, சேகர் வீட்டாரின் சம்பந்தம் பிடித்து போய்விட்டது. பட்டணத்தில் படித்தவன் சென்னை மருந்து கடை ஒன்றில் பொறுப்பான உத்தியோகம் வகித்து வந்தது, அவருக்கு பிடித்திருந்தது.

பெண் பார்க்க வந்த அன்று நடந்த அந்த சம்பவம். எதேச்சையாக இந்திராவை தனியே காணும் சந்தர்ப்பம் வாய்த்தது. தன்னை கல்யாணம் செய்து கொள்ள சம்மதம் தானு என்று கேட்டு வைத்தான். இந்திரா, நாணத்துடன், "என் கிளி, உங்க வீட்டுக்கு வர்றதினுலே, தடையில் லேன்னு, நானும் உங்க வீட்டுக்கு வர தடையில்லே" என்று சொல்லிவிட்டு மான்போல ஒடிவிட்டாள். இந்திராவின் இந்த குழந்தை உள்ளம் சேகரனை வெகுவாக ஆகர்ஷித்தது. இவ்வளவு வெகுளித்தனமும், வெள்ளை உள்ளமும் கொண்டவள், குடும்ப விளக்காய் திகழுவாள் என்றே நம்பினுன்.

திருமண பேச்சு வார்த்தைகள் முடிந்ததும், நிச்சயதார்த்த நாளும் குறித்தாகிவிட்டது. தாம்பூலம் மாற்றும் நாளுக்கு, இரண்டு தினங்களுக்கு முந்தி நிகழ்ந்த அந்த சம்பவம், பெருத்த அதிர்ச்சியை தந்தது. காலாற வயல் கரைப் பக்கம் போயிருந்த பொன்னம்பலத்தை மாடு முட்டிய செய்தி, இந்திராவின் கல்யாணமே நின்றுவிடும் அளவுக்கு வளர்ந்தது. சேகரின் வீட்டாருக்கும், தாம் புதிதாக உண்டாக்கி கொள்ளும் சந்தர்ப்பம் ஒரு வேளை திருப்திகரமாக அமையாதோ என்று சந்தேகப்பட்டனர். சேகர் அப்போது கொஞ்சம் பிடிவாதத்தைத் தளர்த்தி இருந்தால் இந்த கல்யாணமே நின்று போயிருக்கும். ஆனல் அவன் தான் இந்திராவின் மோகன உருவிலும், குழந்தை உள்ளத்திலும் தன்னையே மறந்திருந்தானே!

கல்யாணத்திற்கு முன் ஏற்பட இருந்த தடை, தன் எதிர்கால அவல வாழ்வையே பிரதிபலித்ததோ என்ற எண்ணம் இந்திராவின் உள்ளத்தில் நிழலோடியது.

நினைவு, கடந்த கால நிகழ்ச்சியின் ஓட்டத்தை தடுத்து நிறுத்தி, படுத்த படுக்கையை நினைவூட்டியது. கண்களைத்

திறந்தாள். மேலே, தன் அருமைக் கிளி, ரத்த அலகால், பழத்தை குத்தி குதறிக் கொண்டிருந்தது. பழம் சாறும் சதையும் ஒழுகி, கற்புகுலைந்த கன்னி, கண்ணீருடன் நிற்பது போல இருந்தது.

அறையின் வாசற்படிக்கு வெளியே, இந்திராவின் கணவன் சேகரும், நர்ஸ் ரமாவும் பேசிக் கொண்டிருப்பது அவள் பார்வையில் பட்டது. கட்டிலின் அசைவு கேட்டு, இருவரும் உள்ளே வந்தனர்.

"என்ன இந்திரா, நல்ல தூக்கம் போல இருக்கே, எழுப்பக் கூடாதின்னு பார்த்தேன்.... மருந்து சாப்பிட்டாயிடுத்தா?"

"வேலை தவருமே மருந்தை கொடுக்கத்தான் வீட்டிலேயே வைச்சிருக்கீங்களே நர்ஸை.... இது கூடவா அவ செய்ய மாட்டா!"—இந்திராவின் குரலில் கேலியே மிகுதியாக தொனித்தது.

இந்திராவின் இந்த குத்தலான மொழிகள் நர்ஸ் ரமாவை மிகவும் வருத்தத்திற்குள்ளாக்கியது. இருந்தாலும் கடமை அதனை லக்ஷியம் செய்ய விடவில்லை. வியாதியஸ்தர்களின் முக்கலையும், முனகலையும், கோப மொழிகளையும் சகித்துக் கொள்வதுதான் நர்ஸ்கள் கற்றுக் கொள்ள வேண்டிய முதல் காரியம். இந்திராவின் இந்த போக்கு சேகருக்கு மிகவும் பழக்கமானது தான்.

"பூரண ஒய்வும், மன அமைதியும்தான் இந்திராவுக்கு இனி கிடைக்க வேண்டியது" என, டாக்டர் பாரதி என்று கூறினரோ, அன்றே இந்திரா சேகரின் தாம்பத்ய வாழ்வில் இடி விழுந்தது என்றே கூறலாம். அந்த இடி, நர்ஸ் ரமாவின் உருவில் வந்ததாகவே இந்திரா இன்னமும் நம்பி வருகிருள். இந்த எண்ணத்தை எந்தவித காரண காரியங்களைக் காட்டினுலும் மாற்ற இயலாது என்பதை சேகர் நன்ருக அறிவான். அவளின் இந்த எண்ணத்தை போக்குவதற்கான வழிகளைக் கையாண்டால், அது நிச்சயம் இந்திராவின் எண்ணத்தை பலப்படுத்துமே யொழிய குறைக்காது — மாற்ருது — என்பதில் சேகருக்கு கொஞ்சங் கூட சந்தேகமில்லை. இதனுல் தான், இந்திராவின் தாக்குதல் பாணங்களை யெல்லாம், சேகரும், நர்ஸ் ரமாவும் தெரிந்து கொள்ளாத மாதிரியில் நடந்து கொண்டனர்.

இந்திராவின் பேச்சை காதில் வாங்காதவன் மாதிரி, உடல் நலத்தைப் பற்றி அவளிடம் பேசத் தொடங்கினுன். இது தான் சமயமென்று நர்ஸ் ரமாவும் அங்கிருந்து நகர்ந்தாள்.

"தீபாவளியும் அதுவுமா, நான் இப்படி படுத்திருப்பது மனசுக்கு கஷ்டமா இருக்குது இல்லையா?" என்ருள் ஏக்கம் நிறைந்த குரலுடன்.

"பண்டிகையைப் பற்றி இப்போ என்ன கவலை உடம்பு நல்லாயிட்டா, அடுத்த வருஷமே அமோகமா கொண்டாடிட்டா போறது ..." என்ருன் சேகர்.

ஏன் மறைக்கிறீங்க, எந்த தீபாவளியைத்தான் என்னை கட்டிக்கிட்டப்புறம் நீங்க கொண்டாடியிருக்கிறீங்க? வருஷம் நாலாகப் போவுது .... என்னுலே உங்களுக்கு அடுக்கடுக்கா துன்பம் தான்...." இந்திரா முடிக்கவில்லை. அவள் கண்களில் நீர் துளிர்த்தது.

"அசடே. இதுக்கு அழறதா, இப்ப என்ன ஆயிடிச்சு, தீபாவளி என்ன வருஷா வருஷம் வர்ற பண்டிகை தானே...." சேகர் தன் மன ஏக்கத்தை வார்த்தைகளால் மூடி, இந்திராவின் நொந்த உள்ளத்துக்குத்

தன்னால் தன் கணவனுக்கு அடுக்கடுக்காக ஏற்பட்டிருக்கும் தொல்லைகள் தெரிந்திருந்த போதிலும் தன்வாழ்வை சரிப் படுத்த அவர் எடுத்துக் கொண் டிருக்கும் முயற்சிகள் அவள் நினைவுக்கு வராமல் போக வில்லை. தன் கணவனின் தூய உள்ளத்தை நினைத்ததும் அவ ளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அவள் நினைவு தலை தீபாவளி யன்று நடந்த சம்பவத்தை பட மாக்கிக் காட்டியது.

இந்திராவின் வீட்டில் அன்று ஏகதடபுடல். மாப்பிள்ளை வருகி றார் என்றால் கேட்கவா வேண் டும். இந்திராவின் மனம் சந் தோஷத்தால் விம்மி வெடித்து விடும் போலிருந்தது. காலம் கட்டை வண்டி பயணம் போல ஊர்ந்து செல்வதாகவே அவ ளுக்குப் பட்டது. இரவு ஒன்பது மணிக்கெல்லாம் மாப்பிள்ளை வீடு வந்து சேர்ந்து விட்டார்; ஒரே சிரிப்பும், கும்மாளமும் வீட்டை கலகலக்க, வைத்தது.

தெம்பு ஊட்டினான். மேலும் அங் கிருந்தால் வார்த்தை வளர்ந்து, விபரீதம் நேரிடும் என்று எண்ணி, டாக்டர் வீட்டுக்குப் போய் வருவதாகக் கூறி சென் றான்.

என்னதான் பரிவும், பாசமும் தன்னிடம் சேகர் கொண்டிருப் பதாக அவள் எண்ணினாலும், நாளுக்கு நாள் தன்னிடமிருந்து சேகர் விலகிக் கொண்டிருப் பதாக அவள் உள்ளம் எண்ணி யது. தன் கணவன் தன்னிட மிருந்து விலக என்ன காரணம் என்று ஓரளவுக்கு அவள் தெரிந்து கொண்டிருந்த போதி லும், நர்ஸ் ரமாவையே அவள் பெண் மனம் குற்றம் சாட்டியது.

அன்று இரவு, மாட்டிற்கு வைக் கோல் போடச்சென்ற இந்திரா வின் மாமனின் குரல் கேட்டு, ஓடிப்பார்த்ததில், வாயில் நொப்பும் நுரையும் தள்ள கீழே விழுந்து கிடந்ததைக் கண்டனர். வைக்கோல் மேல் சரசர வென்ற சப்தம், இரவின் பயங் கரத்திற்கு சுருதி சேர்த்து ஓய்ந் தது. அவரின் நிலையைக் கண்ட தும் எல்லோருக்கும் திகில் பிடித்துக் கொண்டது. தீபாவளி யும் அதுவும், எங்கும் கோல கலத்துடன் விளங்கிய போது, இந்திராவின் வீட்டில் சோகமே குடிகொண்டிருந்தது. ஆசை மனைவியின் அணைப்பில், மாம னார் வீட்டு உபசாரத்தில் திளைத் திருப்போம் என்ற சேகரின் எண்ணத்தில் மண் விழுந்தது. அடுத்த நாளே சேகர் சென் னைக்குக் கிளம்பி விட்டான்.

மனத்திரையில் ஓடிய காட்சி அறுந்தது.

துக்கத்தால் அவள் மனம் பாரமாகி விட்டது. நோயின் உபாதையைவிட, மனப்பாரந் தான் அவளை மிகவும் வாட்டி யது. நிலை கொள்ளாமல் துடித் தாள், புரண்டாள், கண்ணீர் விட்டாள்.

* * *

நாற்பத்தெட்டு மணி நேரம் நகர்ந்து விட்டிருந்தது. நாளுக்கு நாள் மனச் சுமை அதிகரித்ததே தவிர குறையவில்லை. நோயின் வேகமும் அதிகரித்தது. அவள் சென்ற நாட்களில் பசுமை நினை வுகளை ஒன்று கூட்டி இன்பம் காண விழைந்தாள். அவள் கடந்து வந்த பாதையில், கோரைப் புற்கள் மலிந்திருந் தனவே தவிர, பசும் புற்கள் கண்ணுக்குக் கூட அகப்பட வில்லை. சின்ன வயதில் பச்சை பசுங் கிளியுடன் கொஞ்சிய நாட்கள் தான் அவள் மனத்தில் பதிந்திருந்தது. அந்தக் கிளிக்கு பேசும் சக்தியிருந்தால், இன் றைய அவள் நிலை கண்டு ஆறு தல் பல சொல்லியிருக்கும். பாவம்! நாக்கு படைத்த ஆண் டவன் அதற்கு வாக்கு படைக்க வில்லையே! கூண்டுக்குள்ளே பாலும்! பழமும் உண்டு, அவள் கட்டிலுக்கு மேலேயே அக்கிளி யும் இருந்தது.

இந்திராவின் நினைவுப் பாதை, மூன்றாவது தீபாவளிக்கு இழுத்து சென்றது. அப்போது அவள் நிறை கர்ப்பிணி. தன் பெயரை விளங்க வைக்க ஒரு வாரிசு வரப் போவதை அறிந்த சேகர் எல்லையில்லா மகிழ்ச் சியை அடைந்தான். தாயாகி விட்டப் பெருமையில் உடல் பூரித்து, மினு மினுப்புடன் திகழ்ந்தாள். தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன் இந்திரா இரட் டைக் குழந்தைக்குத் தாயா னாள். அவள் பெற்று பிழைத் தது புனர் ஜன்மம் என்றுதான் சொல்ல வேண்டும். பிறந்த இரண்டு குழந்தைகளும் ஆண் களாக இருந்ததினால் ராம, லக்ஷ் மண அவதாரமே என்று வீட் டுப் பெண்கள் பேசிக் கொண்ட னர். சேகரும், இந்திராவும் கொண்ட மகிழ்ச்சி மறைவதற் குள், ஒரு நாள் ஜுரத்தில் ஒரு குழந்தை கண்ணை மூடி விட்டது. தீபாவளிக்கு ஒரு நாள் முந்தி மற்றொரு குழந்தையும், வலிப்பு நோயால் மாண்டது. அவர்கள் மூன்றாவது தீபாவளி இந்த லக்ஷணத்தில் முடிந்தது.

இந்திராவின் நினைவுச் சரம் அறுந்தது. எண்ணச் சுமை அவள் இதயத்தை அழுத்தியது. கன்னச் சுவர்களில் நீர் வழி வகுத்தது. கூண்டுக்கிளி தன் அலகால் 'டக் டக்' கென்ற சப் தத்தை உண்டாக்கியது, தன்னு டைய தற்போது நிலையைக் கண்டு, தன் அருமைக் கிளி வருந்துவதாகவே அவள் உள் ளம் எண்ணமிட்டது. தன் வாழ் வில் அடுத்தடுத்து சங்கிலித் தொடர்போலத் தொடர்ந்து வரும் துன்பங்களைக் காட்டிலும், ஒரே மூச்சாக சாவு தேவதை

பிரயாணி: என்ன ஸார்! மரியாதை வாரம்னுட்டு தேனொழுகப் பேசுறீங்களோ ?

தன்னை அரவணைத்து கொள்வதையே அவள் மிகவும் விரும்பினாள். பெற்றெடுத்த இரு கண்களையும் பறி கொடுத்த ஏக்கம், அவள் உள்ளத்தை மாத்திரம் தாக்கவில்லை, உடலையும் பற்றியது, நாளுக்கு நாள் உடல் நலிந்தே வந்தது. இடி மேல் இடி ! துன்பத்திற்கு மேல் துன்பம் !! இந்திராவின் உடலும் உள்ளமும் நொறுங்கி விட்டது. ஏக்கம் அவள் விடும் ஒவ்வொரு மூச்சிலும் பிரதிபலித்தது. கவலையும், கண்ணீரும் அவளிடமிருந்து பிரியாதிருந்தன. காசம் அவள் உடலைப் பற்றியது. படுத்த படுக்கையானாள். சேகரின் கவனமெல்லாம் சதா இந்திராவின் உடல் நிலையைக் குறித்தே இருந்தது, அவன் பார்க்காத வைத்தியமில்லை. அவனிடமிருந்து பீஸ் வாங்காத டாக்டர்களும் இல்லை ! அப்போது தான் டாக்டர் பாரதியின் யோசனையின் பேரில், தன்னிடமிருந்த நர்ஸ் ரமாவை, இந்திராவுக்கு சிசுருக்ஷை செய்வதற்காக அனுப்பி வைத்திருந்தார்.

அழகும், புத்திசாலித்தனமும் கொண்ட ரமா, தன் கணவனுடன் பேசுவதை அவள் விரும்பவில்லை. ரமாவின் உதட்டசைவு, தன் கணவனை கவர்ந்திழுக்க வீசப்படும் புன்னகை வலையாகவே, படுத்திருக்கும் இந்திராவுக்கு பட்டது. இந்திராவுக்கு இதந் தருவதற்காக பேசும் வார்த்தைகள், நஞ்சை தேனிலே தோய்த்து தருவது போலிருந்தது. பொதுவாகச் சொல்லப் போனால், ரமாவின் ஒவ்வொரு அசைவும், தன்னிடமிருந்து தன் உடமையைப் பிரிக்க செய்யும் காரியமாகவே இந்திராவுக்குப் பட்டது. தனக்கும் சேகருக்கும் ஏற்பட்டிருக்கும் இந்த அபவாதம் அர்த்தமற்றது என்று எவர் கூறினாலும், ரமாவின் வாலிபமும், சேகரின் தனிமையும், ஒன்று சேர்ந்து விடும் என்று உலகம் நிச்சயம் சொல்லும். காணாததைக் கண்டதைப்போல் கதைத்துப் பேசும் இக் கபோதி உலகம், உண்மையை நம்பவா போகிறது ? இந்திராவின் சந்தேகத்தைப் போக்கலாம் என்று அவளை நெருங்கினால், ஒரு வேளை குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதை மாதிரி ஆகி விட்டால் என்ன செய்வது என்ற பீதி ரமாவை அவ்வாறு செய்யத் துணியவில்லை. ஆகவேதான் இந்திராவின் கருத்தை புரிந்து கொள்ளாத மாதிரியில் நடந்து வந்தாள்.

இரவு மணி எட்டிருக்கும். வீதியில் சிறுவர்கள் பட்டாசு கட்டு வெடிப்பதில் தீவிரமாக இருந்தனர். விடிந்தால் தீபாவளி.

கடமை உணர்ச்சி உந்தித் தள்ள, நர்ஸ் ரமா, மருந்து கிளாஸுடன் இந்திராவின் அறைக்குச் சென்றாள். அவளின் உடல் நிலை ரமாவுக்கு பகீரென்றது. சிறையிலிருந்து விடுதலை ஆகப்போகும் கைதியின் மனம் படபடக்குமே, அம்மாதிரி அவள் இருதயம் அடித்துக் கொண்டிருந்தது. கண்கள் மூடி

இருந்தன. அவள் முகத்தில் பிரேதக்களை தட்டியது. அவள் நினைவு மெல்ல மெல்ல நழுவி வான வீதியிலே உயர பறப்பது போல தோன்றியது. இந்திராவுக்கு தன் உடல் மிகவும் லேசாக மாறி பஞ்சு மாதிரி பறப்பது போல உணர்ந்தாள். கண்களை திறக்க பெரும் முயற்சி எடுத்தும் பயனில்லாததால், அம்முயற்சியையும் கை விட்டு விட்டாள்.

எங்கும் இருள் படர்ந்த ஒரு சூனிய உலகில் தன்னந்தனியளாக, மூட்டை முடிச்சுகளுடன் நின்று கொண்டிருந்தாள். அவள் தலை—விரித்தபடி, வீசும் காற்றில் பறந்து கொண்டிருந்தது. தொட்டால் ஒட்டிக் கொள்ளும் அந்த கனத்த இருட்டில், எதன் வருகையையோ எதிர் பார்த்து காத்திருப்பவள் போலவே அவள் காணப்பட்டாள். மோன அமைதியுடன் விளங்கிய அந்த சூழ் நிலையை, எங்கிருந்தோ வந்த, 'டக், டக்' என்ற ஒலி கலைத்தது. அந்த ஒலி? என்னவாக இருக்கும் என்ற சிந்தனை அவள் எண்ணத்தில் நிழலோடியது. கரிய இருளின் ஊடே தன் பார்வையை ஊடுருவினள். தூரத்தில் ஏதோ ஒரு உருவம் மெதுவாக தன்னை நோக்கி வருவதாக உணர்ந்தாள். அந்த உருவம் நெருங்க நெருங்க, அது ஒரு எருமை என்பதை உணர்ந்தாள். அது ஒவ்வொரு முறை தன் காலை பெயர்த்து எடுத்து வைக்கும் போது உண்டாகும் ஒலி, வர வர பெருத்த சப்தத்துடன் ஒலிக்க தொடங்கியது. அந்த சப்தம் அவள் காதையே செவிடுபடச்செய்யும் அளவுக்கு வளர்ந்தது. அந்த எருமையின் பூரண உருவம் அவள் கண்களுக்குத் தெரிந்ததும், அவள் உடல் பயத்தால் நடுங்கியது. எருமை உயிரைக் கவரும் காலனின் வாகனம் என்ற நினைவு தான் அவளின் இந்நிலைக்குக் காரணம். இப்போது அந்த எருமை அவளுக்கு வெகு சமீபத்தில் வந்து நின்றது. அதன் மேல் அவள் பயந்தபடியே பாசக் கயிறுடன் யமன் வீற்றிருந்தான். மருட்டும் விழிகளும், முரட்டு மீசையும் கொண்டு, கண்டோரை கதிகலங்கச் செய்யும் தோற்றத்துடன் விளங்கிய எமன், இவள் மேல் பாசக் கயிறை வீச எடுத்தான். மரணம் தன்னை சமீபித்துவிட்டதை உணர்ந்த அவள், அதனிடமிருந்து தப்பி ஓட யத்தனித்தாள். தலை தெறிக்க ஓடும் அவளை இரு கரங்கள் தடுத்து நிறுத்தின. அந்தக் கரங்களின் சொந்தக்காரர் யார் என்று அவளால் அந்த இருட்டில் கண்டு பிடிக்க இயலவில்லை. கொஞ்சம் வெளிச்சம் இரு கரங்களின் மீதும் பட்டது. ஒன்று ஷர்ட் அணிந்திருந்தது மற்றென்று வளையலுடன் விளங்கியது. இதன் சொந்தக்காரர்கள் யாராக இருக்க முடியும் என்ற எண்ணம் அவளுக்கு எழுவதற்கும், முழு வெளிச்சம் அவர்கள் மேல் விழுவதற்கும் சரியாக இருந்தது. ஆ! என்ன! சேகரும், நர்ஸ் ரமாவும்!! ஆம் அவர்கள் தான் காலனிடமிருந்து தப்பி, வாழ்க்கைப் பூங்காவிற்குள் நுழைய வருபவளை தடுத்து நிறுத்தி, காலனிடம் ஒப்புவிக்கும் கைங்கரியத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அவளுக்கு ஆத்திரமும் அழுகையும் பொத்துக் கொண்டு வந்தது. ஆனல் அவர்களோ, பயங்கரமாக சிரித்துக்

> பயந்தான் நம் எல்லோருடைய அழிவுக்குக் காரணம். பயத்திற்கு நாம் அடிமைப்பட்டு விடுகிறோம். நம்முடைய பயத்தை சிலர் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொண்டு நம்மையும் மேலும் பயமுறுத்துகிறார்கள்.
>
> —மாக்ஸீம் கார்க்கி

கொண்டே காலனின் எதிரில் அவளை தள்ளினுர்கள்.

''ஐயோ! வேண்டாம்! முடியாது!! விடுங்கள்'' என்று ஓவென கத்தினுள். ஆனல் அவர்கள், அவள் கதறலை லக்ஷியம் செய்தால் தானே! அவர்கள் தான் பயங்கரமாக பேய் சிரிப்பு சிரித்துக் கொண்டிருக்கிருர்களே! அவளின் கதறல். கண்ணீர், எதையுமே பொருட்படுத்தாது, காலனின் பாசக் கயிறு அவள் மேல் விழுந்தது.

ஈயக் குண்டுகள் கட்டி தொங்க விடப்பட்ட மாதிரி, அழுந்திக் கிடந்த இமைகள் தாமாகவே 'படக்' கென திறந்து கொண்டன, இந்திரா சுற்றிலும் தன் பார்வையை ஓட்டினுள், தன் கணவன் சேகரும், நர்ஸ் ரமாவும் கவலை தோய்ந்த முகத்தினராய், தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. தான் இது வரை கண்டு வந்த கொடிய கனவு அவள் நெஞ்சத்தில் பதிந்து விட்டிருந்தது, அதை திருப்பிச் சொல்ல எவ்வளவோ முயன்ருள். அவள் நாக்கு புரள மறுத்தது. தன் கணவன் ஏதோ கூறுவதாக அவள் கண்டாள். அவன் வாயசைப்புதான் இவள் கண்களுக்குத் தெரிகிறதே யல்லாமல், வார்த்தைகள் அவளுக்கு கேட்கவில்லை. தன் கணவனின் கண்களிலிருந்து கண்ணீர் சிந்துவது இந்திராவின் உள்ளத்தை வாள் கொண்டு அறுப்பது போலிருந்தது. எந்த வித ஆறுதலும் கூற வழியில்லாதவளாக அவளும் அவனுடன் சேர்ந்து கண்ணீர் விட்டாள். சேகர், இந்திராவை அணைத்தபடி, ஏதேதோ கூறிக் கொண்டிருந்தான். நிமிஷத்திற்கு நிமிஷம் இந்திராவின் நினைவு தப்பிப் போய்க் கொண்டேயிருந்தது. அவள் கண்கள் பஞ்சடைந்து போய்விட்டன.

மேலே மாட்டியிருந்த கூண்டுக்கிளி எதையோ கண்டு பயந்து, 'கிரீச்' சென்று கத்தியது.

உள்ளே கூடத்தில் இந்திராவின் உடலை வளர்த்தி இருந்தார்கள். பெண்களின் ஓலம் பல ஸ்வரங்களில் ஒலித்துக் கொண்டிருந்தது.

வாசலில் நின்றிருந்த டாக்ஸியில், நர்ஸ் ரமா, தன் மருத்துவ சாமான்களுடன் ஏறினுள், சேகர் வண்டிக் கதவை மூடினுன். வண்டி புறப்பட்டது. வீதியில் சிறுவர்கள் பட்டாசைக் கொளுத்திப் போட்டு கூச்சலிட்டபடி இருந்தனர். இதை வெறித்த நோக்குடன், பார்த்தபடி இருந்தான் சேகர்!

இனி அவன் வாழ்வு? வெடித்த பட்டாசு! கொளுத்தி அணைந்த மத்தாப்பு தானே!

பொல்லாத மானேஜர்

கே. ஆர். கௌஸல்யா

கூடத்துக் கடிகாரத்தில் மணி பதினொன்றடித்தது. நாராயணனின் அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மேஜையின் மீது பிரித்து வைக்கப் பட்டிருந்த ஆபீஸ் 'பைல்' களைக் கைகள் தம் போக்கில் புரட்டிக் கொண்டிருக்க குழம்பிய உள்ளத்துடன், சிந்தனை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்த அவன், தந்தை ஜகன்னாதன் அறை வாயிற்படியருகில் கோபமே உருவாக வந்து நின்றதைக் கவனிக்க வில்லை.

''ஏண்டா நாராயணா!.... இன்னிக் கென்ன? சிவராத்திரியா? இல்லே வைகுண்ட ஏகாதசியா?.... நானும் பாக்கறேன்! ஏழறை மணிக்குச் சாப்பிட்டுட்டு உட்கார்ந்தவன்.... விளக்கை எரிச்சுண்டு வேலை!....'' கோபத்துடன் இரைந்தார் அவர்.

சிந்தனை கலைந்து திடுக்கிட்டு நிமிர்ந்த நாராயணன், ''இன்றைக்கு இந்த 'பைலை' பார்த்துத் தீர்த்துத் தான் ஆகணும் அப்பா!.... இல்லேன்னா நாளைக்கு மானேஜர் முகத்திலே முழிக்க முடியாது!...'' என்றான்.

''நல்ல மானேஜர்!.... நன்னா உழைக்கறே இந்த கொள்ளைக் காசுக்கு!.... 'விட்டுத் தள்ளுடா இந்த ஆபீஸை.... பேசாம பஞ்சாப கேசன் பண்ணி வைக்கறேன்னு சொல்ற வேலையை லட்சணமா ஏத்துக்கோடா.... இதைவிட நல்ல சம்பளம்.... இப்படி உடம்பைக் கரைக்கிற வேலை இல்லே அங்கேன்னு நான் முட்டிக்கிறேன்.... நீ கேட்கல்லை... கட்டிண்டழு அந்த ஆபீஸையும், மானேஜரையுமே!....'' என்று வெறுப்பு தொனிக்கும் குரலில் கூறிவிட்டு விடுவிடுவென்று சென்று விட்டார் அவர்.

சற்று நேரம் திக்பிரமையடைந்து உட்கார்ந்திருந்த நாராயணன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விட்டவன் போல் நாற்காலியை விட்டு விறுக்கென்று எழுந்தான். முடிக்காத ஆபீஸ் வேலையை முடிக்காமலே விட்டு விட்டு, விளக்கை யணைத்து விட்டுப் படுத்து விட்டான். உடம்பெல்லாம் ஒரே வலி; கண் பச்சை மிளகாயை அரைத்து வைத்தாற் போல் எரிந்தது — அவனுடைய ஆபீஸ் மானேஜர் கிருஷ்ணமூர்த்தியை எண்ணியபோது அவனுடைய மனசும் சேர்ந்து எரிந்தது. 'சட்' என்ன மனுஷர்!.... கல் நெஞ்சக்காரர்!.... நன்றாக, ஏமாந்தாங் குளியாய் வகையாகப் போய் மாட்டிக் கொண்டேன் நான் அவரிடம்!....' என்று முணுமுணுத்தான் நாராயணன்.

* * *

ஹானர்ஸ் முடித்த உடனேயே, வேலைக்காக அதிகமாக உடம்புக்கோ, மனசுக்கோ அலைச்சலில்லாதபடி, நண்பன் ஒருவன் கூறியதன் பேரில், 'சிவராஜ் மோட்டார் கம்பெனி' மானேஜர் கிருஷ்ணமூர்த்தியைப் போய்ப் பார்த்ததன் பயனாக அங்கு ஏதோ சுமாரான சம்பளத்தில் கிளார்க் உத்தியோகம் கிடைத்தபோது நாராயணன் பெருமையிலும், மகிழ்ச்சியிலும் துள்ளினான். ஆனால் கொஞ்ச நாளைய பழக்கத்திலேயே மானேஜர்

கிருஷ்ண மூர்த்தியின் சுபாவத் விநோதமானது. அதிகாரம், மிடுக்கு, கண்டிப்பு முதலிய மூன்று அரும் பெரும் குணங்களும் பரிபூரணமாக அமையப் பெற்றவர்; தம்முடைய உயர்ந்த ஸ்தானத்திற்கும் பதவிக்கும் அனுசரணையாகத் தமக்கு வரப் பிரசாதம் போன்று அமைந்துள்ள அம் மூன்று குணங்களையும் அவர் தாராளமாகத் தண்ணீர் போல் பயன் படுத்திச் செலவழிக்க எந்தக் கணமும் தயங்க மாட்டார். இதைப் புரிந்து கொண்ட போது நாராயணனுக்கு உள்ளுக்குள் கொஞ்சம் உதைப் பாய்த்தானிருந்தது. நாராயணன் சுபாவத்திலேயே ரொம்பவும் புத்திசாலி; கல்லூரிப் படிப்பை முதல் வகுப்பிலேயே முடித்துத் தேறியவன். இருந்த போதிலும் வயது, அனுபவம் ஒன்றிலுமே அதிக முதிர்ச்சியடையாத நாம் எப்படியடாப்பா இந்த மானேஜரிடம் நல்ல பெயர் வாங்கி மீளப் போகிறோம்' என்பதை எண்ணி நடுங்கினான் அவன். தான் உண்டு, தன் வேலையுண்டு என்று மிகவும் அக்கரையாக, கவனமாக வேலை செய்து கொண்டு அமரிக்கையாக இருந்த அவன் பயத்தை அதிகப்படுத்தும்படியாக ஒரு நாள் மானேஜர் கிருஷ்ண மூர்த்தி, அவனை இனி தம்முடைய 'பர்ஸனல் அஸிஸ்டெண்டாக'ப் போட்டுக் கொண்டிருப்பதாகச் சொன்னார். ''ஐயோ பாவம்!.... நாராயணா!.... வகையாய் வந்து அகப்பட்டுக் கொண்டாய் இந்த மானேஜரிடம்!.... உன்னைப் போல ஒரு புத்திசாலியான, உழைப்பாளியான, எல்லாவற்றுக்கும் மேல் ஒரு அப்பாவியான ஆசாமியைத்தான் அவர் தேடிக்கொண்டிருந்தார்!.... அவரைப்பற்றி — அவர் சுபாவத்தைப் பற்றி அறிந்து கொள்ள உனக்கு ஒரு நல்ல 'சான்ஸ்'! அவர் இனி உடம்பை அதிகமாக அலட்டிக் கொள்ளமாட்டார்! உன் வேலை அவர் வேலை இரண்டையும் சேர்த்து பார்க்க வேண்டும். அதனால் என்னவோ பெரிய சாம்ராஜ்யப் பதவி கிடைத்து விட்டதாக எண்ணி ஒரு சுற்று பருத்துவிடாதே! அப்புறம் வேலை செய்வது மெத்த கடினம்....'' என்று காஷியர் ராமநாதன் நாராயணனின் முதுகை அனுதாபத்துடன் தடவியவாறே கூறிய போது அவன் சொன்னதவ்வளவையும் ஹெட்கிளார்க் சுந்தரம் தலையை ஆட்டி, முக பாவத்தைப் பல் வேறு தினுசாக மாற்றி அபிநயம் பிடித்து ஆமோதித்தபோது நாராயணனுக்குத் திகிலால் உடம்பு வெலவெலத்துப் போய் விட்டது. இனிமேல் அதிக நாள் இங்கே வண்டி 'ஓடாது' என்ற நிலைமைக்கு அப்போதே வந்து விட்டான்.

மறு நாளே அவன் வேலை கிருஷ்ணமூர்த்தியுடன் ஆரம்பமாயிற்று. டிபன் சாப்பிடக் கூட நேரமின்றி 'டக் டக்....டடக்' என்று எப்போது பார்த்தாலும் ஓய்ச்சல் ஒழிவின்றி டைப்யந்திரத்தைக் கட்டி யழுது கொண்டு யந்திரத்தோடு இயந்திரமாக இயங்க வேண்டியிருந்தது நாராயணனுக்கு. மேஜையின் மேல் குவிந்து கிடந்த ஆயிரக் கணக்கான காகிதங்களில் கண்ணைமூடித் திறக்கும் நேரத்திற்குள் மடமடவென்று கையெழுத்து செய்தாக வேண்டும். மாலை மணி ஐந்து எப்போது ஆகப்போகிறது என்று காத்திருந்து, 'அப்பாடா! ஒரு வழியாக இன்றைய வேலை தீர்ந்து தொலைந்தது' என்று அவன் வீட்டுக்குக் கிளம்பும் போது, ''மிஸ்டர் நாராயணன்! இதையெல்லாத்தையும் வீட்டில் சரி பார்த்து இன்று முடித்துக் கொண்டு வந்து விடுங்கள்!'' என்று ஒரு கத்தை அச்சடித்த காகிதங்கள் அடங்கிய 'பைலை' அவன் முன் நகர்த்துவார்

கிருஷ்ண மூர்த்தி. முகத்திலே ஒருவித மாறுதலையும் காட்டிக் கொள்ளாமல் 'சம்மதம்' என்பதற்குறியாகத் தலையை யசைத்து விட்டு அந்தக் கத்தை யைச் சுமந்து கொண்டு வீட்டுக்குச் செல்லுவான் நாராயணன். இரவெல்லாம் கண் விழித்து அவற்றையெல்லாம் பார்த்து முடித்து ஒழுங்கு படுத்தி விட்டுக் கொவ்வைப் பழம் போல் சிவந்த கண்களுடன் படுக்கும் நாராயணனுக்குக் காலை மணி எட்டடித்தது கூடத் தெரியாது. ''[illegible]லல ஆபீஸ்! நன்ன உழைக்கிறேபோ!....'' என்று தந்தை ஜகன்னுதன் வந்து அவனை உதய ராகம் பாடி எழுப்பினல்தான் அவனுக்குக் கண் விழிக்கும். பிறகு ஆபீஸுக்கு நேரமாகி விட்டதை உணர்ந்து பரபரப்புடன் பல் தேய்த்துக் குளித்து சாப்பாட்டை ஒரே வாயில் விழுங்கி விட்டு பஸ்பிடித்து ஆபீஸில் வந்து 'பொத்'தென்று ஆசனத்தில் விழுவான் அவன்.

நல்ல வேளையாக மானேஜர் இன்னும் வரவில்லை என்றறிந்தால் ஓடிவந்த ஆயாசம் தீர மேஜைமீது தலையைச் சாய்த்து வைத்துப் படுத்துச் சிறிது ஆசுவாசப்படுத்திக் கொள்ளுவான்.

அவ்வளவு கஷ்டப்படுகிறுனே மானேஜருடைய வேலையையெல்லாம் தன் தலையில் சுமத்திக்கொண்டு செய்து! அதற்காக நாராயணனுக்கு ஒரு பாராட்டுச் சொல்லாவது கிடைக்குமா?.... ''மிஸ்டர் நாராயணன்! இன்னும் உங்களுக்குப் பொறுப்புத் தெரியவில்லையே!.... ஏதோ 'காமா சோமா'வென்று செய்திருக்கிறீர்கள் வேலையை! அதை நான் சரிபார்த்து முடித்துக் கொள்ளுவேன் என்கிற எண்ணமாக்கும்! அதுதான் நடக்காது! அப்பழுக்கின்றி வேலை செய்ய இன்னும் கற்றுக் கொள்ளவில்லையே! வீட்டுக்குச் செல்வதிலேயே 'ஙிகா'வாக

இருக்கிறீர்கள்!....'' என்று முகத்தைச் சுளித்தவாறே கூறுவார். நாராயணனுக்கு வயசும் சிறிசு; அனுபவமும் கிடையாது. அந்த சமயங்களில் ஒரு குழந்தையைப் போல் வாய் விட்டு அழவேண்டும் போலிருக்கும் அவனுக்கு! அதை சிரமப் பட்டு அடக்கிக் கொள்ளுவான்.

நாராயணன் வெளியே வந்ததும், ''இதற்கெல்லாம் மனசு ஒடிந்து விடாதே நாராயணு! அவர் சுபாவம் அது! உனக்கும் தைரியத்திற்கும் ரொம்ப தூரமாக இருக்கிறது. நீ போய் பொறிக்குள் எலியாய் அவரிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டாய்....'' என்று அனுதாபம் கூறுவான் ஹெட்கிளார்க் சுந்தரம்.

அன்று ஒரு நாள் மாலை. மானேஜர் கிருஷ்ணமூர்த்தி ஏதோ அலுவல் காரணமாக மூன்று மணிக்கே காரை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார். மாலை ஐந்தரை மணிக்குள் தான் வந்துவிடுவதாகவும் அதுவரை நாராயணனை ஆபீஸிலேயே இருக்கும் படியும், ஏதோ வேலையிருப்பதாகவும் சொல்லிவிட்டுச் சென்றார். மணி ஐந்தடிக்கும் வரை பொறுமையாக வேலை செய்து விட்ட நாராயணனுக்கு அதற்குப் பிறகும் அங்கு உட்கார்ந்திருக்கப் பிடிக்கவேயில்லை. சோர்வுடன் மேஜைமீது காலைத் தூக்கி போட்டுக்கொண்டு நாற்காலியின் பின்புறம் சாய்ந்து கொண்டு 'அப்பாடா! என்று ஆயாசத்துடன் பெரு மூச்செறிந்தான் அவன். காஷியர் ராமநாதன் அவன் அறைக்குள் பிரவேசித்து, ''ஏன் பள்ளிக் கொண்டீரய்யா!...ஸ்ரீமந் நாராயணு'' என்று ராகமிசைத்துப் பாடியவாறே அவன் முதுகில் ஓங்கி ஒரு அடி வைத்தான். ''வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துக் கோப்பா!.... என்னமோ அவர் சொல்லிவிட்டுப்போனுராம்....ஆபீஸெல்லாம் காலியானப்புறம் கூட அதுக்காக இவன் கதவைப் பூட்டுகிற ப்யூன் மாதிரி உட்கார்ந்திருக்கிறுனம், சட்! எழுந்திரய்யா!'' என்று அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினுன்.

''மானேஜரிடம் நாளைக்கு என்னத்தைச் சொல்றது?...''

''திடீர்னு தலையைச் சுற்றி மயக்கம் போல் வந்தது. அதனுல் 'ஆட்டோரிக்ஷா' வச்சுண்டு விட்டுக்குப் போய்விட்டேன்னு சொல்லிடேன். வேணு ஒரு லெட்டரும் கிறுக்கிவச்சுடு! இதெல்லாமா பிரமாதம்! இதனுலெல்லாம் உனக்கு வேலைப் போயிடும்னு பயப் படாதே! உன்னைவிட்டுட்டா, உன் மாதிரி சலாம் போட்டுண்டு இரண்டாள் வேலையைச் செய்யும் சாமர்த்தியம் வாய்ந்தவன் அவருக்கு யாரும் கிடைக்க மாட்டான்! எழுந்திரு!'' என்று அவனுக்குத் தைரிய மூட்டினுன்.

உடனே 'சடா'ரென்று நாற்காலியை விட்டு எழுந்த நாராயணன் டிராயரில் எல்லாவற்றையும் வைத்துப் பூட்டிவிட்டுக் கடிதம் எழுதி மேஜை மேல் வைத்துவிட்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டார்.

மறு நாள். அவன் ஆபீஸுக்குள் நுழைந்த போது மானேஜர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. ''நேற்று உமக்கும் சேர்த்து இரண்டு ஸீட் நானே 'ரிஸர்வ்' செய்திருப்பேனே! ஆபீஸுக்கு வந்து பார்த்து விட்டு நீர் வீட்டுக்குப் போய் விட்டீர் என்று அறிந்ததும், நான் நேரே சினிமாவுக்குச் சென்றுவிட்டேன். அங்கே பதினைந்தணு ஸீட்டில் பார்த்தேன் உம்மை!'' என்றுர் அவர் கேலிச் சிரிப்புடன்.

நாராயணனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'எவ்வளவு பெரிய அபாண்டம்! அவன் முதல் நாள் வீட்டில் ஏழு மணிக்கே அல்லவா சாப்பிட்டு விட்டுப் படுத்துத் தூங்கிவிட்டான்!

"ஸார்! நீங்கள் யாரையோ பார்த்துவிட்டு நான் என்று....!" பரிதாபமாக விழித்தான் அவன். கிருஷ்ணமூர்த்தி பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாகத் தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார். நாராயணனுக்குத் துக்கம் நெஞ்சையடைத்துக் கொண்டு வந்தது.

அன்று மாலை அவன் வீட்டுக்குப் புறப்படுவதற்குள் மணி ஆறரையாகிவிட்டது. மேஜை டிராயரைப் பத்திரமாகப் பூட்டிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்காக எழுந்த அவன் கண்களில் மானேஜரின் டேபிளுக்கடியில் பாதிக் கிழித்தும் கிழிக்கப்படாமலுமிருந்து கிடந்த ஒரு கடிதம் தென்பட்டது. ஏதோ ஒரு ஆவலால் உந்தப்பட்ட அவன் அந்தக் கடிதத் துண்டுகளை மிகவும் சிரமப்பட்டு ஒன்று சேர்த்து வைத்துப் படித்தான். அது ஒரு புகார்க் கடிதம். நாராயணன் முதல் நாள் உடம்பு சரியில்லை என்று பொய் சொல்லி வீட்டுக்குச் செல்வதாக எழுதி வைத்து விட்டுச் சினிமாவுக்குச் சென்றிருந்ததாகவும், அவனை அங்கு, தான் பிரத்யக்ஷமாகப் பார்த்ததாகவும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. எவ்வளவு சிரமப்பட்டும் எழுதியவர் பெயரை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை நாராயணனால். மனசறிய அவன் ஒரு தீங்கும் செய்தறியாத யாரோ ஒருவருக்கு மூன்றுவது பிரகிருதிக்கு அவன் மேல் அத்தனை கருணை! அதைப் பார்த்துவிட்டுத்தான் அதைச் சொல்லாமல் சொல்லி அவனைக் கண்டித்திருக்கிறார் மானேஜர் கிருஷ்ணமூர்த்தி! அவருக்குத்தான் புத்தி எங்கே போய் விட்டது? தீர விசாரியாமல் அதை நம்பிக் கொண்டு அவர் அவனை எப்படிக் கண்டிக்கலாம்? ஆனால் அதுவும் நல்லதாயிற்று! அவர் விசாரணை செய்யப் போய் நாராயணனுக்கு யோசனை சொல்லிக் கொடுத்த காஷியர் ராமநாதனே அவனைக் காட்டிக் கொடுத்து சாக்ஷி சொன்னாலும் சொல்லிவிடலாம்! நாராயணனுக்குத்

தைரியமாக வாதாடத் தெரியாது என்பது அந்த ஆபீஸில் பிரசித்தமாகியிருக்கும் விஷயமாயிற்றே!

கண்களிலிருந்து 'கர கர' வென்று பெருகி ஓடும் கண்ணீருடன் அந்தக் காகிதத் துண்டுகளை விட்டெறிந்துவிட்டு, அவ்வளவு மனசு ஒடிந்துவிட்ட நிலைமையிலும் மானேஜர் பார்த்து முடிக்கச் சொல்லியிருந்த 'பைலு'டன் வீட்டுக்கு கிளம்பினான் நாராயணன்.

ஒரு பாபமுமறியாத அவன் மேல் ஏன் இத்தனை காரம் அந்தக் காரியாலத்திலுள்ளோருக்கு?.... தனக்கு அனுதாபப் படுவது போலும் நடித்து மானேஜருக்கும் புகார் எழுதும்படி? அதை நம்பிக்கொண்டு உடம்பைக் கசக்கிப் பிழிந்து வேலை செய்யும் நம்மை ஈவிரக்கமின்றி கோபித்துக் கண்டித்தாரே மானேஜர்!

எவ்வளவோ சகிப்புத் தன்மையும், மென்மையான உள்ளமும் படைத்த நாராயணனையே அன்றைய அந்த சம்பவம் ஒரு கலக்குக் கலக்கி விட்டது. அதைமேலும் அதிகமாக்கி உள்ளம் உடையச் செய்து அதற்குத் தூபம் போட்டது நாராயணனின் தந்தை ஜகன்னாதனின் வார்த்தைகள். 'ஏற்கனவே அந்த புகார்க் கடிதத்தைப் பார்த்துவிட்டு நம்மேல் கோபமாக இருக்கும் மானேஜர் நாளைக்கு அவர் கூறிய வேலையை முடிக்காமல் செல்வதற்கு எரிந்து விழப் போகிறார். அப்படி விஷயம் ரொம்ப தூரத்திற்கு முற்றி விட்டால் பேசாமல் ராஜினாமாக் கடிதம் எழுதி நீட்டிவிட்டு வந்துவிட வேண்டும். அப்பாவின் சிநேகிதர் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லும் வேலையை ஒத்துக் கொண்டுவிடலாம்' என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டான் அவன்.

மறு நாள் காலை, அன்று வழக்கத்திற்கு விரோதமாகக் காரியாலயம் ரொம்பவும் தடபுடல் பட்டுக் கொண்டிருந்தது. நாராயணன் காரணம் விளங்காமல் விழித்தவாறே தன் அறைக்குச் சென்றான். போகும் வழியில் குறுக்கே வந்து நின்ற காஷியர் ராமநாதன், "நாராயணா! விடுதலை! விடுதலை! விடுதலை! நம்ப சிடுமூஞ்சி மானேஜர் பாம்பே பிராஞ்சுக்கு மாற்றப்பட்டிருக்கிறார், முதலாளி சிவராஜ் இன்று வந்திருக்கிறார். புது மானேஜர் தான் இனிவரப் போகிறார். நாளையிலிருந்தே நமக்கெல்லாம் - முக்கியமாக - உனக்கு விடுதலை!...." என்று அவன் காதருகில் வந்து மெல்லிய குரலில் ராகமிசைத்துப் பாடினான். "நிஜம்மாகவா?...." நாராயணனுக்கு இருந்த மகிழ்ச்சியில் அது காரியாலயமாக இராமலிருந்தால் ஒரு குதி குதித்திருப்பான்.

"நல்ல வேளை! இவர் போய்த் தொலைகிறார்! வரப்போகிற மானேஜரின் சுபாவத்தை அறிந்துகொண்டு பிறகு தான் ராஜினாமா செய்வதைப் பற்றி யோசிக்க வேண்டும், வரப்போகிறவர் இவருக்கு நேர் எதிரான ஒரு வாயில்லாப் பூச்சியாக இருந்தால்...." என்று எண்ணிய நாராயணன் தன் இடத்தில் உட்கார்ந்து வேலையைக் கவனிக்கத் தொடங்கினான். அன்றைய தினம் சனிக்கிழமை யாதலால் ஆபீஸில் அரைவேளை காலக்ஷேபம்தான். எப்படியோ முடித்துத் தொலைத்துவிட்டு வீட்டுக்கு வந்த நாராயணன் மகிழ்ச்சியுடனும் பூரிப்புடனும் அந்த சமாசாரத்தைத் தந்தையிடம் சொன்னான்.

"போடா!.... வரப்போகிற மானேஜர் மட்டும் உங்க மாமனாரோ? அவர் இவருக்கு மேல் எமகாதகராக இருந்தால் என்ன செய்வாய்?" என்று

அசுவாரஸ்யமாக பதிலளித்தார் அவர்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை ஆபீஸ் கிடையாது. திங்களன்று நாராயணன் ரொம்பவும் குதூகலமாக ஆபீஸில் நுழைந்தான். அவனை விறைத்து விறைத்துப் பார்த்து விரட்டு விரட்டு என்று விரட்டியடித்து வேலை வாங்கும் மானேஜர் கிருஷ்ணமூர்த்தியின் ஆசனம் காலியாக இருந்ததைப் பார்த்து அவனுக்கு மனசுக்குத் தெம்பாக இருந்தது. ஆபீஸில் 'கச' 'முச' வென்று எல்லோரும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். 'புதுசா மானேஜர் யாரும் வரப் போறதில்லையாம்! ஆபீஸிலே இருக்கிறவாளுக்குள்ளேயே தான் யாரையோ தேர்ந்தெடுக்கறத்துக்காக முதலாளி சிவராஜ் இன்றைக்கு ஆபீஸுக்கு வருகிறார்....' என்பது தான் அவர்களுடைய பேச்சின் சாரம்சம்.

அன்று என்னமோ ஆபீஸில் அத்தனை அமைதி! மாடியிலிருந்து 'தட' 'தட' வென்று இறங்கி வந்தான் ப்யூன் கந்தசாமி! "உங்களை முதலாளி ஐயா கூப்பிடறாரு!....!! என்று நாரயணனிடம் வந்து அவன் கூறியபோது பொறாமையும், கோபமும், ஏமாற்றமும் குழப்பமும் நிரம்பி பொங்கி வழியும் அநேகம் விழிகள் நாராயணனையே சுட்டெரித்து விடுவன போல் பார்த்தன.

''கந்தசாமி! ஐயா யாரைக் கூப்பிட சொன்னாரு? சரியாக கேட்டுண்டு வந்தயா? காஷியர் ராமநாதன்னு சொல்லிருப்பார்'' என்றான் ராமநாதன் பொறுமையிழந்த குரலில்.

''இல்லை ஸார்! மிஸ்டர் நாராயணனைத் தான் அவர் கூப்பிட்டுக்கிட்டு வரச் சொன்னார்!'' என்றான் அவன் சிரித்துக் கொண்டே!

> "பாவிகளே உங்கள் பாவங்களை மன்னிக்கும்படி ரக்ஷகனிடம் பணிந்து விண்ணப்பம் செய்யுங்கள். பரமபிதா ரக்ஷிப்பான்" என்று ஏசுநாதர் பன்னிப் பன்னிச் சொன்னார். ஆனால் இந்த உபதேசங்கள் அடங்கிய 'பைபிளை' எல்லாக் கிருஸ்தவ நாடுகளிலும் அழகாக அச்சடித்து மாதா கோயிலுக்கு போகும்போது அலங்காரமாகப் பிடித்துக்கொண்டு போவதற்கு ஒரு அணியாகத்தான் உபயோகித்தார்கள்.
>
> —நாமக்கல் கவிஞர்.

நாராயணனுக்கு மட்டும் ஏனோ கைகால்கள் நடுங்கின. அவன் மனதில் மகிழ்ச்சியோ, உற்சாகமோ இல்லை. போகிற போக்கில் மானேஜர் மகராஜன், சமீப காலத்தில் நாம் நடந்துக் கொண்ட விதத்தைப் பற்றி நம் மேல் புகார் எழுதி வைத்து நம் வேலைக்கு சீட்டுக் கிழித்து விட்டுப் போகிறாரோ என்னவோ! அதைச் சொல்லத்தான் முதலாளி கூப்பிடுகிறாரோ?....'' என்று ஏதேதோ எண்ணிய வாறே சிறைக்குச் செல்லும் கைதியைப் போல் நடந்தான் அவன்.

"மிஸ்டர் நாராயணன்! இப்படி உட்காரும்!'' என்று தமக்கெதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினார் முதலாளி சிவராஜ். அவர் குரலில் தொனித்த சாவதானம் அவனுக்குச் சிறிது தைரியத்தை ஊட்டியது. "இதோ, இந்த 'கான்பிடன்ஷியல் பைலை' நானும் புரட்டிப் புரட்டிப் பார்த்து விட்டேன், உங்கள் ஒருவரைப் பற்றித்தான் நல்ல அபிப்பிராயம் மானேஜர் கிருஷ்ண மூர்த்திக்கு! மற்றவர்களைப் பற்றி யெல்லாம் அவர் எழுதி வைத்திருக்கும் அபிப்பிராயக் குறிப்புகள்

ஒன்றுகூட ரஸமாயில்லை. அவற்ளுேடு ஒப்பிட்டுப் பார்த்தால் நேர்மையோடு சுயநலமின்றி உண்மையாக உழைக்கும் திறன், அடக்கமான சுபாவம், கெடுப்பதற்கென்றே உள்ள பிறத்தியாருடைய வார்த்தைகளைக் கேட்டு நெகிழ்ந்துவிடாத மனேதிடம், (இந்த இடத்தில் நாராயணன் தன் நெஞ்சில் கையை வைத்து அழுத்திக் கொண்டான்) அடக்க சுபாவம் முதலியன உங்கள் ஒருவரிடம் தான் பூரணமாக நிரம்பியிருக்கிறது. மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி மாற்றலாகிப் போவதைப் பற்றிய தீர்மானம் எங்களுக்குள் உருவாக ஆரம்பித்த உடனேயே அந்த இடத்தில் உங்களைத்தான் நியமிக்க வேண்டுமென வைத்துவிட்டார்! அதனால் இனி நீங்கள்தான் மானேஜர்'' அவர் சொல்லிவிட்டு நிமிர்ந்து பெருமையுடன் தன்னை ஏறிட்டு நோக்கிய போது, வியப்பாலும், வருத்தத்தாலும் வாயடைத்து திக்பிரமையுடன் சிலையாய் உட்கார்ந்திருந்தான் நாராயணன். மானேஜர் கிருஷ்ண மூர்த்தியின் பெருந்தன்மையை எண்ணியபோது அவரிடம் தான் இதுகாறும் கொண்டிருந்த தவறெண்ணத்தை நினைத்து அவனுக்குத் துயரம் உள்ளத்தை அழுத்தியது. தலை சுழன்றது. ஆனல் அவ்வளவு அன்பும், அனுதாபமும் அவர் தன்னிடம் வைத்திருப்பவரானல் அதை இத்தனை நாட்களாய் ஒரு கணம் கூட வெளிக் காட்டிக் கொள்ளாததேன்? என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. முதல் வேலையாகத் தன் நன்றியைத் தெரிவித்து அவருக்கு ஒரு கடிதம் எழுத வேண்டியது தன் கடமை!.... என்ற பரபரப்புடன் வீட்டுக்கு வந்த நாராயணனிடம் ஒரு கவரை நீட்டினர் அவன் தந்தை ஜகன்னுதன். கவரின் மேலிருந்த கையெழுத்தைப் பார்த்தவுடனேயே அது மானேஜர் கிருஷ்ண மூர்த்தியிடமிருந்து தான் வந்திருக்கிறதென்று புரிந்து கொண்ட அவன் மகிழ்ச்சியால் இரண்டே எட்டில் மாடிப் படிகளைத் தாவி மாடியை அடைந்து தன் அறைக்குச் சென்று கவரைக் கிழித்துக் கடிதத்தை எடுத்தான்!

அன்புக்குரிய (மானேஜர்)
நாராயணன் அவர்களுக்கு,

நீங்கள் நம்முடைய கம்பெனி முதலாளி சிவராஜிடமிருந்து எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். உங்களுடைய வேலைத் திறனையும், உண்மை உழைப்பையும் கண்டு காரியாலயத்திலுள்ள மற்றவர்களுக்கு உங்கள் மீது பொருமை ஏற்பட்டு அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றதும் எனக்கு உங்களை இன்னும் அதிகமாகப் பிடிக்க ஆரம்பித்தது. அதன் பயனகத் தான் உங்களை என் 'பர்ஸனல் அஸிஸ்டெண்'டாகப் போட்டுக் கொண்டேன். உங்களுடைய பயந்த அமரிக்கையான பொறுமை சுபாவம் எனக்கு ரொம்பவும் பிடித்தது. அதை சோதனை செய்து பார்க்க எத்தனையோ முறை உங்களை நீங்கள் நிரபராதி என்று தெரிந்தும் கண்டித்திருக்கிறேன்.

நம் கம்பெனியின் பிராஞ்சு ஒன்று பாம்பேயில் ஆரம்பித்தவுடனேயே அதற்கு முதலாளி சிவராஜ் அவர்கள், அங்கு மாற்றலாகிச் சென்று மானேஜராக அமர்ந்து அதன் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள முடியுமா என்று என்னைக் கேட்டார். நான் அங்கே போய் விட்டால் நம் காரியாலயத்துக்கு எனக்குப் பதில் வரும் புதிய மானேஜர் பொருமைக்கார காரியாலயத்தாரின் பேச்சை நம்பிக் கொண்டு உங்களை எப்படி நடத்

துவாரோ என்ற எண்ணத்தில் நான் போக மறுத்தேன். ஆனால் பிறகு யோசித்ததில் ஒரு நல்ல யோசனை உதயமாகியது. 'நான் இங்கு மானேஜராக இருந்துக்கொண்டிருந்தால் உங்களை முன்னேற்றி உயர்ந்த ஸ்தானத்தில் வைக்க வேண்டும் என்ற என் எண்ணம் நிறைவேறுமா?

எப்போதும் புகழ்ச்சியும் பாராட்டுதலும் முன்னேற்றத்துக்குத் தடைகள்; அது நம்மைப் பற்றி நாமே ரொம்பவும் அதிகமாக நினைத்துக் கொள்ளும்படியாகச் செய்து, உழைக்கவேண்டும்; உண்மையாக வேலை செய்ய வேண்டும் என்ற ஆசையை, எண்ணத்தைச் சிதற அடித்துப் பாழடித்து விடும். அத்துடன் என் வேலையையும் சேர்த்து உங்கள் தலையில் சுமத்தியது, எனக்குப் பின் என் ஸ்தானத்தில் நீங்கள் அமர்ந்தால், புதிதாக நிர்வகிக்க வேண்டியிருக்கும் அந்த பெரியதொரு பொருப்பிலும், வேலையிலும் திக்குத்திசை தெரியாமல் திண்டாடாமலிருக்கப் பழக்குவதற்காகத்தான்.

கிருஷ்ணமூர்த்தி.

கடிதத்தைப் படித்து முடித்த நாராயணன் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது. தன்னுடைய நன்றியைத் தெரிவித்து பதிலெழுதுவதற்காகப் பேனாவையும், காகிதத் தாளையும் எடுத்து வைத்துக் கொண்ட போது ஆனந்த மிகுதியில் அவன் கரங்கள் உணர்ச்சி வேகத்தில் நடுங்கின.

அபாய விளையாட்டு

அவர்கள் இருவரும் கடலில் கப்பலில் பிரயாணம் செய்து கொண்டே தர்க்கம் பண்ணினார்கள். ஒன்றைப்பற்றி அல்ல; பலகாரியம் பற்றி. ஒருவாறு அல்ல; பலவாறு. ஆனால் திடீரென்று ரெயின்ஸ், ''எழுச்சிதரக்கூடிய இந்தக் கடல் வெப்பம் உனக்குக்குளிர்ச்சிதருமென நினைக்கிறேன். ஆனால் நீ என்ன நினைக்கிறாய்? நாம் அந்தத் தீவைக் கடந்திருப்போமா?'' என்று கேட்டான்.

''கடந்திருப்போம் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் இந்த இரவில் நான் அதைப் பற்றி நிச்சயமாக சொல்ல முடியாது.

''ஏன்?'' என்பதுரெயின்சுக்கு ஆச்சரியக் கேள்வியாய் இருந்தது. அது அதிசயத்தையும் அதிகரித்தது. ஏனெனில் அந்தத் தீவைப் பற்றி பலர் பலவிதமாகச் சொன்னதை நினைக்கும்போது பீதிதான் ஏற்பட்டது அவனுக்கு.

''கனிபால் கூட கடவுளால் கைவிடப் பட்ட இந்தத் தீவிலே வசித்திருக்க மாட்டான், ஆனால் அது கப்பலோட்டிகளுக்கு எப்படி தான் பயம் தந்ததோ?'' என்று சொல்லி முடியுமுன்பே ''இன்று கப்பல் வழக்கமாகப் போவதைவிட வேகமாகப்போவதைக் கவனித்தாயா?'' என்றான் ரெயின்ஸ்.

''ஆம். அதோ அந்த மீன்களைப் பார்! அவைகளின் கண்கள் என்ருவது இப்படி இருந்ததோ! எனக்கு என்னவோ ஒரு மாதிரி இருக்கிறது. உண்மையில் இந்த இடம் பேய் வசிக்கும் இடமாகத்தான் இருக்கவேண்டும். நீ என்ன பயப்படவே இல்லையா? நம்மைச் சுற்றியுள்ள காற்று நஞ்சுள்ளதாகவே நான் நினைக்கிறேன். நீ சிரிக்கலாம்; நான் இப்படி பேசுகிறேன் என்று. நான் அப்படித்தான் உணர்கிறேன். உரைக்கவும் செய்கிறேன், அதோ தூரத்திலே காற்றே இல்லையே! அலை கூட அலம்பவில்லை, கண்ணடி மாதிரி காட்சி அளிக்கிறது! அப்படித்தானே! அங்கு நெருங்க நெருங்க என் மனமும் நொறுங்கிக் கொண்டே தான் போகிறது........''

''உன் கற்பனை அப்படி'' என்ருன் ரெயின்ஸ்.

''கற்பனையா! எனக்கா? கிடையாதப்பா. கப்பலோட்டிகளுக்கு ஆபத்தில் தான் எங்கும் இல்லாத ஊக்கம் வரும்; பயங்கர இடத்தைக் கடந்து விடுவோமோ என்ற பயம் என்னை ஆட்டுகிறது, ஏன்! வாட்டி வதைக்கவும் செய்கிறது. என்ருலும் வருகிறேன் ரெயின்ஸ் - இரவு வணக்கம்'' என்று விடை பெற்ருன். இரவு ரெயின்சுக்கும் எண்ணங்கள் இருண்டு கொண்டே தான் இருந்தன. அவன் நினைத்தான் இரவு இப்படி இருண்டு

மூலக் கதை :
ரிச்சார்டு கானல்

தமிழாக்கம் :
லா. பா. கோஸ்தா

இருக்கிறது. எண்ணமும் மருண்டு கிடக்கிறது. இந்நிலையில் கண் மூடாமலே தூங்கலாம் என்று.

திடீரென்று காரிருளிலே ஒரு சப்தம் கேட்டது. ஒரு தடவையாய் இருந்தாலும் பயந்திருக்க மாட்டான். ஆனல் திரும்ப திரும்ப இருட்டில் சப்தம் எங்கிருந்தோ கேட்ட வண்ணமாகவே இருந்தது. பயம்தான். தன்னேயே தைரியப் படுத்திக் கொள்வான். அந்நிலையில் வாயிலிருந்த சுங்கான் கீழே விழுந்தது, அவனேக் கண்டு நகைக்கும் பாவனையில். தூரத்தில் ஓர் வெளிச்சம் தெரிந்தது. அதைப் பார்த்து மன ஆறுதல் அடைந்தாலும், அலேகள் அவனே ஓங்கி ஓங்கி அறைந்த வண்ணமாகவே இருந்தன. படாத பாடு பட்டான். பலம்கொண்டமட்டும் கூவி அழைத்தான் துணேக்கு. விட்னிஇருந்தால்தானே! அவன் தான் அதற்குள் தூங்கிப்போய் விட்டானே! முன்பு தெரிந்த வெளிச்சம் கூட இப்போது தெரியவில்லே அவனுக்கு. அலேயின் அகோரத்தால் கப்பல் பட்ட பாடு அவன் பரிதாபத்தை விட பயங்கரமாய் இருந்தது. அங்கிருப்பது பயனில்லே என்று பயந்தவனுய் கீழே கடல் நீரில் பாய்ந்து சுடப்பட்ட சப்தம் வந்த திசை நோக்கி நீந்தி வந்தான். அப்பொழுது கடலின் கோர அலேகள் அவன் கோப அலேகளுடன் மோதி, போட்டி போட்டுக் கொண்டே இருந்தன. அவனும் நீந்தி கொண்டேதான் இருந்தான். அப்பொழுதும் அவன் ஒரு சப்தத்தைக் கேட்டான். அது முன் போன்ற சப்தமல்ல. அது ஒரு மிருகத்தின் சப்தம். ஆனல் என்ன மிருகம் என்று அவனல் அறிந்து கொள்ள முடியவில்லே. ஆராய்ச்சி செய்ய சமயமும் அதுஅல்ல. இன்னும் நீந்திக் கொண்டேதான் இருந்தான். மீண்டும் ஒரு துப்பாக்கி சப்தம் கேட்டது. கரைப் பக்கம்தான் என்று காட்டும் அறிகுறி பல கண்டான். ஆனந்தம் கொண்டான். கடல்தான் தன் நண்பன் என்று நினேத்து வாழ்வை நடத்தினனே அவனுக்கு இப்பொழுது அதுதான் விரோதி. விரோதியுடன் நீண்ட நேரம் போராட்டத்திற்குப் பின் கரை சேர்ந்து, சோர்ந்தவனுய் இருக்க, நித்திரா தேவி அவனே அரவணேத்துக் கொண்டாள்.

ரெயின்ஸ் கண்ணேத் திறந்து பார்க்கும் பொழுது சூரியன் உதவியால் பொழுது விடிந்து விட்டது என்று அறிந்து கொண்டான். நீண்ட நேரத் தூக்கம் அவனுக்கு மன நிம்மதியோடு தெம்பை அளித்தது. தென்றலின் உதவியோடு அந்தப் பக்கம் மனிதர் வசிக்க வேண்டும் என்று துப்பாக்கிச் சப்தத்தால் யூகித்தவனுய், வயிற்றுப் பசியை அடக்க எண்ணி நடந்தான். சற்று நேரத்தில் அவன் நடை தடுக்கப் பட்டது. காரணம் அங்கே ஒரு மிருகம் சுடப்பட்டுக் கிடந்ததைக் கண்டதால்! ஆறுதல் அடைந்தவனுய் பக்கத்தில் இருந்த பாறை உச்சி ஏறிப் பார்த்தான். அநேக விளக்குகள் தெரிந்தன. இந் நிலேயில் அவன் பய வினக்கு மறைந்தது. மறுமலர்ச்சி பெற்றவனுய் அத்திசை நோக்கி நடத்தான், அவனுக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது! அவை எல்லாம் ஒரு வீட்டின் விளக்குகள்தான்.

கதவு மூடித்தான் இருந்தது. கொண்டியை பிடித்து திறந்தான். முடியவில்லே, அப்பொழுது உள்ளே ஆள் நடமாடும் சப்தத்தை கேட்டான். பழைய படியும் கொண்டியைப் பலமாகத் திருகவே கதவு திறந்தது. உள்ளே சென்ருன். உடல் சிலிர்த்தது. அங்கே அவன் இதுநாள் வரை பாராத வளர்ந்த தாடியை உடைய உயர்ந்த மனிதன் நின்ருன்.

ஆனால் அவன் அங்கு சும்மா நிற்கவில்லை. ரெயின்ஸ் நெஞ்சைக் குறி பார்த்த வண்ணம் நின்றான். எனவே அவனுக்கு பயப்படாமல் இருக்க முடியவில்லை.! அந்த பயம் அவனை விட்டுப்பறந்தது. அவன் பார்த்த மனிதன் வெறும் சிலைதான் என்று அறிந்த பின். அதன் பின்னால் மனிதனைக் கண்டான். கண்டதும் ''நான் திருடனாய் இருந்தால்தானே அச்சப் பட வேண்டும்'' நானோ கடலிலே தப்பி வந்தவன். நியூயார்க் நகர ரெயின்ஸ் போர்டுதான் என் பெயர்'' என்றான்.

அவ்வார்த்தையை கேட்டதும் அந்த மனிதன் வாயால் பேசவில்லை. அனால் பட்டாளப் பாவனையில் பதில் தெரிவித்தவாறு பேசினான். இன்னொரு மனிதன் வந்தான் அவனும் வணங்கினான். முதல் மனிதன் சொன்னான் ''வேட்டையாடுவதில் நிபுணரான ரெயின்ஸ் போர்டை, ஜெனரல் சரூப் வரவேற்பதுமகிழ்ச்சியையும்பெருமையையும் தருவது'' என்று. மேலும் அவன் ''நான் நீங்கள் வேட்டையாடுவதைப் பற்றி எழுதிய புத்தகங்களையும் வாசித்திருக்கிறேன்'' என்றான். அங்கே அவை எல்லாம் ரெயின்சுக்கு நம்ப முடியாமலே இருந்தது.

சரூப் அழகாகத்தான் இருந்தான். அதற்கொன்றும் குறை

வில்லை. ஜெனரலுக்கு வேண்டிய அத்தனை தன்மையும் அவனிடம் அடங்கி இருந்தது. பருவ வயதைத் தாண்டியவன் தான் அவன். அவனது தலை மயிர் சற்று நரைத்தே இருந்தது. கண்புருவம் பார்ப்பதற்குக் கண்யமாகக் காட்சி அளித்தது. அவன் கண்கள் கருப்புத்தான் ஆனால் கண்பார்வை குன்ருதவன். அவன் மற்ருெருவனை ரெயின்சிடம் சுட்டிக் காட்டி "இவன் பெயர் ஐவன், மிகவும் நல்லவன் பலசாலியும் கூட. ஆனால் காட்டுமிராண்டி யாரோடு கலந்தவன். இப்பொழுது இவனுக்குக் காது கேட்காது. வாய் பேசவும் முடியாது" என்ருன்.

"இவன் ரஷ்யனா"?

"என்போன்று துருக்கிய நாட்டவன். ஆனால் ரஷ்யாவுக்கு அடிமைப்பட்டு பட்டாளத்தில் சேர்ந்தவன் .... சரி என்னேடு வாருங்கள். நீங்கள் வேண்டுவது உணவு, உடை, ஓய்வு, அவ்வளவுதானே? இந்த இடமே ஓய்வுக்காகத்தான இருக்கிறது. மிஸ்டர் ரெயின்ஸ் போர்டு, நீங்கள் வந்த பொழுதுதான் சாப்பிடலாம் என்று நினைத்தேன். இப்பொழுதுதான் என்ன? உங்களுக்காகக் காத்திருக்கிறேன், ஐவனுடன் சென்று, என் உடை உங்களுக்குச் சரியாய் இருக்குமென்று நினைக்கிறேன். அதை மாற்றி வருகிறீர்களா?" என்ருன் ஜெனரல்.

ஊமை உருவத்துடன் - இல்லை, பூதத்துடன் பின் தொடர்ந்த மாதிரி சென்ருன் ரெயின்ஸ். படுக்கையைப் பார்த்ததும் பயந்து விட்டான் ரெயின்ஸ். அத்தனை பெரியதாய் இருந்தது அது. ஐவன் அணிந்த உடை லண்டன் தையற்காரனல், பிரபுக்களுக்கு என்று நியமிக்கப்பட்டிருந்தவனல் தைக்கப்பட்டிருந்ததையும் கூர்ந்து கவனித்து விட்டான் ரெயின்ஸ். சாப்பாட்டு அறைக்கு அதன்பின் அழைத்துச் செல்லப்பட்டான். அரண்மனைதான் அது என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அது குற்றம் என்று நினைத்தான் அவன். ஆங்காங்கே அழகு படுத்தப்பட்டு பதிக்கப்பட்டிருந்தன. மிருகங்களின் தலைகள்.

சிற்றுண்டி சிறப்புற்ற முறையில் இருந்தும், ஜெனரல் குற்றம் குறைகள் இருந்தால் மன்னிக்க வேண்டுமென்று ரெயின்சைக் கேட்டுக் கொண்டான். அவனுக்கும் எல்லாம் பிடித்து இருந்தது. ஆனல் ஒன்று மட்டும் பிடிக்கவில்லை. எப்படி பிடிக்கும்? தான் சாப்பிட்டபொழுது தன்னையே ஜெனரல் கூர்ந்து நோக்குவது அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

"வேட்டையாடுவதைப் பற்றி நீங்கள் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்ய மொழிகளில் வெளியிட்ட எல்லாப் புத்தகங்களையும் வாசித்திருக்கிறேன், வாழ்க்கையிலே நான் விரும்புவது வேட்டை ஆடுவதுதான்."

"எனக்கு காட்டு எருமைகளுடன் வேட்டை யாடுவது தான் மிகவும் பயங்கரமாகத் தோன்றும்!"

கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் ஜெனரல் பேசவில்லை. ஆனல் புன்முறுவல் காட்டினன். அதன் பின் "அப்படி இல்லை, நீங்கள் நினைப்பது தவறு", என்று சொன்னவாறே ஒயினைக் கொஞ்சம் குடித்துக் கொண்டு மீண்டும் "நான் இந்தத் தீவிலே அதைவிடப் பயங்கரமான வேட்டை எல்லாம் ஆடி இருக்கிறேன்" என்ருன் ஜெனரல்.

"உண்மையாகவா?"

"ஆமாம்"

"புலிவேட்டையா?"

ஜெனரல் சிரித்தார். அந்தச் சிரிப்பு அவனை அலட்சியப்படுத்துவதாக இருந்தது. கொஞ்ச நாட்களுக்கு முன்பெல்லாம் புலிவேட்டை எனக்கு உற்சாகமாக இருந்தது. ஆனல் இப்பொழுதெல்லாம் அது புளித்து விட்டது. புலிவேட்டையில் அபாயம் ஒன்றுமில்லை, நானே பிறருக்கு அபாயமாய் இருக்கும் பொழுது அதெல்லாம் எனக்கு என்ன பிரமாதம்?" என்று சிகரட்டை நீட்டியவாறே "பின் நாம் அந்த வேட்டை ஆடலாமா?" என்று கேட்டான்.

"என்ன வேட்டை அது?"

"அதற்குள் என்ன ஆத்திரம்? நான் தான் சொல்லுவேனே! நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்" என்று ஒயினை இரண்டு கிளாசில் நிரப்பியபின் "கடவுள் சிலரைப் புலவராகவும், வேறு சிலரை அரசர்களாகவும், மற்றும் சிலரைப் பிச்சைக்காரர்களாகவும் உண்டாக்கி இருக்கிருர். என்னை வேட்டைக் காரனுக்கி விட்டார். எல்லா வேட்டையும் நான் பல பாகங்களில் ஆடி இருக்கிறேன். எவ்வளவு மிருகங்களைக் கொன்றிருக்கிறேன் என்பதும் அளவிட முடியாது. ஆனல் எனக்கு இப்பொழுது வெறுப்பாகவே இருக்கிறது. வேப்பங்காய் மாதிரி என்ருலும் ஒரு ஆவல் எனக்கு, புது மிருகத்தைக் கண்டு பிடித்து வேட்டையாட வேண்டும்" என்று.

"சிரிப்பாகத்தான் இருக்கிறது. புது மிருகமா கண்டு பிடிக்கப்போகிறீர்கள்?"

"வேடிக்கை அல்ல நான் சொல்வது. புது மிருகத்தைக் கண்டு பிடிப்பதற்காகவே நான் இந்த வீட்டை இங்கே கட்டினேன். அதனல் அந்த மிருகத்தையும் கண்டு பிடித்து விட்டேன்"

"ஜெனரல், எங்கே அந்த மிருகம்"?

"ஏன் ஆத்திரம்? நான் விரும்பும் மிருகத்திற்கு புத்தி மட்டும் அல்லாமல் தந்திரம், அது மட்டும் இருந்தால் போதாது, பகுத்தறிவும்இருக்க வேண்டும். அப்படிபட்ட மிருகம் தான் என் வேட்டைக்குத் தேவை"

"ஆனால் ஒரு மிருகத்திற்காவது பகுத்தறிவு கிடையாதே" என்று குறுக்கிட்டான்.

"பகுத்தறிவுள்ள மிருகம் ஒன்று உண்டு, அந்த மிருகத்திற்கு மட்டும்தான் பகுத்தறியும் தன்மை உண்டு" .... அது தான் —

"எனக்கு நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே ?

ஜெனரல் சிரித்தான் "இந்தக் காலத்திலுமா உனக்கு விளங்கவில்லை? படித்த உனக்கு விளங்க வில்லையா ? அமெரிக்கனை உனக்கு அது புரியவில்லை என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது ?"

"உண்மையிலே உணராததினால்தான் கேட்கிறேன்" என்றான் ரெயின்ஸ்.

"கேள்.! நன்றாகக் கேள்! கவனித்துக் கேள்! பலசாலிகளுக்குத்தான் உலகம். பல மற்றவர்கள் பலசாலிக்கு இன்பம் கொடுப்பதற்காகவே படைக்கப் பட்டிருக்கின்றார்கள். பின் நான் ஏன் அவற்றை உபயோகிக்கக் கூடாது? நான் வேட்டையாடுகிறேன், தப்பி இத்தீவுக்குத் தஞ்சமாய் வந்தவர்களை, வெள்ளையர்களை மட்டுமல்ல, கருப்பர், மங்கோலியர், ஜயினர்கள், அவர்களெல்லாம் பகுத்தறிவுள்ள மிருகங்கள் தானே! மனிதர் என்று நாம் சொல்லுகிறோம், ... நான் அவர்களை எல்லாம் ஏன் கொன்றேன் என்று நீகேட்கலாம், அதற்கு முன் நானே சொல்லி விடுகிறேன் சுருக்கமாக. பகுத்தறிவுள்ள மிருகங்கள் பயங்கரமானவை. எனவே நான் அவைகளைக் கொன்றேன். எனக்கு இன்பம் அளித்தது அந்த அபாய விளையாட்டு, அது தான் காரணம்."

"பேசுவது நாகரீகத்தைப் பற்றி; ஆனால் கொல்வது நாகரீகமடைந்த மனிதனை" ?

"ரெயின்ஸ் ஆத்திரம் ஏன் ? பகுத்தறிவுள்ளவர்களுக்குப் பகுத்தறிவால் தப்பிக்க முடியும். ஆனால் அப்படியும் முடியாவிட்டால்தானே! வந்தவர்களுக்கு உணவு கொடுத்தேன் ஆளாக்கினேன் ... ஏன் நான் அதை இப்பொழுது விரிவாகச் சொல்ல வேண்டும்? நீயே நாளைக்குப் பார்க்கப் போகிறாய்!"

"நீங்கள் கூறுவதின் அர்த்தம் ?

"அர்த்தம்தானே! எனது பயிற்சிப் பள்ளியைச் சந்தித்த பின் நான் கூறாமலே நீ புரிந்து கொள்வாய். பயிற்சி நேரத்திலே ஒருவனுக்கு வேண்டிய உணவும், வேட்டைக்கு வேண்டிய கத்தியும், மூன்றுமணி நேர அவகாசமும் கொடுக்கப்படும். பின் நான் தொடர்ந்து அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் நான் மட்டும் என்னோடு துப்பாக்கி எடுத்துச் செல்வேன். நான் மூன்று நாட்களுக்குள் அவனைக் கண்டு பிடிக்காவிட்டால் அந்த வேட்டையில் வெற்றி அவனுக்கு. ஆனால் நான் கண்டுபிடித்து விட்டால் அவனது உயிரைப் போக்கிவிடுவேன்."

"அவன் அந்த வேட்டைக்கு வர மறுத்தால் !"

"ஐவன்சிகிச்சைதான் அதற்கு சம்மதிக்க வைத்து விடுமே!"

"ஆமாம், அவர்கள் வெற்றியடைந்து விட்டால்?"

"இதுநாள் வரை நான் அந்த விளையாட்டில் தோல்வி அடையவே இல்லை. அவர்கள் வெற்றி அடையலாம். ஆனால் என்னிடமுள்ள நாய்கள் அவர்களை வெற்றியடையச் செய்வதில்லை" என்று சிரித்த முகத்துடன் சொன்னான்.

"இந்தவழியே வந்தால் அவற்றையும் எனது புத்தகசாலையும் காட்டுகிறேன்."

''என்னை மன்னித்து விடுங்கள், எனக்கு உடம்புக்கு நன்ருக இல்லை.''

''அலையாலே அலைக்கழிக்கப் பட்டவனுக்கு அயர்வாகத்தான் தெரியும். ஆனல் நானே என்னேடு நீதான் அந்த விளையாட்டுக்குத் தகுதியுள்ளவன் ....'' என்று சொல்லும் பொழுது மெதுவாக நகரப் பார்த்தான் ரெயின்ஸ். ஆனல் அவன் விட்ட பாடில்லை. ''என்னேடு தான் இருக்க வேண்டும்' என்ருன். இரவு ஆனபடியால் இரவு வணக்கம் சொன்ன பின் இருவரும் படுக்கச் சென்றனர்.

ரெயின்சுக்குத் தூக்கம் வரவில்லை. ஆனல் துக்கம் மேலிட்டது. வெளியே போய் விடலாம் என்ருல் கதவு பூட்டப்பட்டு விட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தால். எங்கேயோ ஓர் மூலையில் கோபுர உச்சியில் அவன் இருந்த அறை இருந்தது. விளக்குகள் அணைக்கப் பட்டிருந்தாலும் அணைக்கப் படாத பால் நிலவு வழியாக சில குறிப்பால் பலவற்றை அறிந்து கொண்டான். நிசப்தம் நிலவி இருந்தது வெளியில். ஆனல். சப்த நாடி சாதாரண நிலையில் அல்ல; அதற்கு மேற்பட்டே தான் இருந்தது. மீண்டும் படுக்கச் சென்ருன். ஆனல் அவனைப் பரிகாசிக்கும் தோரணையிலே பொழுது புலர்ந்து விட்டது. பாவம் ரெயின்ஸ்....!

விடிந்து வெகு நேரம் வரை ஜெனரல் வரவில்லை. வந்ததும் காரணம் பல காட்டினன். ரெயின்ஸ் உடனே போக வேண்டும் என்று கேட்டான் ரெயின்ஸ். ஆனல் ஜெனரலின் பதில் அவனை வேட்டைக்கு உடன் பட வைத்து விட்டது.

மூன்று மணி நேரத்திற்கு முன்பே ரெயின்ஸ் ஓட்டமும் நடையுமாக ஓடினன். ஓடும் பொழுதே ''தனக்குள் தைரியம் வேண்டும்'' என்று தைரியத்தை வரவழைத்துக் கொள்ளும் பாவனையில் சொல்லிக் கொண்டே மறைவதற்கு ஓடினன் ஓட்டமாக. திடீரென்று நிற்பான்! ஆனல் மீண்டும் ஓடுவான். பாதையை விட்டு விலகி பக்கத்தில் இருந்த பெரிய மரத்தில் ஏறி கிளையோடு ஒட்டியவனுய்ப் படுத்தான். பேயைத்தவிர வேறு யாராலும் தன்னைக் கண்டு பிடிக்க முடியாது என்று நினைத்தான் ஆனல் அதே நேரத்தில் ஜெனரலே பேயாய் இருந்தால் என்ற எண்ணம் அவனது ஊக்கத்தை உருக்கி விட்டது எரிக்கப் பட்ட மெழுகு வர்த்தியை போல்.

தூக்கம் அவனைச் சந்திக்க மறுத்தது. அடிப்பட்ட பாம்பு போல் அங்கலாய்த்தான். சற்று நேரத்திற்குள், பறவைகளின் பாட்டுகள் அவனுக்கு தாலாட்டாகத் தெரிந்தது. அந்தத்தாலாட்டு அவனைப்பாராட்டி இருக்கும் ஆனல் பகலவனுக்கு அது பிடிக்க வில்லை. அவன் தன் ஒளியை ஒழிக்காது காட்டி விட்டான், அப்பொழுது அடர்ந்த கொம்புகள் அவனைப் படர்ந்து இருந்தன. அதை சற்று நீக்கி விட்டுக் கூர்ந்து கவனித்தான், ஓர் மனிதன் வந்தான். சதாரண மனிதனல்ல, அது ஜெனரலே தான். தான் ஏறிய மரத்தின் பக்கத்தில் வந்ததும், நின்று விட்டது ஜெனரல்தான்; என்று அறிந்ததும் பயப்பட்டான். பயப்படாமல் இருக்க முடியாது. சந்தர்ப்பம் அப்படி. ஆனல் மூச்சை அடக்கிக் கொண்டான். ஜெனரல் தன்னைப் பார்த்தான் என்று அவன் சிரித்த சிரிப்பே அவன் தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. என்ருலும் ஜெனரல் பார்த்தும் பார்க்காதது போல் போனது. அத்தோடு அவன் சிரிப்பு. இவை எல்லாம் சேர்ந்து அவன் மனதைச் சோர்வடையச் செய்து விட்டது. ஏன் திரும்பி விட்டான் என்ற கேள்வி அவன் மனதில் கிள்ப்பிக் கொண்டே இருந்தது.

ஜெனரல் பூனே, ரெயின்ஸ் எலி என்ற முறையிலே அவர்கள் விளையாட்டு இருந்தது. மனதைத் தைரியப் படுத்திக் கொண்டேஓடினன். புதருக்குள் கொஞ்சத் தூரம் சென்று நின்ருன். ஒரு பெரிய மரம் அங்கே விழுந்து கிடந்தது. தனது கத்தியின் உதவியால் தந்திரமாய் ஜெனரல் அதிலே ஏறி வந்தால் விழும்படியான முறையில் பாதையின் குறுக்கே லேசான அணை கொடுத்து வைத்தான், பாலத்திற்குப் பதிலாக. ஜெனரல் வந்து ஏறியதும் அபாயத்தை அறிந்து குதித்து விட்டாலும், தோளிலே காயம் ஏற்பட்டது மரத்தின் அடியால், அப்படி அவன் குதித்திராவிட்டால் ஜெனரல் நசுக்கப்பட்டிருப்பான். ''ரெயின்ஸ் நீ பக்கத்தில் தான் மறைந்து இருக்கிருய் உன்னை வாழ்த்துகிறேன். மளாக்காவில் வேட்டையாடி பழகியுங்கூட இவ்வளவு உற்சாகத்தை யாரும் கொடுத்தது கிடையாது. காயம் பெரிதல்ல, சிறிதே தான். என்னைப் பொறுத்த மட்டில். மருந்து கட்டியபின் மீண்டும் வருவேன்'' என்று ஜெனரல் கர்ஜித்து விட்டுப் போய்விட்டான்.

ரெயின்ஸ் மீண்டும் ஓடினன். இல்லை பறந்தான்! அப்படி இருந்தது அவனது ஓட்டம். இருளிலே ஓடினன் இடம் தெரியாது. இப்பொழுது ஓட ஓட மெதுவாகவே இருந்தது. ஓடியே விட்டான். முயற்சித்தான் அவன் வெளிவர, முயன்று கொண்டே இருந்தான். அந்நேரத்தில் சாவு அவனை அரவணைத்துக் கொண்டே தான் இருந்தது. என்ருலும் இறுதி வெற்றி அவன் தான் அடைந்தான். அந்தயோசனைக்குப்பின் அவன் மூளை பிரமாதமாக வேலை செய்ய ஆரம்பித்தது. வந்த வழியே திரும்பிப் பாதையில் ஒரு குழி தோண்டி பொறி வைத்தான். அதன்பின் என்ன நடக்கப் போகிறது என்று பார்க்க ஆசையுள்ளவனுய்ப் பார்த்தான். கிளைகளை நீக்கியவாறு மூன்று அடி தூரத்தில் தான் ஜெனரல் நின்றவாறு, ''ரெயின்ஸ் நன்றி உனக்கு. உனது தந்திரத்திற்காக! மாலைப் பொழுதில் இவ்வளவு குதூகலம் அளித்தாயே! என்ருலும் உன் தந்திரம் என் நாய்களிடம் பலிக்காது என்பதை மட்டும் உன் ஞாபகத்தில் வைத்துக் கொள். ஓய்வு எடுத்தபின் மீண்டும் வருவேன்'' என்று கூறிவிட்டு போய்விட்டான் ஜெனரல்.

ரெயின்சுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. தற்கொலை செய்துக் கொள்ள நினைத்தான். ஆனல் அதைவிடப் பெரிய கேவலம் இல்லை என்று அந்த முயற்சியை விட்டு விட்டான். ஆவேசத்திற்குப் பின் அறிவு பிறந்தது. தந்திரம் வந்தது அவனுக்கு. ஒரு இளம் மரத்தை வளைத்துக் கட்டி அதில் கத்தியை சொருகி ஜெனரல் வரும் பாதையில் வைத்து விட்டு உயிருடன் போராடி கொண்டு ஓடினன். சிலநேரங்களில்நிற்பான், தன் நெஞ்சில் கை வைத்தவாறு, உயிர் இருக்கிறதா என்று பார்ப்பதற்கு. உயிர் இருப்பதாக உணர்ந்தவன் உணர்ச்சி மேலிட்டவனுய் மரத்தில் ஏறிப் பார்த்தான். பார்த்ததும் பரவசம் அடைந்தவனுன். காரணம் தன் கத்திக்கு ஐவன் இரையாகிக் கிடந்தான். ஆனல் அந்த ஆவேசத்தால் ஜெனரல் வேட்டை நாய்களுடன் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும், பயந்தவனுய் ஓடி கடலுக்குள்ளே சாடி விட்டான்.

வெற்றி வீரனுய் திரும்பினன் ஜெனரல். கடலுக்குள்ளே ரெயின்ஸ் மாண்டிருப்பான் என்று தீர்மானித்தான். குடிக்காரனைவிட அதிகமாக தன் பெருமையைப் புகழ்ந்தான். தன்தை

1972-2

நீரிழிவு

ஏழு நாட்களில் குணமாகும்

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள் சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். அதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறு நீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்கு பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் **இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.**

50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0

[பாக்கிங் தபாற் செலவும் இனம்]

வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (U. M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா.

யால் ரெயின்ஸ் சாகவடிக்க படவில்லையே என்ற எண்ணமும் ஐவனுக்குப் பதில் இனி யாரை வைப்பது என்ற துயரமும் அவனை வாட்டியது. என்றாலும் மது அவனை பாதிக்கவிடவில்லை. பின் வாசிப்புச் சாலைக்குச் சென்று மார்க் அவுரெலியரின் தீரச் செயல்களைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது மணி பத்து அடித்தது. எனவே படுக்கைக்கு சென்றான். பால் நிலவு இன்னும் தேய்ந்த நிலையில் காய்ந்து கொண்டேதான் இருந்தது. மேலிருந்தே கீழிருக்கும் வேட்டை நாய்களிடம் "இதை விட யோகம் இன்னும் ஒரு தடவை வரும்" என்று குதூகலத்துடன் கூவினான் ஜெனரல்.

அதன் பிறகு ஜெனரலின் வேட்டை வெறி ஓரேயடியாகத் தணியத் தொடங்கிற்று. எந்த அபாயகரமான விளையாட்டு அவனுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று கருதினானோ அது அப்பொழுது அவனுடைய தன்மானத்தையே பாதிப்பது போலத் தோன்றிற்று. தப்பிச் சென்றுவிட்ட ரெயின்ஸின் சாகஸம் அவனுக்கு பிரமிப்பை ஊட்டினாலும் தனக்கு ஏற்பட்ட தோல்வியை அவனால் தாங்க முடியவில்லை. சகிக்க இயலாத அந்த கோபமே அவனுடைய சக்தியை சிதற அடிக்கத் தொடங்கிற்று. அடிபட்ட சிங்கம்போல கடலோரத்தில் சதா உலாவிக்கொண்டிருப்பதை அந்தப் பக்கமாகக் கடலில் செல்லும் கப்பல் மாலுமிகள் பார்ப்பார்கள். ஆனால் சில நாட்களுக்குப் பின் அந்த கம்பீரமான தோற்றம் அந்தத் தீவிலேயே இருக்கவில்லை. அவன் எங்கே போனான் என்றே யாருக்கும் தெரியவில்லை.

ஆசிரியர், அச்சிட்டு வெளியிடுபவர்: ஜி. உமாபதி எம். சி., உமா பிரிண்டர்ஸ்,
4/32 நாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1: நிருவாக ஆசிரியர்: ர. சண்முகம்.

Vummidiars
STAINLESS STEEL
HOUSEHOLD UTENSILS

You can buy them with utmost confidence for they are backed by Vummidiars' reputation for superfine workmanship.

VUMMIDIARS Stainless Steel

Use **SHINO**

CLEANING COMPOUND
IDEAL FOR CLEANING
SILVERWARE,
STAINLESS STEELWARE ETC.

VUMMIDIARS (MFRS.) LTD., MADRAS-2

Edited, Printed and Published by G. Umapathy, M. C. at Uma Printers,
4/32. Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200